
[illegible] IL NADU
ARCHIVES AND [illegible] RESEARCH
1976
[illegible] MADRAS.



# திருக்கோயில்

ஜூலை 1976 ரு. 1

# மறவாதீர்கள்;

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்ருலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்ருல்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கிஞல் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்கு கின்ருேம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவ்ரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |



இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

(108)

**முகப்பு:** அருள்மிகு அபிராமியம்மை உடனுறை அமிர்தகடேசுவரர் கோயிலின் அழகிய தோற்றம்.

# திருக்கோயில்

மாலை: 19 | நள ஆண்டு—ஆடித் திங்கள் ஜூலை—1976 | மணி: 10

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
*அறநிலைய ஆட்சித் துறை,*
சென்னை—600 034

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறுது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

அருணகிரிநாதர் விழா
—திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,

இலக்கியங்களில் இமயமும் குமரியும்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

கைம்மாவின் உரியான்
—திரு. வி. சேகர், பி.எஸ்சி.,

முதலாழ்வார்கள் விளக்கிய முப்பெருந் தத்து[வங்கள்]
—திரு. தி. கோ. இராமானுசதாசர்

பில்ஹணஸ்தவம்
—திரு. பெ. திருஞானசம்பந்தம், எம்.ஏ., எல்.டி.,

கந்தபுராணம்
—திருமுருக. கிருபானந்தவாரியார்

அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ்
—திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

திருமந்திரமும் இன்றைய சமுதாயமும்
—திரு. கு. வரதராசபிள்ளை, பி. ஏ.,

மணி மொழிகள்
—திருமுருக. கிருபானந்தவாரியார்

சேக்கிழார் விளக்கும் தத்துவச் செந்நெறி
—ஆசிரியர்.

கைங்கரியச் செல்வம்
—ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகள்

அருள்மிகு வேண்டவராசி அம்மன்
—திரு. த. இராதாகிருஷ்ணன்

வாலி வழக்கு
—திரு. புரிசை. சு. முருகேச முதலியார்

கபிலர் பெருமான் கவித்திறன்
—திரு. செ. வேங்கடராமச் செட்டியார்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**

158615 N76-19.10

# அருணகிரிநாதர் விழா

திரு. M. K. பாலசுப்பிரமணியம், I.A.S.,
ஆணையர், அறநிலையத் துறை, சென்னை.

திருவண்ணாமலை பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று. திருவாரூரும் காஞ்சிபுரமும் பிருதிவித் தலம். திருவானைக்கா அப்புத்தலம். திருவண்ணாமலை தேயு (நெருப்பு)த் தலம். திருக்காளத்தி வாயுத் தலம். சிதம்பரம் ஆகாசத் தலம். திருவண்ணாமலை தேயுத்தலம் என்பது, இங்குள்ள பாறைகளை நிலநூலார் (Geologists), நெருப்புத்தன்மையுள்ள பாறைகள் (Igneous Rocks) என்று ஆராய்ந்து சொல்வதனாலும் தெளிவாகின்றது.

மேலும், ஒவ்வொரு தலத்திற்கு ஒவ்வொரு விசேடம் உண்டு. திருவாரூர் பிறக்க முத்தி தரும் தலம். ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்பது, சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம். காசி இறக்க முத்தி தரும் தலம். சிதம்பரம் தரிசிக்க முத்திதரும் தலம். திருவண்ணாமலையோ நினைத்த அளவிலேயே முத்தி தரும் தலமாகும்.

> '' துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்,
> துயர்ந்திடா தடைந்துகாண் மன்றும்,
> உவப்புடன் நிலைத்து மரிக்கும்ஓர் பதியும்
> ஒக்குமோ நினைக்கும்நின் நகரை?''

என்று, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் சோணசைலமாலையில், திருவண்ணாமலையின் சிறப்பை வியந்து போற்றுகின்றார்.

இத்தகைய திருவண்ணாமலையில், சமீப காலத்தில் ரமணமகரிஷிகள், சேஷாத்திரி சுவாமிகள் ஆகியோர் வாழ்ந்திருந்தனர். அதுபோல 600 ஆண்டுகளுக்கு முன்பு, அருணகிரிநாதர் என்னும் சிறந்த ஓர் அருளாளர் வாழ்ந்திருந்தார். செந்தமிழ்த் தெய்வமாகிய திருமுருகனின் திருவருளைப் பெற்று, திருப்புகழ் என்னும் தெய்விக நலம் செறிந்த அருமையான பாடல்களைப் பாடியவர் அருணகிரிநாதர்.

அருணகிரிநாதரின் அருமை பெருமைகளையும், அவர் அருளிச் செய்த திருப்புகழ்ப் பாடல்களையும் பற்றி அறியாதவர், தமிழ்நாட்டில் எவரும் இரார். அப்பெருந்தகையாரின் விழாவை, அவர் அவதரித்த தலமாகிய திருவண்ணாமலையில், நம் இந்திய தேசம் சுதந்தரம் பெற்ற புனித நன்னாளில் கொண்டாடிப்போற்றி வரும் அன்பர்களாகிய உங்களின், தொண்டும் பக்தியும் பண்பாடும், பெரிதும் போற்றத்தக்கனவாகும்.

அருணகிரிநாதரின் 600 ஆம் ஆண்டு விழாவினை, இந்திய நாடு முழுவதிலும் உள்ள முருக பக்தர்கள் சென்ற ஆண்டில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். நமது இந்திய அரசாங்கமும் அருணகிரிநாதரின் நினைவாகத் தபால்தலை வெளியிட்டுச் சிறப்பித்தது. எனினும், நமக்கு அருணகிரிநாதரின் வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் போதிய அளவு கிடைக்கவில்லை. ''Greatest men have shortest biographies'' என்பது, நம் அருணகிரிநாதர்க்கும் பொருந்தும்.

''அதலசேடனாராட'' எனத் தொடங்கும் திருப்புகழில், ''பிரபுடதேவமாராயன்'' என வரும் குறிப்பினால், இவர் விஜயநகர அரசர்களுள் ஒருவனாக விளங்கியிருந்த பிரபுடதேவராஜன் என்னும் மன்னனின் காலத்தில் இருந்தவர் என்பது தெரிகிறது. சரித்திர ஆசிரியர்கள் இம்மன்னன் கி.பி. 1450-இல் அரசாண்டதாகக் கல்வெட்டுக்களைக் கொண்டு ஆராய்ந்து கூறுகின்றனர்.

"Every saint has a past and every sinner has a future'' எனக் கூறுவர் அறிஞர்.

அதன்படி, அருணகிரிநாதரும் தமது சிறு வயதில், இன்பத்துறையில் உழன்றார் என்று, அவர்களுடைய பாடல்களால் தெரிகின்றது. இருப்பினும், அவர் முன்னைப் பிறவிகளில் செய்த தவங்களின் பயனாக, முருகப் பெருமானால் தடுத்து ஆட்கொள்ளப்பெற்றார். அடியவர்களை இருவகையினராக நூல்கள் சொல்வதுண்டு. ஒருசிலர் பன்னெடுங்காலம் முயன்று பக்தி செய்து தவங்கிடந்து பின்னர் அருளைப் பெறுவர். இவர்கள் சொரூபாசித்தர் எனப்படுவர். மற்றும் சிலரோ இப்பிறவியில் ஏதும் செய்திலராயினும், முன்பு செய்த புண்ணியங்களின் பயனாகச் சாதாரண நிலையில் இருந்து வரும்பொழுதே, திடீர் என்று இறைவனின் திருவருளைப் பெற்று மிக மேலானநிலை எய்துவதுண்டு. இவர்கள் கிருபாசித்தர்கள் எனப்படுவர். அருணகிரிநாதர் கிருபாசித்தர் என்னும்

திருவண்ணாமலையில், 14—8—'76 அன்று நிகழ்ந்த ''அருணகிரிநாதர் விழா''வில் ஆணையர் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.

வகையைச் சேர்ந்தவராவார். அவருக்குத் திடீ ரென்று முருகனின் திருவருள் கிடைத்தது. இதனை அவரே,

'' அறிவும் அறிதத்துவமும்
அபரிமித வித்தைகளும்
அறியென இமைப்பொழுதில்
வாழ்வித்த வேதியன் ''

என்று தமது திருவகுப்பில் பன்னிரண்டாம் பாடலில் முருகனைப் போற்றியிருப்பதனுல் தெரிகின்றது. முருகப்பெருமான் இவருக்கு இருந்த நோய்களைத் தீர்த்து, திருவண்ணுமலைக் கோயில் கோபுரத்தினின்று விழுந்து தற்கொலை செய்துகொள்ள முயன்ற இவரைத் தடுத்துக் காத்து ஆட்கொண்டதுடன் ''முத்தைத்தரு பத்தித்திருநகை'' எனத் தொடங்கும் திருப் புகழ் வரியை எடுத்துக் கொடுத்து, தம்மை இவர் எல்லாத் தலங்களுக்கும் சென்று பாடி வழிபட்டு வருமாறு அருள்செய்தான். இவ்வுண் மையை அருணகிரிநாதரே,

'' எழுமையும் எனைத்தனது
கழல்பரவு பக்தன்என
இனிதுகவி பாடிடப்
பிரசாதித்த காவலன் ''

என அருளிச் செய்திருப்பதனுல் நன்கு தெளி வாகின்றது. மேலும் முருகப் பெருமான் இவ ருக்கு வயலூர் விராலிமலை பழனி திருச்செந் தூர் முதலிய பற்பல தலங்களில் தனிச் சிறப் பாக அருள்செய்து கருணை புரிந்திருக்கின்ருர்.

அருணகிரிநாதரின் திருப்புகழ் சித்திர கவித்துவம் நிறைந்தது; வகைவகையான சந்த பேதங்கள் அமைந்து கேட்பதற்கே இனிமை யான சப்தநலம் மிகுதியாகப் பெற்றது. அத ஞல் அவர் பாடிய திருப்புகழ், அவர் காலத்தி லேயே நாடெங்கும் பரவிப் பெரிதும் போற்றப் பெற்றது. தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு ஆகிய எல்லாத் திசைகளில் உள்ளவரும் திருப் புகழைப் போற்றி மகிழ்ந்தனர். இத்தகைய திருப்புகழைப் பாடும்படி தமக்கு அருள்செய்த முருகப்பெருமானை, யான் எப்பொழுதும் மறக்க மாட்டேன் என்று அருணகிரிநாதர் தமது திருப் புகழில் குறிப்பிடுகின்ருர்.

'' பச்சிம தட்சிண உத்தர திக்குள
பக்தர்கள் அற்புதம் என ஓதும்
சித்திர கவித்துவ சத்தம் மிகுத்த
திருப்புகழைச் சிறிது அடியேனும்
செப்பென வைத்து உலகிற் பரவத்
தெரிசித்த அனுக்கிரகம் மறவேனே ''

என்பதனுல், திருப்புகழின் அருமை பெருமைகளை அருணகிரிநாதர் காலத்திலேயே, தமிழ் மக்கள் அற்புதம் அற்புதம் எனப் பாராட்டி மகிழ்ந்த னர் என்பது தெரிகின்றது.

திருப்புகழ் நம் செந்தமிழ் மொழியிலுள்ள கவிதை வகைகளிலேயே மிகவும் தனிச்சிறப் பான பெருமைகள் வாய்ந்தது. தாளநுட்பங் களும், சந்தபேதங்களும், மிக இனிமையான ஓசைநலங்களும், அழகிய பற்பல சொற்ருெடர் அடுக்குகளும் கொண்டது. அதனுல் அவற்றில் மனத்தைப் பறிகொடுத்து முருகபக்தர்கள் அனைவரும் அதனைப் பாடிப் பாடி மகிழ்வர். திருப்புகழ்பாடி முருகனை வழிபடுவது மிகச் சிறந்த ''நாத உபாசனை'' ஆகும்.

இன்று நாம் இங்கே சிறப்பாகக் கொண் டாடி வழிபடுகின்ற அருணகிரிநாதப் பெரு மானின் பெருமைக்கோர் எல்லையே இல்லை.

'' வாக்கிற்கு அருணகிரி வாதவூரர் கனிவில்;
தாக்கில் திருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நற்கீரர் தேவர்; நயத்திற்குச் சுந்தரனுர்
சொற்குறுதிக்கு அப்பர் எனச்சொல் ''

என்பதுபோல, வாக்கு வல்லமையில் அருணகிரி நாதர் மிகவும் சிறப்பு வாய்ந்தவர். அவருடைய அருள்வாக்குக்கு இணையான வாக்கு வேறு எதுவும் இல்லை என்பது பெரியோர்களின் கருத்து. அங்ஙனமே கருணைத்திறனிலும், நம் அருணகிரிநாதப் பெருமானுக்கு இணையாவார் எவருமிலர்.

'' காசுக்குக் கம்பன், கருணைக்கு அருணகிரி,
ஆசுக்குக் காளமுகில் ஆவானே—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன், உவக்கப் புகழேந்தி,
கூழுக்குஇங்கு ஔவைஎனக் கூறு ''

என்னும் பாடலில் ''கருணைக்கு அருணகிரி''— எனப் பெரியோர்கள் சிறப்பித்துப் பாராட்டி யிருத்தல் காணலாம்.

அருணகிரிநாதர், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, திருவகுப்பு என் னும் நூல்களை இயற்றியுள்ளார். வேதாந்த சித்தாந்த சமரச ஞானியாகிய தாயுமான சுவாமிகள்,

''ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்?''

என்று அருணகிரிநாதரை வியந்து புகழ்ந்து போற்றுகின்ருர். மேலும் அவர்,

'' கந்தர் அனுபூதி பெற்றுக்
கந்தர் அனுபூதி சொன்ன
எந்தை அருள் நாடி
இருக்கும்நாள் எந்நாளோ? ''

என்றெல்லாமும் அருணகிரிநாதரையும் அவர் அருளிய நூல்களையும் போற்றித் துதிக்கின்ருர். இவ்வளவு பெருமைமிக்க அருணகிரிநாதரின் விழாவை அன்பர்கள் கொண்டாடுவது பெரி தும் போற்றத்தக்க சிறந்த தொண்டாகும். இவ்விழா ஆண்டுதோறும் மேன்மேல் வளர்ந்து ஓங்க முருகன் திருவருளை வழுத்துவதுடன், இவ்விழாவில் கலந்து கொள்ள எனக்கும் ஒரு வாய்ப்பை அளித்த அன்பர்கள் அனைவருக்கும், என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கின்றேன்.

விழா சிறப்புற நிகழ்க !
அருணகிரிநாதரின் புகழ் மேன்மேல் ஓங்குக !!
திருப்புகழ்ப்பாடல்கள் எங்கும் பரவிவளர்க !!

0 0 0 0 0 0 0 0

# *இலக்கியங்களில் இமயமும் குமரியும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை

இமயமலையைப் பற்றிய பல குறிப்புக்கள் மிகப் பழங்காலந் தொட்டே அமிழ்தினும் இனிய நம் தமிழ் இலக்கியங்களில் ஆங்காங்கு விரவிக் காணப்படுகின்றன. ''இமயம் முதல் குமரி வரை'' என வழங்கி வரும் தொடர் மொழி, இன்று மட்டுமேயல்லாமல் தொன்று தொட்டே மக்களின் பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும், இனிது பயின்று வந்திருக்கின்றது.

(1) வரலாற்றுச் சிறப்பு மிக்க பழந்தமிழ் இலக்கியமாகத் திகழ்வது புறநானூறு. அதன் முதற்பாடல் முரஞ்சியூர்முடிநாகராயர் என்னும் முதுபெரும் புலவரால் பாடப்பெற்றது. பாரதப் பெரும்போரில் பஞ்சபாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் பெருஞ்சோறு வழங்கி உதவி செய்தான் ஒரு சேர அரசன். அதனுல் அவனுக்குப் ''பெருஞ்சோற்றுதியன் சேரலாதன்'' எனப் பெயர் வழங்குவதாயிற்று. அவ்வரசன் அங்ஙனம் பெருஞ்சோறு வழங்கியதனை,

''அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
—புறநானூறு

என்னும் புறநானூற்று வரிகள் உணர்த்துகின்றன. எனவே அவ்வரசன் பாரதப் போர் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்த பழந்தமிழ் வேந்தனுவான் என்பது பெறப்படும்.

அவ்வேந்தனை வாழ்த்த முற்படும் முரஞ்சியூர் முடிநாகராயர், ''பால் புளித்தாலும், பகல் இருண்டாலும், நான்கு வேதங்களின் நெறி மாறுபட்டாலும், நீ நல்ல அமைச்சர்களோடு, இமயமும் பொதியமும் போன்று அசைவு இல்லாமல், நடுக்கின்றி நெடுங்காலம் விளங்கி நலனுற வாழ்வாயாக'' எனக் குறிப்பிடுகின்றுர்

''நடுக்கின்றி நிலீஇயரோ அத்தை, அடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி அந்தணர் அருங்கடன் இறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே''
—புறநானூறு!

இதன்கண் இமயத்தினைப் ''பொற்கோட்டு இமயம்'' எனச் சிறப்பித்தும்; அதன்கண் அந்தணர்கள் (முனிவர்கள்) முத்தீ வேள்விகள் நிகழ்த்த, அவற்றை விளக்காகக் கொண்டு, மானினங்கள் யாதொரு கவலையும் துன்பமுமின்றி இன்பமாகத் துயிலுதலாகிய செய்தியைக் குறித்தும், அவர் பாடியிருத்தல்உணர்ந்து இன்புறுதற்குரியதாகும்.

(2) இமயமலையைத் தமிழ்மக்கள் பண்டைக் காலத்திலேயே நாட்டின் எல்லையாக நயந்து போற்றியுள்ளனர். இமம் என்பது பனியைக் குறிக்கும். எனவே இமயம் என்பது ''பனிமலை'' எனத் தமிழில் வழங்கப்படும். நம் நாட்டிற்கு வடக்கெல்லை இமயம், தெற்கெல்லை குமரி (குமரியாறு) எனவும், கிழக்கு மேற்குகளில் எல்லை கடல் எனவும், பழந்தமிழ் மக்கள் பரந்தமனப்பான்மையுடன் கருதி வந்துள்ளனர்.

''வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனுஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணுஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பவ்வத்தின் குடக்கும்''
—புறநானூறு, 6

எனவரும் புறநானூற்றுப் பாடற் பகுதி, இவ்வுண்மையை உணர்த்தும். இதனுல் இந்தியா என்னும் பெயரால் இன்று வழங்கி வரும் நாட்டின் பரப்பு முழுவதும், ஒரு பகுதியாகவே கருதப் பெற்றமையினை உணரலாம்.

(3) இவ்வுண்மையினைப் பின்வரும் பாடற் பகுதியும் வலியுறுத்துகின்றது. ''யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை'' என்னும் சேர வேந்தனைக் குறுங்கோழியூர் கிழார் என்னும் சங்ககாலப் புலவர் ''தென்றிசைக்கட் குமரியும், வடதிசைக்கண் இமயமும், கீழ்மேல் திசைகளில் கடலும் எல்லையாக, நடுவுபட்டு விளங்கும் நாட்டிலுள்ளோர் ஒரு பெற்றிப்பட்டு வழிபாடு கூற, நிலம் முழுவதையும் ஆண்ட அரசர்களின் மரபைக் காத்தவனே'' எனப் புகழ்ந்து போற்றுகின்றுர்.

''தென்குமரி வடபெருங்கல்
குணகுடகடல் ஆஎல்லை
குன்றுமலை காடுநாடு
ஒன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோல்திருத்திப்
படுவதுண்டு பகல்ஆற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல!''
—புறநானூறு, 17

(4) தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்களுள் 'ஆய் அண்டிரன்' என்பவன் ஒருவன். அவ் வள்ளலைப் புகழ்ந்து போற்றும் பாடல்கள் பல புறநானூற்றில் உள்ளன. ''நரந்தையையும் நறுமணம் மிக்க புல்லையும் மேய்ந்த கவரிமான்: குவளைப் பூவையுடைய இனிய சுனையின் நீரைப்

*தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்கள் தொடங்கி வைக்க, டாக்டர் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் அவர்கள் தலைமையில், சென்னைத் ''தேசிய இலக்கிய மன்றத்தினர்'' கொண்டாடிய ''தேசிய ஒருமைப்பாடு விழா''வினையொட்டி, ''இமயமும் குமரியும்'' என்னும் தலைப்பில் நிகழ்ந்த கருத்தரங்கத்தினைத் தழுவி, இக் கட்டுரை வெளியிடப்பெறுகின்றது. [17-7-76] —ஆசிரியர்

பருகி, அதனை அடுத்துள்ள தகர மரத்தினது குளிர்ந்த நிழலின்கண், தனது துணையாகிய பிணை மானுடன் பொருந்தி வாழும் வளஞ்சிறந்து, வானளாவி நிற்கும் இமயமலை வடதிசைக்கண் உள்ளது. அதற்கு ஏற்பத் தென்றிசைக்கண் 'ஆய்அண்டிரன்' என்னும் வள்ளலின் பெருங் குடி நிலைபெற்று விளங்குகின்றது. இல்லையேல், இந்நிலவுலகம் நிலைபிறழ்ந்து கீழ்மேல தாகிக் கெடும்'' என உறையூர் ஏணிச்சேரி முடமோசி யார் பாடுகின்றார்.

''நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி
குவளைப் பைஞ்சுனை பருகி, அயல
தகரத் தண்ணிழற் பிணையொடு வதியும்
வடதிசை யதுவே வான்தோய் இமயம்!
தென்றிசை ஆஅய்குடி இன்றாயிற்
பிறழ்வது மன்னேஇம் மலர்தலை யுலகே''

—புறநானூறு, 132

(5) ஒருவரை மற்றொருவர் உளமுவந்து வாழ்த்தும் முறைகள் பலவகைப்படும். அம் முறைகள் அனைத்தினையும் புறநானூற்றிற் காணலாம். அவற்றுள் நீ 'இமயமலை போல நீடினிது நிலைபெற்று வாழ்க' என்பதும் ஒன்று. இதனை,

''கழைவளர் இமயம் போல
நிலீஇயர் அத்தைநீ நிலமிசை யானே''

—புறநானூறு, 166

எனக் கவுணியன் விண்ணந்தாயன் என்பவனை, ஆவூர் மூலங்கிழார் பாடியது கொண்டு தெளிய லாம்.

(6) இவ்வாறே, ''உலகத்திற் பிறந்த ஒவ்வொருவரும் புகழ்பெறல் வேண்டும். அப்புகழ்தானும் இமயமலையின் சிகரங்கள் எங்ஙனம் ஈடும் எடுப்பும் அற்றுத் திகழ்கின்ற னவோ, அங்ஙனம் மிக உயர்ந்த புகழாக அமைதல் வேண்டும். அத்தகைய சிறந்த புக ழினை உலகில் நிலைநாட்டி விட்டு, அதன்பின் ஒருவன் இறந்துபோதல் தலைசிறந்தது'' என் னும் கருத்தமைய :

''..........இமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்இசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே''

—புறநானூறு, 264

எனக் கோப்பெருஞ்சோழன் என்னும் பேரரசன் உலக மக்களுக்கு அறிவுரை (பொருள்மொழிக் காஞ்சி) கூறுகின்றான்.

(7) இமயமலையின் சிகரங்கள் பொன்மய மாக ஒளிமிகுந்து, பேரழகுடன் திகழும் தன்மை யன. ஆதலின் பண்டைச் சங்க காலப் புல வர்கள் இமயமலையினைப் ''பொற்கோட்டு இமயம்'' என்னும் அடைமொழி கொடுத்து வியந்து புகழ்ந்தோதுவர். பரணர் எனப்புகழ் பெற்ற பண்டைச் சங்ககாலப் புலவர், இக் கருத்தினை வலியுறுத்தும் வகையில், ஓர் அழகிய உவமையினை அமைத்துப் பாடியுள்ளார். 'கடல் பிறக்கு ஓட்டிய வேல்கெழுகுட்டுவன்' என்னும் சேரவேந்தனை, 'மறக்கள வழி' என்னும் புறப் பொருளின் துறை அமைய 'ஏர்க்கள உருவகம்' செய்து பரணர் பாடுகின்றார். நல்லபெரிய சிறந்த யானைக்குப் பொன்னால் இயன்ற அழகிய நெற்றிப் பட்டம் (ஓடை) அணியப்பட்டுள்ளது. அந்நிலையில் அவ்வானையை இமயம் ஆகவும், பொன்னோடை அணியப் பெற்ற அதன்மத்தகத் தினைப் பொன் மயமாக ஒளிவீசித் திகழும் இமய மலையின் சிகரங்கள் ஆகவும், அவர் கற்பனை செய்து காண்கின்றார். இமயமலையில் அருவிகள் விழுதல்போல, யானையினிடமிருந்தும் மதநீர் சுரந்து பாய்ந்து, அவர்தம் அரிய கற்பனைக்கு ஆக்கம் அளிக்கின்றது.

''எழிலி தோயும் இமிழ்இசை அருவிப்
பொன்னுடை நெடுங்கோட்டு இமயத் தன்ன
ஓடை நுதல ஒல்குதல் அறியா....வேழம்''

## பதிற்றுப் பத்து

(8) புறநானூற்றைப் போலவே, வர லாற்றுத் துறைக்கு மிகவும் பயன்படுவது 'பதிற் றுப்பத்து' என்னும் சங்கநூல். அது சேரநாட்டு அரசர்களின் பழைய வரலாற்றினை அறிதற்குக் கருவியாகத் திகழும் கவிதை நூல் ஆகும். அதன்கண்ணும் இமயத்தைப் பற்றிய குறிப்புக் குக்கள் பல அமைந்து காணப்படுகின்றன.

சேர அரசர்களில் ''இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்'' என்பவன் ஒருவன். 'நெடுஞ்சேரல் ஆதன்' என்பது அவனது இயற் பெயர். 'இமயவரம்பன்' என்பது அவனது சிறப்பை யுணர்த்தும் பெயர். அக்கால முறைப் படி அவ்வரசன் 'திக்கு விசயம்' செய்து, இமயம் வரை சென்று வெற்றிபெற்றுத் திரும்பியவனுக விளங்கியிருத்தல் கூடும். பெருவீரனுகப் பிறங் கிய அவ்வரசன் யானையின் மீது அமர்ந்து போருக்குப் புறப்பட்டு, இமயம் முதல் குமரி வரை எல்லா அரசர்களையும் வென்று புறங் கண்டு போந்த தன்மை, முருகப் பெருமான் 'பிணிமுகம்' என்னும் தம் யானை யூர்தியின்மீது எழுந்தருளிச் சூரபதுமன் முதலிய அவுணர்களை யெல்லாம் அழித்தருளிய செயல்போன்று இருந் தது. இதனை

''அணங்குடை அவுணர் ஏமம் புணர்க்கும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந்தாங்கு
கவிர்ததை சிலம்பில் துஞ்சும் கவரி
பரந்திலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்அம் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறம்தபக் கடந்தே
பலர்புகழ் செல்வம் இனிதுகண் டிகுமே!''

—பதிற்றுப்பத்து,''

எனக் குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் குறிப்பிட்டுப் புகழ்ந்து பாடி இருத்தல் காண லாம்.

(9) இதனால், இமய மலையானது நல்ல தவ முனிவர்கள் வாழும் சிறப்புடையது என்ப தும்; அம்முனிவர்களின் தவவலிமை மிக்க ஆணையால் முருக்கு என்னும் முள்ளுடையமர மும், ஏனைய பிற விலங்குகளும், மக்களும் தமக்கு யாதொரு வருத்தமும் விளைவிக்கமாட்டாத நிலை யில், பகற்காலத்துத் தாம் நுகர்ந்த அருவியை யும் நரந்தம் புல்லையுமே கனவினும் கண்டு, கவரிமான்கள் அங்குக் கவலையின்றி இன்பமுற்று

வாழ்ந்துவரும் என்பதும், 'இமயம் முதல் குமரி வரை' என்னும் வழக்காறு மிகமிகப் பழங் காலத்திலேயே தமிழகத்தில் நிலவி வந்தது என்பதும் பிறவும், புலனுகா நிற்கும்.

''வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னம் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போர்அடு தானைப் பொலந்தார்க் குட்டுவ''

—பதிற்றுப்பத்து

எனவரும் பதிற்றுப்பத்து நூலின் பிறிதொரு பாடற் பகுதியும், இமயம்குமரி என்பன முறையே வடக்கெல்லை தெற்கெல்லைகளாக விளங்கிய செய்தியினை வலியுறுத்தும்.

### பரிபாடல்

*(10)* இமயமலை முனிவர்கள் மட்டுமே யன்றித் திருமால் சிவபிரான் பிரமதேவர் துவாதசாதித்தர், ஏகாதசருத்திரர், அஷ்ட வசுக்கள், எட்டுத்திக்குப் பாலகர்கள், மருத்துவர் இருவர், சுரர் அசுரர் ஆகிய பலரும் கூடி யுறை யும் பெருமை யுடையது. இதனைப் பரிபாடல் என்னும் சங்கநூல் 'திருப்பரங்குன்றம்' என் னும் முருகனது தலத்தைப் பற்றிய பாடலிற் குறிப்பிடுகின்றது. திருப்பரங்குன்றம் முருகப் பெருமான் தெய்வயானையை மணம் புரிந்து கொண்டு மகிழ்ந்த தலம் ஆகும். அதனுல் அங்கே எல்லாத் தேவர்களும் ஒருங்கு கூடி யுறைகின்றனர். ஆதலின் ''பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்'' எனப் பரிபாடல் பாடுகின் றது.

### பெரும்பாணுற்றுப்படை

*(11)* பத்துப்பாட்டு என்னும் தொகை நூலைச் சேர்ந்தது பெரும்பாணுற்றுப்படை. அது 'கடியலூர் உருத்திரங் கண்ணனுர்' என் னும் புலவரால், தொண்டைமான் இளந்திரை யன் என்னும் அரசனைக் குறித்துப் பாடப்பெற் றது. அவ்வரசனின் முற்றத்திற் சிற்றரசர்கள் பலர் ஒருவரோடு ஒருவர் இகலி முந்திக்கொண்டு திறை செலுத்துதற் பொருட்டுச் செவ்வி நோக் கிக் காத்துக் கொண்டிருக்கின்றனராம். எது போல என்னில், இமயமலையினின்று இழிந்து பெருகிவரும் கங்கையாற்றின் வெள்ளம் கண்டு அஞ்சித் தப்பியோட முயலும் மக்கள், தம்மைக் கரையிற்கொண்டுபோய் உய்த்துக் காப்பாற்று தற்கு உதவுகின்ற ஒரேஒரு மரத் தெப்பத்தில் இடம் பெறுதற்பொருட்டு, எங்ஙனம் போட்டி யிட்டு முந்திக்கொள்ளக் காத்துக் கிடப்பரோ, அதுபோல என்கின்றுர் உருத்திரங் கண்ணனுர். ''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை'' எனத் தொல்காப்பியனுர் பணித்தவாறு, வேறு எதனை யும் உவமையாகக் கூருமல் உயர்ந்ததாகிய இமயமலையையும், கங்கையாற்றையுமே உருத் திரங் கண்ணனுர் நினைவுகூர்ந்து உவமை கூறி யிருத்தல் உணர்ந்து மகிழ்தற் குரியது.

''நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோரும்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோரும்
கல்வீழ் அருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்,
இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகும் இரியல் மாக்கள்
ஒருமரப் பாணியில் தூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு
செவ்வி பார்க்கும் திருநகர் முற்றம்''

—பெரும்பாண், 429-439

### கலித்தொகை

*(12)* சங்ககாலப் புலவர்களில் மிகவும் தலை சிறந்தவர் கபிலர் என்பர். இலக்கண நூல் களில் ஆங்காங்குக் 'கபிலரது பாட்டு' என்னும் தொடர், ஆறும் வேற்றுமைச் செய்யுட் கிழ மைக்கு உதாரணம் ஆகக் காட்டப் பெறும். அதனுல் கபிலரது பாட்டின் சிறப்பை யாவரும் இனையதென எண்ணித் தெளியலாம். கபிலர் குறிஞ்சித்திணை (மலை நிலம்) பற்றிப் பாடுதலில் வல்லவர். அவர்தம் பாடல் ஒன்றில், பின்வரும் சுவைமிக்க கருத்துக் காணப்படுகிறது.

மலைநிலப் பகுதியில் வேங்கை மரங்களும், யானைகளும் மிகுந்திருக்கும். அஃது இயல்பு என்று யாவரும் உணர்வர். வேங்கை மரம் அழகிய பூக்களைப் பூத்துப் பொலிந்து விளங்கி யது. அக்காட்சி, மதநீர் பெருகும் வலிமைச் செருக்குமிக்க யானையொன்றிற்கு, அவ்வேங்கை மரத்தினை வேங்கைப் புலி என எண்ணிக்கொள் ளும் நிலையினை விளைவித்தது. புலியும் யானையும் தம்முட் பகையுடையனவாய்ப் பொருதுகொள் ளும் வலிமையும் இயல்பும் கொண்டவை யாத லின், யானையானது கறுவு கொண்டு ஓடிச் சென்று வேங்கைமரத்தின் மீது மோதிப் பாய்ந்து தந்தங்களால் முட்டியது. தந்தங் களின் கூர்மையாலும் வலிமையாலும், அவைகள் வேங்கை மரத்தினுள்ளே ஆழப் பதிந்துவிட்டன. அதனுல் எவ்வளவு முயன்று இழுத்துப் பார்த்தும், பசிய வேங்கைமரத்தி னுட் பாய்ந்துவிட்ட தன் தந்தங்களை மீண்டும் தன்பால் ஈர்த்துக் கொள்ள முடியவில்லை. அந் நிலையில் அவ்யானை செய்வது அறியாது பிளிறிக் கதறி வருந்துகின்றது. இங்ஙனம் அக் களிறு பிளிறும் ஓசை, மலைப் பக்கங்களிலெல் லாம் எதிரொலித்து நிற்கிறது. இம்மலைநிலக் காட்சி, இராவணன் செருக்குக்கொண்டு இமய மலையைப் பெயர்த் தெடுத்தெறிய முற்பட்டுச் சென்று, சிவபிரான் தம்திருவிரலால் மிதிப்பப் பின்னர் அதன்கீழ் அகப்பட்டுக்கொண்டு நசுக் குண்டு அலறிக்கதறி அழுத நிலையினைக் கபி லர்க்கு நினைவூட்டியது. கபிலர் தாம்கண்ட காட்சியையும், அதனுல் கொண்ட அரிய நினை வினையும், பின்வரும் பாடலால் நமக்கு விளக்கி யுள்ளார்.

''இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தனன் ஆக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல,
உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடர்அகம் சிலம்பக் கூய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாடகேள்''

—கலித்தொகை, 38

#### சிலப்பதிகாரம் :

(13) செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஆகிய சிலப்பதிகாரம் பற்றியும், அதனை இயற்றியருளிய அரும்பெறல் ஆசிரியர் ஆகிய இளங்கோ அடிகள் பற்றியும், அறியாதார் எவரும் தமிழ்நாட்டில் இரார். கோவலனும் கண்ணகியும் மாதவியும் வாழ்ந்த பூம்புகார் நகரம் பற்றிப் பாடவரும் இளங்கோ அடிகள், அந்நகரம் பொதியமலையும் இமயமலையும் போலப் பழமை வாய்ந்தது. வளம் மிகுந்தது. நடுக்கின்றி நிலை பெறுவது. உயர்ந்த பெருமக்கள் மிகுதியாக வாழ்வது எனப்புகழ்ந்து போற்றுகின்றார்.

''பொதியில் ஆயினும் இமயம் ஆயினும்,
பதிஎழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்,
நடுக்கின்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே''

—மங்கலவாழ்த்து.

கோவலனும் கண்ணகியும் மதுரை நோக்கிச் செல்கின்றனர். வழியில் மறையோன் ஒருவனைச் சந்திக்கின்றனர். அவனது கூற்றில் வைத்துச் சேரர் மரபைச் சேர்ந்த இளங்கோ அடிகள், பாண்டிய வேந்தர்களின் பண்பு நலங்களைப் பாராட்டி, நடுவுநிலைமையுடன் புகழ்ந்து பாடுகின்றார். வடிம்பலம்பநின்ற பாண்டியன் என்பவன், கடல் கோள் காரணமாகத் தன்னுடைய நாட்டின் பரப்பில் இழக்க நேர்ந்த முத்தூர்க் கூற்றம், குண்டூர்க் கூற்றம் (பஃறுளி ஆறு-குமரிமலை) ஆகியவற்றிற்கு ஈடு செய்து கொள்ளுதற் பொருட்டு, வடதிசைக் கங்கையாற்றையும், இமய மலையையும் கைக்கொண்டு அரசாண்டான். இச்செய்தியினை,

''அடியிற் றன்னளவு அரசர்க்கு உணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி''

—காடுகாண் காதை

என இளங்கோவடிகள் பாடியிருத்தல் அறிந்து இன்புறற்பாலது. இங்ஙனமே செங்குட்டுவனின் தந்தை ''குமரியொடு வடஇமயத்து ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரலாதன்' என்பதும், பிறவும் ஆகிய செய்திகளைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. இங்ஙனமே நற்றிணை (365, 369) முதலிய நூல்கள் கூறுவனவும் ஈண்டு அறிதற்குரியன.

#### பெரியபுராணம் :

(14) செந்தமிழ் நாட்டின் தலை சிறந்த ''தேசீய காவியம்'' எனத் திகழும் தெய்விகப் பெருநூல் ஆகிய பெரியபுராணம், இமயமலை பற்றித் ''திருமலைச்சிறப்பு'' என்னும் பகுதியில் தொடக்கத்திலேயே விளக்குகின்றது. ''பொன்னின் வெண் திரு நீறு புனைந்தது போல'' இமயம் ஆகிய ''பனிமால் வரை'' திகழ்கின்றது. மேலும் அது ''புண்ணியம் திரண்டுள்ளது'' போலப் பொலிகின்றது. உலகம் என்னும் மணிக்கொடியில், ஏனைய எல்லாத் தலங்களும் தளிர்கள் போல இருப்ப, இமயமலையானது அக்கொடியின்மேற் பூத்துப் பொலிகின்ற ஒப்புயர்வற்ற வெண் மலர் போல விளங்குகின்றது. இமயமலையின் ஒரு பகுதியாகவே கயிலைத் திருமாமலை காட்சி தருகின்றது. அக்கயிலையாகிய வெள்ளிவெற்பின்மேல்தான், சிவபிரான் உமாதேவியாருடன் வீற்றிருந்தருள்கின்றான். அக்கயிலைக் காட்சியைத் திருநாவுக்கரசர் கண்டு மகிழ்ந்தார்.

#### மூவண்ணக் காட்சி :

(15) அக்காட்சியில் மூவகை வண்ணங்கள் திருநாவுக்கரசர்க்குத் தெரிந்தன. கயிலை (வெண்மை), உமாதேவியார் (பசுமை), சிவபிரான் (செம்மை).

''வெள்ளி வெற்பின்மேல் மரகதக்
கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவள
வெற்பென இடப்பாகம்
கொள்ளும் மாமலை யாளுடன்
கூட வீற்றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர்
வாக்கின் மன்னவனர்''

எனச் சேக்கிழார், திருநாவுக்கரசர் திருக்கயிலையிற் கண்ட மூவண்ணக் காட்சியினை அழகுற விளக்கியருள்கின்றார். இதுபோது நாமும் நம் இந்தியத்தாய்த் திருநாட்டிற்குரிய தேசியக் கொடியின் ( National Flag ) மூவண்ணக் காட்சியினையே, இமய மால்வரையில் என்றென்றும் காண விரும்புகின்றோம். சேக்கிழார் பெருமானின் திருப்பாடல், அவ்வுணர்வினையே ஒரு வகையில் நம்பாற் சிறப்புறத் தூண்டி எழுப்பி வளர்க்கத் துணை புரிகின்றது.

#### சுந்தரர் தேவாரம் :

(16) இமயமலை அல்லது கயிலாயம் ''நொடித்தான்மலை'' எனவும் பெயர்பெறும். நொடித்தல்-அழித்தல். நொடித்தான்-அழிப்பவன், சம்ஹாரஹாரமூர்த்தி, உருத்திரன், சிவபிரான். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் ''திருநொடித்தான் மலைத் திருப்பதிகம்'' என ஒன்று இருத்தல் காணலாம். தீமைகளை எல்லாம் அழித்து நலம் விளைப்பவன் சிவபெருமான். எனவே, அப்பெருமானுக்கு ''நொடித்தான்'' என்பதும் ஒரு பெயர். இமயமலையின்கண் உள்ள திருக்கயிலாயத் தலம் பற்றி, அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் தேவார ஆசிரியர்கள் மூவரும், திருப்பதிகங்கள் பல பாடியிருத்தலும், இங்கு நாம் சிந்தித்து இன்புறுதற்குரியது.

#### முடிவுரை :

இங்ஙனம், நம் இலக்கியங்களில் இமயமும் குமரியும் பற்றி ஆங்காங்குவரும் செய்திகள் பலவும், நம்மனோர் நன்கினிது உணர்ந்து சுவைத்து மகிழ்ந்து பயன்பெறுதற்குரியன ஆகும்.

''மன்னும் இமயமலை எங்கள்மலையே
மாநிலம் மீதுஇது போற்பிறிது இலையே''

''நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
நித்தம் தவம்செய் குமரி எல்லை''

—பாரதியார்

0 0 0 0 0 0 0 0 0

# கைம்மாவின் உரியான்

திரு. வி. சேகர், B. Sc.,

''வாயே வாழ்த்து கண்டாய் மத
யானை யுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும்பிரான் தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்''.

—திருநாவுக்கரசர் (தேவாரம்)

எல்லா உலகமும் எல்லா உயிர்களும் தாமே ஆகி, ஆதி அந்தமின்றி ஞானச்சுடர் விளக்காய்த் திகழ்பவன் சிவபெருமான். தமதடியார் பால் பெற்ற தாயினுமினியனாக விளங்கும் அப் பெருமானே, தீயோரை அடக்கி நல்லறிவு புகட்டி அருள்பாலிக்கிறான். உமையஞ்சக் கயிலை மலையை எடுத்த இராவணனது தலையும் தோளும் பொன்ற விரலூன்றிய ஈசனே அவ் வரக்கனது துதிக்கிரங்கி அவனுக்குத் தேரொடு வாளும் நாளும் 'இராவணன்' என்ற நாமமும் ஈந்தான். முப்புரங்களை எரித்தபோது, தஞ்சமென உய்ந்த மூவரில் இருவரைத் தனது திருக்கோயிலின் வாயிற்காப்பாளராகவும், ஒருவனைத் தனது நடனத்தின்போது மணி முழா முழக்கவும் அருள் செய்தான்.

இன்னோரன்ன பெருமையுடைத்தாய்த் திகழும் பரம்பொருளை மதியாது, தமது தவ வலிமையாலனைத்தையும் சாதிக்க இயலுமெனச் செருக்குடன் இறுமாந்திருந்தனர், தாருகா வனத்து முனிவர்கள். இவர்கட்கு நல்லறிவு புகட்ட வேண்டி எம்பெருமானும், அழகிய வடிவினராய், இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியா சக்தி வடிவான திரிசூலமேந்தி, பராசக்தி வடிவாம் கப்பரையை ஏந்தி, திரோதான சக்தி வடிவான பாதுகையணிந்து தாருகா வனத்துள் வந்தவுடன், முனி பத்தினிகள் அவ்வழகில் மயங்கியவராய் அவர்பின் செல்லுவாராயினர். மோகினி வடிவெடுத்து வந்த திருமாலின் அழகைக் கண்டு, தமது கடமைகளை மறந்தவராய், முனிவர்கள் அவர் பின் சென்றனர். இறுதியில் தாம் வஞ்சிக்கப்பட்டதை அறிந்த முனிவர்கள் ஆபிசார வேள்வி இயற்றி, அதிலெழுந்த புலி, மான், மழு, பாம்பு முதலியவற்றைச் சிவபிரான் மீது ஏவினர். அவையனைத்தும் இறைவனுக்குத் திருவாபரணங்களாக மாறியதைக் கண்ணுற்று இறுதியாக யானை வடிவுடைய கயாசுரனை ஏவினர். பெருமான் மறையவே யானை, முனிவர் பால் திரும்புகிறது. பிழையுணர்ந்த முனிவர்களின் துதிக்கிரங்கி, ஈசனும் சிறிய உருக்கொண்டு யானையினுட்புக, உலகெங்கும் இருள் மூடுகிறது. துன்புற்ற யானை சத்தியோசாத தீர்த்தத்தின் வடகிழக்கு மூலையில் விழுந்து தென்மேற்கு மூலையில் கரையேறுகையில், அதனைக் கிழித்து, அத்தோலைப் போர்த்த வண்ணம் வெளியே வந்த பெருமானும் அதன் தலையில் வலக்காலூன்றி, இடது உள்ளங்கால் தெரிய நடனமாடுகிறார். மீண்டும் உலகம் ஒளி பெறுகிறது.

இவ்வீரச் செயல் நிகழ்ந்த திருத்தலம், வழுவூர் வீரட்டானம் ஆகும். தேவார வைப்புத் தலங்களுள் ஒன்றான இத்தலம், மாயூரம்—திருவாரூர் இருப்புப் பாதையில் இலந்தங்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் 1 கி. மீ. தொலைவிலுள்ளது. பேருந்து மூலமாகச் சென்றால் 2 கி. மீ. நடக்க வேண்டும். இராஜகோபுரம் ஐந்து நிலைகளை உடையது. ஈசான தீர்த்தம் அமாவாசை நாட்களில் நீராட மிகச் சிறப்பானது. சுயம்பு மூர்த்தியான இலிங்கப் பெருமான், வீரட்டேசுவரர் கிருத்திவாசேசுவரர் ஆகிய திருப்பெயர்களுடன் திகழ்கிறார். இறைவி, இளங்கிளை நாயகி எனப்படுகிறாள். அருகே கஜசம்ஹார மூர்த்தியின் ஞான சபையுள்ளது. யானையின் உரி போர்த்தாடும் பெருமானை அம்பிகையின் இடுப்பிலிருந்து, முருகன் விரலால் சுட்டிக் காட்டும் கோலம் கண்டு மகிழத்தக்கது. இவ்விழாவினை மாசி மகத்தன்று கொண்டாடுவர்.

இறைவனை அகத்தியர், கண்ணன், உபமன்யு, சூரியன், பிரமன், சனி, விக்ரமசோழன், கல்மாஷபாத சோழன், வீரசோழன், ஹைமவதி, சம்புசர்மா ஆகியோர் பூசித்துப் பேறு பெற்றுள்ளனர். சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர் காலக் கல்வெட்டுக்களையும் இத்திருக்கோயிலில் காணலாம். உற்சவ மூர்த்திகளுள் பிட்சாடனர் மோகினி ஆகிய திருவுருவங்கள் அழகிற் சிறந்து பொலிவனவாம். திருப்புகழ் பெற்ற முருகன் சன்னிதியும் இக்கோயிலின் கண் அமைந்துள்ளது.

''காட்டானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி''.

—அப்பர் சுவாமிகள்.

முதலாழ்வார்கள் விளக்கிய

# முப்பெருந் தத்துவங்கள்

திரு. தி. கோ. இராமானுஜதாசர், சென்னை-5.

**வைணவத்தின் மேன்மை!**

உலகிலுள்ள பிறவிகளில் மனிதப்பிறவி மிக உயர்ந்தது. பகுத்து அறியும் பண்பும், அப் பகுத்தறிவின் அடிப்படையில் வாழும் உரிமையும் உடையது மனிதப் பிறவி என்பதே மேலே கண்டுள்ளோம். எனவே, மனிதப்பிறவி எடுத்த நாம், உலகில் வாழ உதவும் சிறந்த வழி அல்லது மார்க்கம் எது என ஆராய வேண்டும். மனிதன் ஐம்புலன்கள் வழிச்செல்லாது அவைகளை அடக்கி, இப்பிரபஞ்சத்தின் தனிப் பெருந்தலைவனை கடவுளிடம், பக்தி வைத்து ஒழுக உதவுவதே மதம். எங்கு நோக்கினும் கடவுளின் உருவைக் காணலாம்.

*பூநிலாய ஐந்துமாய்*
*புனல்கண் நின்ற நான்குமாய்,*
*தீநிலாய மூன்றுமாய்,*
*சிறந்தகால் இரண்டுமாய்,*
*மீநிலாயது ஒன்றுமாகி,*
*வேறு வேறு தன்மையாய்,*
*நீநிலாய வண்ணம்,*
*நின்னை யார் நினைக்க வல்லரே?*

என வியக்கின்றார் திருமழிசைப்பிரான்!

நாரங்கள் என்றால் பிரபஞ்சத்தில் பரவி உள்ள எல்லாப் பொருள்களின் தொகுதியும், உயிர்களின் தொகுதியுமாகும். அயனம் என்றால் இவைகளை இயக்குபவன் எனப்பொருள்; எனவே இந்த நாரங்களை இயக்குபவனை நாராயணன் எனத் துதிக்கின்றோம்.

இவ்விதமாகச் சகல பொருள்களிலும், உயிர்த்தத்துவங்களிலும், இறைவன் பரவி நிற்பதைச் சேவித்த பெரியோர்கள் அவ்விறைவனுக்கு விஷ்ணு என்று பெயர் சூட்டினர். விஷ்ணு என்றால் எங்கும் பரவியவன் என்று பொருள்படும்.

*எங்கும் உளன் கண்ணன்*
*என்ற மகனைக் காய்ந்து*
*இங்கு இல்லையால் என்று*
*இரணியன் தூண்புடைப்ப*
*அங்கு அப்பொழுதே அவன்*
*வீயத்தோன்றிய, என்*
*சிங்கப்பிரான் பெருமை*
*ஆராயும் சீர்மைத்தே?*

என்று நம்மாழ்வார் இதனை வெளியிடுகிறார்.

விஷ்ணுவைத் தலைவராகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் சமூகத்தினருக்கு வைணவர்கள் எனப்பெயர். விஷ்ணுவின் மேன்மையையும், அவன் அருளையும் விளக்கும் கொள்கைகள் வைஷ்ணவம் எனப்படும்.

உலகில் எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் உண்டாக்கிக் காப்பாற்றும் இறைவனை கண்ணனே பெருந்தெய்வம் என்று நிலை நாட்டுகிறார் நம் தொண்டிரடிப்பொடியாழ்வார்.

*மற்றும் ஓர் தெய்வம் உண்டே?*
*மதியிலா மானிடங்காள்?*
*உற்றபோது அன்றி நீங்கள்*
*ஒருவன் என்று உணரமாட்டீர்!*
*அற்றமேல் ஒன்று அறியீர்*
*அவனல்லால் தெய்வமில்லை!*
*கற்றினம் மேய்த்த எந்தை*
*கழலிணை பணிமின் நீரே!*

**வாழ உதவும் விசிட்டாத்வைதம்!**

ஸ்ரீவைணவம், நமது வாழ்க்கைக்கு வழி காட்டியாக அமைந்துள்ளது. பல்வேறு தோற்றங்களில் காணப்படும் இப்பிரபஞ்சம் மூன்றே பாகுபாடுகளில் அடங்கியுள்ளது, எனப் புகட்டுகின்றது. இம்மூன்று பாகுபாடுகள் 'சித், அசித், ஈசுவரன்' என்று பெயர் பெற்றுள்ளன. சித் என்பது உயிர்த்தத்துவம்; அசித் என்பது உயிரற்ற பொருள்கள்; ஈசுவரன் என்பது இறைத்தத்துவம். அசித்தாகிய உடலுடன் கூடி, அதனைத் தொழிற்படுத்துகிறது உயிர். இவ்விதமாகவே உடலையும் உயிரையும் தனக்கு உடலாகக் கொண்டு, இறைவனை நாராயணன் விளங்குகின்றான். இங்ஙனம் சகல பொருள்களையும் உயிர்களையும் உடலாகக் கொண்டு இறைவன் இயங்குவதை நம்மாழ்வார் விளக்கியருளுகிறார்.

*''திடவிசும்பு, எரி, வளி,*
*நீர், நிலம் இவை மிசை*
*படர் பொருள் முழுவதுமாய்*
*அவையவை தொறும்*
*உடல் மிசை உயிரெனக்*
*கரந்து எங்கும் பரந்துளன்*
*சுடர்மிகு சுருதியுள்*
*இவையுண்ட சுரனே!*

இம்முப்பெரும் தத்துவங்களே வைணவ சமயத்தின் அடிப்படையாகும்.

உலகில் உள்ளன எல்லாம் இறைவனே என்று ஒரு சாராரும்; உலகில் உள்ளன எல்லாம் இறைவனும் உயிர்களுமே என்றும்; இவை இரண்டும் தனித்து இயங்குகின்றன என்றும் வேறொரு சாராரும்; உலகினை விளக்க முன் வந்து வெற்றிபெறுதபோது, உலகில் உள்ள தத்துவங்கள் மூன்று என்றும்; இவை அசித், சித், ஈசுவரன் என்றும்; அசித், சித்துக்கு உடலாக அமைந்துள்ளது போன்று, அசித்தும், சித்தும் ஈசுவரனுக்கு உடலாக அமைந்து, ஒருமைப் பாட்டில் இயங்குகிறது என்றும் தெளிவை உண்டாக்கியது வைணவமே!

நம்மாழ்வார் இயற்றிய திருவாய்மொழி முதற்பாசுரத்தில் ''துயர் அறுசுடரடி தொழுது எழு என் மனனே'' என்று பாடுகிறார். துயரை அறுக்கிற சுடரடி வேறு; துயர் வேறு; துயரால் அவதிப்படும் மனம் வேறு. துயர் அறு சுடரடி என்பது ஈசுவரனாகிய இறைவன். இறைவனுக்குத் திருமேனி உண்டு என்பது இதனால் தெளிவாகிறது. இறைவனடி என்கிறார் பொய்யாமொழியாரும், துயர் என்பது உடலும் ஐம்பொருள்களால் ஆன உலகமும், அதாவது அசித்து, தொழுது எழும் மனம் என்பது சித்து அல்லது உயிர்.

நம்மாழ்வார் ஆழ்வார்களிலே தலைமை இடம் வகிக்கிறார். காரணம் விசிட்டாத்வைதக் கொள்கையைத் தம் ஆயிரம்பாடல்களான திருவாய் மொழியிலே சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் அவர் தெளிவுபடுத்தியருளினார். இந்த ஆயிரம் பாடல்களின் சுருக்கமே முதல் நூறு பாடல்களாகிய முதற்பத்து. நூறு பாடல்களால் ஆன முதற்பத்தின் சுருக்கமே முதல் பதிகம். அதாவது பத்துப்பாடல்கள். முதல் பதிகம் அல்லது பத்துப்பாடல்களின் சுருக்கந்தான் முதல்பாடல். முதற் பாடலின் சுருக்கந்தான் ''துயர்அறு சுடரடி தொழுது எழு என் மனனே'' என்றும் கூறலாம்.

## ஆழ்வார்கள் அளிக்கும் அமுது!

வேதத்திலும், உபநிடதங்களிலும், பிரம்ம சூத்திரத்திலும், பொதிந்து உள்ள இந்த விசிட்டாத்வைத தத்துவத்தையே, நம் ஆழ்வார்கள் தமது திவ்யப் பிரபந்தப் பாசுரங்களிலே அருளியுள்ளார்கள். ஈண்டு ஆழ்வார்கள் பதின்மரிலும் முதலாழ்வார்களின் பாசுரங்களை மட்டில் சுட்டிக்காட்டி அமைகிறேன்.

நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டில் ஒன்றான திருக்கோவலூர்த் திவ்ய தேசத்தில் கூடிய முதலாழ்வார்கள் அசித், சித், ஈசுவர நிலைகளை நன்கு விளக்கியுள்ளார்கள் என்பதை ஆராய்ச்சியினால் காணலாம். அசித்து, சித்து, ஈசுவரன் என்ற முப்பிரிவுகளைப் பொய்கையார், பூதத்தார், பேயார் என்னும் மூவரும் தமக்குள் ஒவ்வொரு பிரிவாகப் பகிர்ந்து கொண்டு விளக்குகிறார்கள் ஆச்சரியமாக! அசித் சொரூபமான பிரபஞ்சத்தைக் காட்டுகிறார் பொய்கை முனி! எனவே, உயிர்கள் வாழ உதவும் நிலப்பரப்பாகிய வையத்தைக் காட்டுகிறார்! உயிர் வகைகளான ஆத்மாக்கள் நிலப்பரப்பில் எழ உதவி செய்யும் நீர்ப்பரப்பைக் காட்டுகிறார். அதாவது வார்கடலைக் காட்டுகிறார். வார்கடலிலும் உயிர் இனங்கள் உள்ளன. அடுத்து, வையகமும் வார்கடலும் மழைத்தத்துவமும்முதலியவற்றால் வாழ உதவும் வெய்ய கதிரோனையும் காட்டுகிறார்!

கதிரவனுக்கு வெப்பமும், வெளிச்சமும் தருவது யார்? கடல் பரந்து வார்கடலாகித் தண்மைபெறச் செய்வது யார்? வையகத்தையும், வார்கடலையும், வெய்ய கதிரோனையும் இயக்குபவன் இறைவனே! இவைகளை உடம்பாகக் கொண்டு இயக்குபவன் அவனே! இவைகளும் தங்கள் இயக்கத்திற்கு அவனையே சார்ந்துள்ளனவாம்!

ஒரு சக்கரத் தகட்டை விரல் நுனியில் ஏற்றிச் சுழற்றினால், அதன் பிறகு, அது எப்படித் தானாகவே எளிதாகச் சுழலுகிறதோ அப்படித்தான் இவன் பிரபஞ்சத்தை இயக்கும் திருவிளையாடலும்! இறைவனும் கையிலே சுடர்விடும் சக்கரத்தை ஏற்றி இதைக் காட்டியருளுகிறான். வாழ்க்கையை நடத்த உதவும் அசித் சம்பந்தத்தால் ஏற்பட்ட உலகத்தினிடம் நாம் அதிகம் பற்றுக் கொண்டால் ஏற்படுவது இடராழிதான்! இந்த இடராழி நீங்க நமக்குத் துணை சுடராழியான் தான்! சக்கரம் துஷ்ட நிக்ரகம் புரிவதுதானே! இப்படி நம் இடராழி நீக்கும் சுடராழியானுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அவன் திருவடிகளில் புகழ்மாலை சூட்டி வணங்கவேணும்; இவ்விதமாகப் பொய்கைமுனி அசித்சொரூபமான பிரபஞ்சத்தை விளக்கிப் பாடுவதைச் சேவிக்கலாம்!

வையம் தகளியா வார்கடலே நெய்யாக!
வெய்ய கதிரோன் விளக்காக!—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொல்மாலை!
இடராழி நீங்குகவே யென்று!

அடியேனுடைய இந்த விண்ணப்பம் சரியா எனச் சந்தேகம் வரலாம். முதலியாண்டான் அருளிச் செய்துள்ள பொய்கைப்பிரானுடைய தனியனைச் சேவிக்கலாம்!

அசித் சொரூபமான பிரபஞ்சத்தின் அம்சமான பூமியில் உள்ள ஒரு பாகமான கச்சிப்பதியைக் கொண்டே தம் தனியனை ஆரம்பிக்கின்றார்.

கைதைசேர் பூம்பொழில்சூர் கச்சிநகர் வந்துஉதித்த
பொய்கைப்பிரான்! கவிஞர் போரேறு!

பொய்கைமுனி அருளிய நூற்றந்தாதியில் (படி) உலகை அதாவது பிரபஞ்சத்தைத்தான் விளக்கியருளுகிறாராம்.

அடியவர்கள் வாழ, அருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து

கச்சிப்பதி என்பது அசித்து, கச்சிப்பதி உலகில் அடங்கியது. அதனால் உலகைக் குறிக்கின்றது. உலகம் என்றால் படி என்று பொருள்படும். எனவே, அசித்தாகிய படியை விளங்கச் செய்தார்; உலகத்தின் அதாவது அசத்தின் தன்மையை விளங்கச் செய்தார். உலகத்தார் மீதுள்ள அன்பினாலே!

மேலும் பிரபன்னர்களுடைய காயத்திரியான இராமாநுஜநூற்றந்தாதியில்; திருவரங்கத்தமுதனர் பொய்கையார் ஏற்றிய விளக்கைப் பற்றிப் பேசுகிருர். பொய்கைமுனி ஏற்றிய திருவிளக்கைத் தம் திருவுள்ளத்தில் எழுந்தருளச் செய்து இன்புறுகிருராம் இராமாநுசர். அத்தகையதான திருவிளக்கு மிகச்சிறந்த விளக்காகத்தானே இருக்கவேணும்! அதன் உயர்வைப் பார்க்கலாம். அசித் மயமான பிரபஞ்சத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமையால் அஞ்ஞான இருள் நிலவியதாம்.

உலகத்தைப்பற்றிய, அதாவது அசித்தைப் பற்றிய புற இருளை மாற்றவே; பொய்கையாழ்வார், தம் திருவிளக்கை, வேதத்தின் சரியான, தலையான, குருத்தான, கொழுந்தான கருத்தைச் செந்தமிழிலே ஏற்றினராம்! பாடலைக் கேளுங்கள்!

வருத்தும் புறவிருள் மாற்ற, எம்
 பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும், செந்தமிழ்
 தன்னையும்கூட்டி, ஒன்றத்
திரித்தன் றெரித்த திருவிளக்கைத்
 தன் திருவுளத்தே
இருத்தும் பரமன், இராமாநுசன்
 எம் இறையவனே!

பொய்கைமுனி அசித்தை விளக்கிய பிறகு பூதத்தார் சித்தை விளக்குகிருர். அதனல்தான் இரண்டாவது விளக்கு தேவைப்படுகிறது!

அசித்துக்களுக்கும் சித்துக்களுக்கும் அதாவது உயிரல்லாதவைகளுக்கும் உயிர்களுக்கும் வித்தியாசம் அல்லது சிறப்பு என்ன?

சித்து அதாவது உயிருள்ளவைகளுக்கு மனம்இருக்கிறது! இந்த இதயத்திலே உணர்ச்சியில்லா உள்ளம் கல்தான்! சித்துக்குச் சிறப்பாக அமைந்துள்ள சிந்தை, உருகுகின்ற சிந்தையாக இருக்க வேணும். இனியவைகட்கு உருகும் சிந்தையாதல் வேண்டும்! இறைவனைவிட இனியதும் உண்டோ? தேனும் பாலுங்கன்னலும் அமுதமுமாகித் தித்திப்பவன் அவன். சித்தின் சிந்தை, அன்பும் ஆர்வமும் துணைக்கொண்டு உருகவேண்டுமாம் இறைவனுக்காக! எனவே அன்பைத் தகளியாக்கி, ஆர்வத்தை அதில் நெய்யாக இட்டு, உருகும் சிந்தையைத் திரியாக்கி, ஞானச் சுடர்விளக்கு ஏற்றி, ஆத்மலட்சணத்தை விளக்கினர் கடல்மல்லைக் காவலர். பூதவேந்தர் ஞானத்தமிழிலே ஏற்றிய விளக்கைச் சேவிக்கலாம்.

அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை யிடுதிரியா,—நன்புருகி
ஞானச் சுடர் விளக்கேற்றினேன், நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்!

''நான்'' என்று அவ்விளக்கேற்றிய ஆத்மாவாகிய தம்மைச் சுட்டிக் காட்டுகிருர்! திருக்குருகைப்பிரான் பிள்ளான் அருளிச்செய்த பூதத்தாழ்வார் தனியனையும் சேவிக்கலாம்! சித்துக்கு ஏற்படும் ஒரு அவலநிலை அதன் கர்மாவிற்கு ஏற்பப் பிறவிகள் எடுத்தல்; சித்து மேற்கொள்ளும் பக்தியின் பயனல், அதன் பிறவிப் பிணி அறுகிறது.

மருத்துவனய் நின்ற மாமணிவண்ணன் அருளால்தான் நமது மறுபிறவியைத் தவிர்க்க வேணும். ''நாறிணர்த்துழாயோன் நல்கினல்லதை ஏறுதல் எளிதோ? வீறுபெறு துறக்கம்'' என்பது பரிபாடல். ஞானத் தமிழிலே சித்தின் இலக்கணம் விளக்கிய பூதத்தார் கழல்களை வணங்கினல் மறுபிறவி வாராதாம்!

என் பிறவி தீர இறைஞ்சினேன் இன்னமுதா
அன்பே தகளி யளித்தானை—நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துகள் சேரும், கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்

திருவரங்கத்து அமுதனர் பூதத்தாரைப் போற்றுகிருர். சித்துக்குச் சிந்தை உண்டு. அதன் இதயத்துக்குள்ளே ஆத்மஞானம் உண்டாகும் வரை இருள் இருக்கிறது. அந்த இதயத்தில் உள்ள இருளைப் போக்குவதாம் பூதத்தார் பாதங்கள். இத்தாள்களை வணங்கும் இராமாநுசனை வணங்கும் பெரியோர்கள்தான், உண்மையான வேத அறிவை நிலைநாட்டுபவர்களாம்.

இறைவனைக் காணும் இதயத்து
 இருள்கெட, ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத் திருவடி
 தாள்கள் நெஞ்சத்து
உறையவைத்தாளும் இராமாநுசன்
 புகழோதும் நல்லோர்
மறையினைக்காத்து, இந்த மண்ண கத்தே
 மன்ன வைப்பவரே.

அசித்தைப் பற்றிப் பொய்கையார் பேசிய பிறகு, சித்தைப் பற்றிப் பூதத்தார் பேசிய பிறகு, ஈசுவரனைப் பற்றித்தான் பேசுதல் வேண்டும்! பொய்கைமுனி பேசிய சுடராழியானும், பூதத்தார் பேசிய சுடராழியானகிய நாரணனும் தனித்து இல்லையாம்! திருமாலாக அதாவது திருமகளுடன் கூடியே விளங்குகிருன் என்று தொடங்குகிருர் பேயார்!

## திருக்கண்டேன் !

புருஷகார பூதையான திருமகளின் செல்வாக்கு பூரணமாகப் பரிமளிப்பதால் அவனும் பொன்னிற லட்சுமியைப் போலவே, பொன்னிறச் சாயலாகத் திகழ்கிருனும்.

## *பொன்மேனி கண்டேன்!*

அருண தேஜசுடனும் விளங்குகிருனும்!

## *அருக்கன் அணி நிறமும் கண்டேன்!*

யுத்த கோஷம் செய்து துஷ்ட நிக்ரகம் செய்யும் சுடராழியையும் சேவிக்கிருர்! சிஷ்ட பரிபாலனம் செய்யும் முறையில் அபயம் அளித்து முழங்கும் புரிசங்கத்தையும் சேவிக்கிருராம். மற்றும் ஈசுவரனுடைய துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனமான இரு பெரிய லட்சணங்களையும்

திருக்கண்டேன்! பொன்மேனிகண்டேன்! திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன்!—செருக்கிளரும்
பொன்னழி கண்டேன்! புரிசங்கம் கைக்கண்டேன்!
என்னழி வண்ணன்பால் இன்று!

என்று விளக்கியருளுகிருர்.

குருகைக் காவலப்பன் அருளிச் செய்த பேயாழ்வார் தனியனில், ஆழ்வார் ஈசுவர அம்சத்தை வெளியிட்டதை மிக வெளிப்படையாகவே இயம்புகிருர்!

சீராரும் மாடத் திருக்கோவலூ ரதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு—ஓராத்
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே! உகந்து!

மழைக்கு ஒதுங்கவில்லையாம் பேயார். சீர் ஆரும் திருக்கோவல் ஊர் அதனுள் கார் ஆரும் கருமுகிலைக் காணத்தான் புகுந்தாராம்!

அசித்தைப்பற்றிய பொய்கையார் பாடல்களால் சாதாரணமான இருள், அதாவது உலகைப் பற்றிய இருள் நீங்கியது; அதாவது மாண்டது. சித்தைப் பற்றிய பூதத்தார் பாடலால் பெரிய இருள், அதாவது பேர் இருள் மாண்டதாம். அசித்தைப் பற்றிய, சித்தைப் பற்றிய இரு இருள்களும் ஒழிந்த பிறகு ஈசுவர ஞானமும் தலைப்பட்டதாம், 'பேயார் பாடல்களிலே! இறைவனுகிய (ஈசுவரனுகிய) பெருந்தலைவனைப் பாடிய இவர் அல்லரோ தமிழ்த் தலைவர்! அமுதனரின் அமுத வாக்கு:

மன்னிய பேரிருள் மாண்டபின்,
கோவலுள் மாமலராள்
தன்னெடுமாயனைக் கண்டமை
காட்டும் தமிழ்த்தலைவன்!
பொன்னடிபோற்றும் இராமாநுசற்கு
அன்பு பூண்டவர்தாள்
சென்னியில் சூடும், திருவுடையார்
என்றும் சீரியரே!

அசித் லட்சணம் பாடிய பொய்கையார் அசித் அல்லது உலகின் ஒரு பகுதியாகிய நகரேஷு காஞ்சியில் அவதரித்தவர்! சித் லட்சணம் பாடிய பூதவேந்தர்

கார்வண்ண முதுமுந்நீர்க் கடல்மல்லைத் தலசயனம்,
ஆரெண்ணும் நெஞ்சுடையார் அவர் எம்மை
ஆள்வாரே!

என்று சித்தின் பெருமை அல்லது பாகவதர்களின் பெருமை கொண்டாடப்பெற்ற கடல்மல்லையில் அவதரித்தவர்.

மற்றும் இத்தலம்,

கணங்கள் இயங்கும் மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்,
வணங்கும் மனத்தார் அவரை
வணங்கு என்தன் மடநெஞ்சே!

என்று பாகவதப் பெருமை பாடிய மங்கை மன்னனுலும் கொண்டாடப் பெற்றதன்றே!

ஈசுவர லட்சணம் பாடிய பேயாரின் அவதாரம் மாடமாமயிலைத் திருவல்லிக்கேணியிலே! தேவகி வசுதேவர்களுக்குச் சிறையில் தான் ஈசுவரன் என அறிவித்துச் சங்கு சக்கரத்துடன் அவதரித்தருளிய பிறகு, போர்க்களத்தில்(அசித் சித்துக்களை உடலாகக் கொண்டுள்ள விசுவரூபத்தையும் (பேருருவத்தையும்) பார்த்தனுக்குக் காட்டித் தானே ஈசுவரன் என்று தெளிவித்தருளிய பார்த்தசாரதிப் பெருமான் எழுந்தருளியுள்ளது மாடமாமயிலைத் திருவல்லிக்கேணியிலே, ஈசுவர லட்சணம் பாடிய பேயாழ்வார். தாம் திருவல்லிக்கேணியில் நந்தவன கைங்கர்யம் செய்து பிற தேவர்களையும் மதியாது திருமால் அருளையே நாடி நின்ருர்.

அசித்து, சித்து, ஈசுவரனைப்பற்றி ஞானம் ஏற்படாதபோது முழு இருட்டுதான்! அதுவே நடு இரவு! அசித்து என்ற உயிரற்ற உடல் கீழே விழுந்து நீண்டு கிடக்கும். அசித்தை விளக்க வந்த பொய்கையாரின் கிடந்த திருக்கோல நிலையை இது காட்டுகிறது. உடலான அசித்துக்கு சித்து அல்லது ஆத்மா சேரின் எழுந்து உட்காரும். எனவே பூதவேந்தர் சேர்ந்த பிறகு, இருவரும் எழுந்து இருந்த திருக்கோலத்தில் இருந்தனர். சித்துக்கு ஈசுவரன் ஞானம் ஏற்பட்டதும் ''எழுமின்! இயம்புமின்! இறைஞ்சுமின்!'' என எல்லோரையும் எழச்செய்யும்! பேயார் சேர்ந்ததும், மூவரும் எழுந்து நின்ற திருக்கோலத்தில் விளங்கினர்! வாய் திறந்து பாடவும் முற்பட்டனர்! இதுவே பேயார் புரிந்த தலைமை உரை. பூமன்னுமாது பொருந்திய மார்பனைப் பற்றி ''வாசித்தும், கேட்டும், வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது'' என்று ஈசுவரபக்தியில் திளைத்தார் பேயார்'.

ஸ்ரீவைணவ சமயத்தின் முதன்மையான (இந்த விசிட்டாத்வைதக்) கொள்கையை முதல் முதலாகப் பரப்பிய பெருமையால்தான் இம்முப்பெரியார்களையும் முதலாழ்வார்கள் (முதன்மையான ஆழ்வார்கள்) எனப் போற்றுகிறேம். அசித், சித், ஈசுவரன் எனப் பிரித்துப் பேசாத பெருநெறியை ஒட்டி, இம்முதன்மையான ஆழ்வார்கள் மூவராக இருப்பினும், பிரித்துப் பேசாமல், முதலாழ்வார்கள் எனச் சேர்த்தே வைணவ சமயம் போற்றி மகிழ்கிறது!

உடல், உயிர், இறைவன் என்ற மூன்று பாகுபாடுகள் உள்ளனவேனும், உடலையும் உயிரையும் சரீரமாகக் கொண்டு எம்மானை என்னுவியாவிதனை என்று இறைவன் இயங்குவதால், ஈசுவரனுகிய உயிரும், உலகமாகிய உடலும் கலந்து ஒன்ருகக் காணப்படுகின்றன. இதனை விசேடத்துடன்கூடிய அத்வைதம் அல்லது விசிட்டாத்வைதம் என்பர்.

## முப்பொருள் காட்ட மூவுலகு அளந்தான்!

எம்பெருமானுடைய அவதாரங்கள் பத்து என்பது கணக்கு. ஆனல் கல்கி அவதாரம் நீங்கலாக இதுவரை எடுத்தருளிய அவதாரங்கள் ஒன்பது தான். இந்த ஒன்பதில் மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம அவதாரங்களை முதல் நான்காகவும், பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண அவதாரங்களைப் பின் நான்காகவும் கொண்டால், நடுநாயகமாக அமைந்துள்ளது வாமன-திரிவிக்கிரம அவதாரமே. நடுநாயகமாக அமைந்துள்ள வாமன-திரிவிக்கிரம அவதாரத்தின் உட்பொருளையும் மேன்மையையும் ஆராயலாம்.

மாவலி செய்த தவறு என்ன? அவன் கொடுங்கோலனு? அவன் யாகம் இயற்றித் தானம் செய்து விளங்கினன். இத்தகைய நிலையில், தேவர்கள் ஏன் தலைதெறிக்கத் திருமாலிடம் ஓடி முறையிட வேண்டும். அவனுக்கு எதிராக தேவர்கள் உயர்ந்தவர்கள் ஆயிற்றே! அவர்கள் மாவலி மீது ஏன் கோள் சொன்னுர்கள்? ஏதோ ஒரு அவசியமான விலக்கவேண்டிய கோளாறை அதாவது தவறை மாவலியிடம் காணத்தான் செய்தார்கள் தேவர்கள். அதை அவர்கள் தேவாதிதேவனிடம் தேவ ரகசியமாகவே விண்ணப்பித்தார்கள். இவர்கள் வேண்டுகோளைத் திருச்செவி சாற்றிய இறைவனும், அக்குறையை நீக்குவதாக ஒப்புக்கொண்டான்.

கம்ப நாட்டாழ்வாரும் தமது பாடலில் தேவர்கள் கூறிய இக்குறையை வெளிப்படையாகக் காட்டாமல், கம்ப சூத்திரமாகச் சுட்டுகிறுர்.

> ஆய(து) அறிந்தனர், வானவர், அந்நாள்
> மாயனை வந்து வணங்கி, இரந்தார்
> ''தீயவன் வெந்தொழில் தீர்!'' என நின்றுர்
> நாயகனும் அது செய்ய நயந்தான்.

என்று இறைவன் குறள் உருவில் மாவலியிடம் வந்து, தானும் யாகம் செய்வதாகவும்; அதற்கு மூன்று அடி மண் தேவை என்றும் கேட்டான்; மாவலி இறைவனின் உட்கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் இசைந்தான்.

மாவலியிடம் கேட்டுப் பெற்ற வேண்டுகோளைச் செயல்படுத்த முனைந்த இறைவன், தன் கருத்துப்படி செயல்படலானுன். அதாவது பிரபஞ்சத்தில் உள்ளவை அசித், சித், ஈசுவரனு என மூன்று! அசித்தும், சித்துமான இரண்டே பிரபஞ்சமே எண்ணி இருந்தவன் மாவலி. சகல பிரபஞ்சத்தையும் வென்று தன் ஆட்சியில் அடக்கியுள்ளதாகவும் நினைத்திருந்தான். இவைகளுக்குத் தானே தலைவன் என்று எண்ணி அவைகளைத் தானமாக வழங்கலானுன். இதற்கு மாருக அசித், சித் அனைத்தும் ஈசுவரனுன தனக்கே அடக்கம் என அறிவுச்சுடர் கொளுத்தத் திருவுள்ளம் பற்றினுன் இறைவன். மாவலியும் இதை உடனே உணர்ந்து கொண்டான். தன் தவற்றைத் திருத்திக் கொள்ள முற்பட்டான். அசித் ரூபமான சகல உலகப் பொருள்களையும் இறைவன் திருவடியிலே சமர்ப்பிக்க, அதை முதலாகத் தன் திருவடியில் ஏற்றுக் கொண்டான் இறைவன். சித்ரூபமான தன் ஆட்சியில் இருப்பதாக எண்ணிய சகல உயிர்த் தத்துவங்களையும் இறைவனுடையதே எனச் சமர்ப்பிக்கவும், அதையும் இரண்டாவதாகத் தன் திருவடியால் அளந்து ஏற்றுக் கொண்டான். மூன்ருவது தத்துவமான ஈசுவரன், தன் ஆளுகையில் இல்லை என்றும், அதைத் தானமாகத் தருவதற்கு இயலாமையையும் தெரிவித்துத் தாழ்மையுடன் தலைகுனிந்தான் மாவலி!

இறைவனும், தானே ஈசுவரன் என்று தன்முழு வடிவம் காட்டித் தன்னை வணங்கித் தலைகுனிந்த மாவலியின் தலையில் தன் திருவடியைப் பொறித்து, அவனையும் ஆட்கொண்டான்! இங்ஙனம் இறைவன் முன்பு, தன் மிகத்தாழ்ந்த நிலைமையை மாவலி உணர்ந்ததையே எல்லா வற்றிற்கும் கீழதான பாதாளம் சேர்ந்தான் எனச் சூசகமாகக் கொள்ள வேண்டும். எப்பொழுதும் நிலவியுள்ள அதாவது சிரஞ்சீவியான இந்தத் தத்துவத்திரய (முப்பொருள்) உண்மையை உணர்ந்த மாவலியும் சிரஞ்சீவியாகத்திகழ்கின்றுன். நமது விசிட்டாத்வைத மதத்தின் அடிப்படையான கொள்கையை உலகோர் உணர்தற் பொருட்டு இறைவன் எடுத்தருளிய நடுநாயகமாக வாமன, திரிவிக்கிரம அவதாரத்தின் மேன்மைதான் என்னே!

முதலாழ்வார்கள் கூடி மொழி விளக்கேற்றிய திருக்கோவலூரில் இறைவன் திரிவிக்கிரமனுகவே இன்றும் சேவை சாதிக்கின்றுன். முப்பெரும் உண்மையை விளக்கும் திரிவிக்கிரமனுக இறைவனைச் சேவித்த முதலாழ்வார்கள், அசித், சித், ஈசுவர தத்துவங்களையே தமக்குள் பகிர்ந்துகொண்டு பாடியருளினுர்கள். ஸ்ரீவைணவர்கள் அறிந்து கொள்ளவேண்டிய முதல் கருத்தும், முதன்மையான கருத்தும் இப்முப்பொருள் உண்மையேயாகும். இதனுல்தான் இம்முப்பொருள் பெருங்கொள்கையை விளக்கியருளிய பொய்கை, பூதம், பேயார்களை முதலாழ்வார்கள் என்றும், முதன்மையான ஆழ்வார்கள் என்றும் நன்றி கலந்த பக்தியுடன் ஸ்ரீவைணவ உலகம் போற்றிப் புகழ்கின்றது.

இவ்விதமான விசிட்டாத்வைதக் கொள்கையை நிலைநாட்ட வந்தருளிய வாமனப் பரகாலரும், தம் சங்கமுகத் தமிழ் மாலையில்:

> ''ஒருகுறளாய், இரு நிலம் மூவடி மண் வேண்டி
> உலகு அனைத்தும் ஈர் அடியால் ஒடுக்கி, ''ஒன்றும்
> தருக'' எனுமாவலியைச் சிறையில் வைத்த
> தாடாளன் தாள் அணைவீர்!''

எனப் பணித்தருள்கின்றுர்.

**எம்பெருமானுர் தரிசனம் :**

முதலாழ்வார்கள் தொடக்கமாக, கடைக்குட்டியான கலியன் வரை தத்தம் அருளிச்செயல்களால் விளக்கப்பட்ட இவ்விசிட்டாத்வைத மதத்தையே அதாவது தத்துவத்திரயக் கொள்கைகளையே துணையாகக்கொண்டு, வேத, பிரம்ம சூத்திரக் கருத்துக்களை முரண்படாமல் விளக்கியருளினுர் எம்பெருமானுர்.

வேதத்தில் ஒன்றுக்கொன்று முரண்படப் பிரித்துக் கூறும் வாக்கியங்களை ஒற்றுமைப்பட இணைத்துப் பாடியம் (விரிவுரை) இயற்றியவர் இராமாநுஜர். இதற்காக வேதத்திற்குப் போதாயனர் இயற்றிய விரிவுரையைக் காசுமீரம் சென்று வாசித்தறிந்து ஆதாரமாகக் காட்டினுர். இதனுல்தான் விசிட்டாத்வைத மதத்திற்கு இராமாநுச தரிசனம் என்று பெயரிடப்பட்டது. இப்பெயரைச் சூட்டியவர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள சாட்சாத் திருவரங்க நாதப் பெருமாள்தான்! ' ''எம்பெருமானுர் தரிசனம் என்றே, இதற்கு நம் பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்'' என்பது உபதேச ரத்தின மாலையிலே அமைந்த மணவாள மாமுனிகளின் திருவாக்கு:

இராமாநுசர் புரிந்தருளிய இம்மகா உபகாரத்தைத் திருவரங்கத்து அமுதனாரும்.'

பேதையர் வேதப்பொருள் இது என்று உன்னி,
  பிரமம் நன்று என்று
ஓதிமற்று எல்லா உயிரும் அஃது என்று,
  உயிர்கள் மெய்விட்டு,
ஆதிப் பரனோடு ஒன்றும் என்று சொல்லும்
  அவ் அல்லல் எல்லாம்
வாதில் வென்றான், எம் இராமாநுசன்
  மெய்ம்மதிக்கடலே

என்றும்,

கடல் அளவாய திசை எட்டினுள்ளும்,
  கலி இருளே
மிடைதரு காலத்து இராமாநுசன்,
  மிக்க நான்மறையின்
சுடர் ஒளியால் அவ் இருளைத்
  துரத்திலனேல் உயிரை
உடையவன், நாரணன் என்று அறிவார்
  இல்லை உற்று உணர்ந்தே.

என்றும் போற்றுகின்றார்.

**மணவாள மாமுனிகளின் புகழ் வாழி**

வேத-பிரம்ம சூத்திரங்களில் பொதிந்து கிடக்கும் திருமால் திருநெறியை ஆழ்வார்கள் தங்கள் திவ்யப் பிரபந்தங்களில் பரக்கத் திருவாய் மலர்ந்தருளியதை உடையவர் உலகோருக்கு விளக்கியருளினார். ஆசாரியர்கள் அருளிச் செய்த வியாக்கியானங்களையும் போற்றினார். இந்த எம்பெருமானார் தரிசனத்தை ஆதரித்து ஸ்ரீமணவாள மாமுனிகள் தம் உபதேச ரத்தின மாலையில், வடமொழி வேதமும், ஆழ்வார்களுடைய தென்மொழி வேதமும், ஆசாரியர்களுடைய வியாக்கியானங்களும் தத்துவத்திரயமான ஒரே கருத்தை ஒரே மிடறாகப் பேசுவதால் ஒன்றாக இணைந்து வாழ மங்களாசாசனம் செய்தருளுகிறார்!

''ஆழ்வார்கள் வாழி! அருளிச்செயல் வாழி!
தாழ்வாதும் இல் குரவர் தாம் வாழி!—ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி!
செய்யமறை தன்னுடனே சேர்ந்து!

மேலும்:

ஆழ்வார்கள் ஏற்றம்! அருளிச்செயல் ஏற்றம்!
தாழ்வாதும் இன்றி அவைதான் வளர்த்தோர்—
  ஏழ்பாரும்
உய்ய அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்
  லாம்
வையம் அறியப் பகர்வோம் வாய்ந்து!

எனப் பாரித்து, ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும் ஆசாரியர்களுடைய வியாக்கியானங்களையும் கனக்க மதிக்கவேண்டுமென்று தம் மனத்திற்கு உணர்த்தும் வழியாகத்

தெருள் உற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் ஆர்?
அருளிச் செயலை அறிவார் ஆர்?—அருள் பெற்ற
நாதமுனி முதலாம்நம் தேசிகரை அல்லால்
பேதை மனமே! உண்டோ பேசு!

என்று நம்போல் வார்க்கு உபதேசித்தருள்கின்றார்.

**முடிவுரை :**

இங்ஙனம் மாதவனும் மயர்வறமதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்களும், மதிக்கடலாம் இராமாநுஜரும், மணவாளமாமுனிகளும் உபதேசித்து அருளியுள்ள விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைக் கடைப்பிடித்து அனைவரும் வாழ்ந்து உய்ய வேண்டுமென்பது அவா.

ஆகவே, நம் ஸ்ரீவைஷ்ணவ சமயத்தின் மேன்மையை உணர்ந்து அதன் தனிச் சிறப்புகளாக விளங்கும் ஆழ்வார், ஆசார்யர்களின் அருளிச் செயல்களைப் பரப்பி, திவ்விய தேசங்களையும் பொலிவுறச் செய்து ஸ்ரீவைஷ்ணவ உலகு பொலிந்து விளங்கும்படி அனைவரும் தொண்டாற்ற வேண்டுமென வேண்டித் தலைக் கட்டுகிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

**

**(செய்திச் சுருக்கம்)**

**விநாயக சதுர்த்தி விழா**

சென்னை இலிங்கிச் செட்டித் தெருவில் உள்ள மறைமலை அடிகள் நூல்நிலையத்தின் சார்பில், விநாயக சதுர்த்தி விழா 28-8-'76 சனிக்கிழமை அன்று மாலை, மிகவும் சிறப்புற நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. எம். கே. **பாலசுப்பிரமணியம்**, I.A.S. அவர்கள், தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். 'திருக்கோயில்' ஆசிரியர், திரு. ந.ரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்., அவர்களின் 'விநாயகர் மாட்சி' என்னும் சொற்பொழிவும், திருமதி ஜானகி சுவாமிநாதன் இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள், வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள்.

**திருப்பணித் துவக்க விழா**

திருவானைக்காவல் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஜம்புகேஸ்வரர் திருக்கோயிலில், காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகள் அருளாணையின்படி, அக்கோயிலின் தெய்வீகம் மிக்க வடக்குத் திருநீற்றான் திருமதில் 0.855' திருப்பணி, புதன்கிழமை காலை 9-30 மணி அளவில், அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. **எம். கே. பாலசுப்பிரமணியம்**, I.A.S. அவர்களால், வேதம் ஆகமம் திருமுறை ஆகியவற்றின் ஆசீர்வாதத்துடன் துவக்கி வைக்கப் பெற்றது. அன்றுமாலை திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளியின் சரசுவதி மகாலில் நடைபெற்ற கூட்டத்திற்குத் திரு எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S. அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. டி. எம். நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அறநெறிக்கழகத் தலைவர் திரு ஜி. கனகசபைப்பிள்ளை, M.A., B.T. '' திருக்கோயில் '' ஆசிரியர்திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., திரு எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி செட்டியார், திருச்சி வானொலி நிலையம் திரு. சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திருப்பணிக் குழுவின் தலைவர் திரு. கே. சந்தானம் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.

# பில்ஹணஸ்தவம்

'மும்மொழிக் கொண்டல்'
திரு பே. திருஞானசம்பந்தம், M.A., L.T.,
சென்னை.

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். ஆதலால் காஷ்மீரம் முதல் குமரி வரை சிவனின் புகழைப் பாடிய புலவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள் என்பதில் வியப்பில்லை. காஷ்மீர சைவமும், தென்னாட்டு சைவமும் சிவாகமங்களின் அடிப்படையில் தோன்றியவை எனினும், சங்கரர் காலத்திற்குப்பின் காஷ்மீர சைவத்தில் ஏகான்மவாதக் கொள்கையின் மணம் வீசக் காண்கிறோம். எனினும், சிவனே பரம்பொருள் என்பதிலும் அவனைத் துதிக்கும் முறையிலும் பெரிதும் வேறுபாடில்லை.

காஷ்மீரத் தலைநகரான பிரவரபுரத்தருகே பதினோராம் நூற்றாண்டில் பிறந்த பில்ஹணன் என்ற சம்ஸ்கிருத கவி, இராமேசுவரம் வரை சென்று ஈசனை வழிபட்டு சாளுக்கிய வேந்தனை விக்கிரமாதித்ய திரிபுவனமல்லனின் அவைக்களப் புலவனாக இருந்து விக்கிரமாதித்ய தேவ சரிதம் என்ற 18 சருக்கங்கள் கொண்ட பெருங் காப்பியத்தையும், கர்ணசுந்தரீ என்ற நாடகத்தையும், சிவஸ்துதி என்றும் பில்ஹணஸ்தவம் என்றும் கூறப்படும் தோத்திர நூலையும் சம்ஸ்கிருதத்தில் ஆக்கியிருக்கிறான். சிவஸ்துதியிலிருந்து சில பகுதிகளைக் காண்போம்.

'வேண்டுதல் வேண்டாமையிலான்' நம் சிவன். உயர்ந்த பொருள் தாழ்ந்த பொருள் என்பது அவனுக்குக் கிடையாது. எடுத்துக் காட்டு வேண்டுமா? பாருங்களேன். அவன் தலையில் ஒளிவிடும் பிறைமதி; மார்பில் மண்டையோட்டு மாலை! உடலில் ஒரு பக்கம் பார்வதியைக் குழைந்ததால் பரிமளிக்கும் சந்தனப் பூச்சு; மறுபக்கம் சுடலைப்பொடியின் நெடி! அப்படியிருக்கும்போது, பாணன் முதலான தலையான கவிகளின் அலங்காரக் கவிதையை அகங் குளிரக் கேட்ட அச்சிவன், என் புன்சொல்லைக் கேளாமலா போய்விடுவான் என்று அடக்கத்துடன் கவிஞன் தொடங்குகிறான்.

'பக்தி வலையிற் படுவோன் காண்க' என்றார் மணிவாசகர். பெருங்கோவில்களைக் கட்டுவதும், அபிஷேகங்களைச் செய்வதும், பட்டாடைகள் சாத்துவதும், நறும்புகை காட்டுவதும், அறுசுவை அன்னம் நிவேதிப்பதும் தேவைதானா? இவையின்றி 'யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை' என்பதுபோல தூய பக்தியுடன் அவனை வழிபட்டால் போதுமே. மேற்கூறப்பட்டவை வேண்டாம் என்பதற்கு கவிதை நயத்துடன் வேறு காரணங்களையும் காட்டுகிறார் கவிஞர். இடுகாட்டில் நட்டமிடுகிறவருக்குப் பெருங் கோவில்கள் எதற்கு? அங்குள்ள எலும்பைத் தொடுகின்றவருக்குப் பன்னீரபிஷேகம் எதற்கு? எண்திசைகளையுமே ஆடையாகக் கொண்டவனுக்குப் பட்டாடை எதற்கு? சாம்பரைப் பூசுகின்றவருக்கு சவ்வாது எதற்கு? இடுகாட்டுப் புகைபடிந்த மேனியருக்கு நறுமணப்புகை எதற்கு? காலகூட விடத்தை உண்பவருக்கு சர்க்கரைப் பொங்கல் நைவேத்யம் எதற்கு என்று கேள்விக்கணைகளைத் தொடுக்கிறார் பில்ஹணர், பக்தருக்கே உள்ள உரிமையுடன்.

மக்களிடையே இம்சை நெறியும், தூய்மையற்ற தன்மையும் இருப்பதைக் கவிஞர் காண்கிறார். ஆனால் அவற்றில் குற்றம் காணவில்லை. சாமர்த்தியமாகப் பேசுகிறார். 'தலைவன் எவ்வழி அவ்வழிதானே மக்கள். 'உலகங்களுக்கெல்லாம் தலைவனான தாங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள்? வேதமோதும் பிரமனின் சிரத்தைக் கொய்யவில்லையா? மண்டையோட்டைக் கையில் ஏந்த வில்லையா? இம்சைக்கும் தூய்மையற்ற தன்மைக்கும் இவற்றைக் காட்டிலும் மேலான சான்றைக் காணமுடியுமா? நீங்கள் யஜமானர், நாங்கள் அடிமைகள். தங்கள் வழியில் தானே நடக்கிறோம் என்று சதுரப்பாட்டுடன் வினவுகிறார்.

மற்றொரு சுலோகத்தில் சிவபெருமானை நையாண்டி செய்கிறார். சுந்தரர் செய்ய வில்லையா? அது பக்தர்களின் உரிமை போலும். 'உமது தலையிலே எறிதரங்கம் ஆர்ப்பரிக்க கங்காநதி பொங்கி வழிகிறது. கடல் போன்ற அவ்வளவு நீரை என்றும் சுமந்து கொண்டே இருக்கும் நீர், பில்வபத்திரத்தோடு நாங்கள் அளிக்கும் ஒருசில நீர்த்திவலைகளுக்கு ஏனையா ஏங்கி நிற்கிறீர் என்று கேட்கிறார் கவிஞர். கேள்விக்குப் பதில் சிவனா சொல்லப் போகிறார்? கவிஞர் தானே சொல்ல வேண்டும். பில்ஹணர் 'நீர் தான் பிக்ஷாடனர் ஆயிற்றே. எந்த பிக்ஷை வாவது கிடைத்ததை வேண்டாம் என்பாரா?' என்று உலகியலை யொட்டி ரசனையுடன் கூறுகிறார்.

அணிநூல்வல்லார் காவிய நாயகர்களை நால்வகையாகப் பிரிப்பர். ஒரே நாயகியிடத்தில் ராமனைப்போல் அன்பு பூண்டவனை அநுகூல நாயகன் என்றும், பல நாயகிகளிடத்தும் ஒத்த அன்பு பூண்டவனைத் தக்ஷிண நாயகன் என்றும், பயமின்றிப் பிற நாயகியிடத்தில் அன்பு பூண்டவனைத் திருஷ்ட நாயகன் என்றும், பிற நாயகியிடத்தில் மறைவாக அன்பு செலுத்துகிறவனைச் சட நாயகன் என்றும் அழைப்பர். லோகநாயகனான சிவன் உலகிலுள்ள நால்வகை நாயகர்களின் ஒரே பிரதிநிதியாக இருக்கிறாராம். இவரிடம் நால்வரின் மாறுபட்ட இயல்புகளும்

பொருந்தியிருக்கின்றன. என்பதில் வியப் பென்ன. அவன்தான் எல்லாமாய் அல்லதுமாய் இருப்பவனுயிற்றே. எப்படி அவர் நால்வகை நாயகராக நடிக்கிருர் என்பதை பில்ஹணர் நயம்பட நவில்கிருர்.

பார்வதி தேவியை இடப்பாகத்தே உடைய அவர் கங்கையை கேவலம் ஒரு ஜலம் (ஜடம்) என்றும் தன் அன்பெல்லாம் பார்வதிக்கே என் றும் கூறி அநுகூலநாயகனுகக் காட்சியளிக்கிருர். விரித்த செஞ்சடையாட அவர் நடனமாடும் போது கங்கையும் களிக்கிருள் பார்வதியும் பூரிக்கிருள். ஆகவே தக்ஷிண நாயகன் ஆகின் ருன். ஒரொருகால் கங்கையின் மதிமுகம் வெளியே தெரிகிறதே என்று அஞ்சவில்லை. எனவே திருஷ்டநாயகனுகவும் காணப்படுகிருன். பிற சமயங்களில் சடாபாரத்தில் கங்கையை மறைத்து வைத்துக் கொண்டு தேவியிடத்தில் அன்பு காட்டுவதால் சடநாயகனுகவும் காட்சி தருகிருன். லோகநாயகரின் காதற்சுவையைக் கண்ட நாம், அவரது வீரச்சுவையையும் காண வேண்டாவா? பல்சுவைக் கலைஞராயிற்றே நம் பெருமான்.

காமனை எரிபொருளாகக் கொண்டு நெற்றிக்கண்ணுல் காய்ந்தார் அக்காமவேளை அன்ருெருநாள். பினுகமெனும் வில்லேந்திய வீரன் காலனையும் கோபத்தீயில் எரியச் செய் தார். காலகாலனும் அவர், முப்புரங்களையும் முதலாகுதிகளாக அவ்வேள்வித்தீயில் சொரிந் தார். அன்ருெருகால், யுகாந்த சம்ஹார காலத்தில் இவ்வுலகம் முழுவதையுமே அவ் வேள்வித்தீயில் பூர்ணுகுதியாக அளிக்கப் போகிருர்! ஆம், உலகையே தீயில் அளிப்பதும் அவர்தம் தண்ணளியே. புல்லாய்ப் பூடாய்ப் பறவையாய்க் கணங்களாய் மக்களாய் பல்வேறு பிறப்பிறப்புக்களில் உழன்ற உயிர்களுக்கு ஓய்வுதரத்தானே இச்சம்ஹாரம்.

எக்கோலம் பூண்டாலும், எச்செயலைச் செய்தாலும் நீரே மூவுலகும் போற்றும் முதல் வன், உம்மையே நான் என்றும் போற்றுவேன், என்றும் உமக்கே ஆட்பட்டேன் என்று பரவு கிருர் பில்ஹணர்.



தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் திருத்தணிகைக் கோவிலுக்கு வருகை தருதல்.

# கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்.



(முற்றொடர்ச்சி)

**தக்கனுக்குப் பிரமன் உபதேசம்:**

''மகனே! முன்னே என்பால் என்ன உணர்ந்தாய்? இப்போது என்ன செய்தாய்? என்ன நினைத்தாய்? இத்தனை நலங்களும் யாரிடம் பெற்றாய்? என்ன துன்பம் அடைந்தாய்? இப்போது உன் எண்ணம் என்ன? பிரம தேவர் தட்சனைப் பார்த்துக் கூறினார்.

யாதுமுன் உணர்ந்தனை; யாது செய்தனை;
யாதவண் கருதினை யாரில் பெற்றனை;
யாதுபின் செய்தனை; யாது பட்டனை
யாதிவண் பெற்றனை யாதுன் எண்ணமே.

அழிவில்லாத அமரர்களுக்கும், தவவலிமை மிகுந்த முனிவர்களுக்கும், பூதலத்தில் வாழும் அந்தணர்களுக்கும் நீ எமனாக ஆனாய்.

சீரையுந் தொலைத்தனை; சிறந்த தக்கனும்
பேரையுந் தொலைத்தனை; பேதை யாகிநின்
ஏரையுந் தொலைத்தனை; ஏவல் போற்றுநர்
ஆரையுந் தொலைத்தனை அலக்கண் எய்தினாய்.

தன்னாலுந் தெரியாது; சொன்னாலுந் தெரியாது என்ற பழிமொழிக்கு நீ இலக்கியமானாய். வரங்கொடுத்த வள்ளலை யிகழ்ந்தாய். ஆன்றோர்கள் கூறிய அறவுரையைக் கேட்டாயில்லை. வேதங்களை ஓதிய நீ பேதையாகி விட்டாய். விதிவழி மதி சென்றது. ஆதலால் இனி காதலால் அரனாரை அருச்சனை செய். பிறவித் துயரம் நீங்க அயர்ச்சி யில்லாது முயற்சி செய். உயர்ச்சி யடைவாய்.

ஆட்டு முகமுடைய தட்சன், திருந்திய உள்ளத்துடன், தான் செய்த பிழைக்கு வருந்தி, ''தந்தையே! தாங்கள் உரைத்த வண்ணம் சிவ பூசை செய்து பவ நோய் களைவேன். முன் ஒரு சமயம் நீரும் திருமாலும் மதி மயக்கமுற்று நின்றதையும், சிவனருள் செய்ததையும் கூறும். என் அறிவு மேலும் தெளிவு பெறும்' என்றான். பிரமதேவர் கூறினார்.

மனித யாண்டு முந்நூற்றறுபது சேர்ந்தால் தேவயாண்டு ஒன்று. இந்த தேவயாண்டு பனிரண்டாயிரம் சேர்ந்தால் ஒரு சதுர் யுகம். அது எனக்கு ஓர் பகலாகும். அப்போது உலகம் யாவும் நீருள் முழுகிவிடும். எங்கும் வெள்ளமாகிவிடும். நான் ஓய்வு எடுத்து உறங்கச் செல்லுவேன். அப்போது அந்த வெள்ளத்தில் திருமால் ஓராலிலை மீது சிவசிந்தையுடன் படுத்திருப்பார்.

வாளும் ஒடுங்கும், பரிதி மாமதியொடுங்கும்
நாளும் ஒடுங்கும், தமது நாளும்ஒடுங்குற்றே
கோளும் ஒடுங்கும், குலிசபாணி முதல்வானோர்
கேளும் ஒடுங்கும், புவனி கேடுபடும்அன்றே.

ஜனலோகத்தில் வாழும் முனிவர்கள் புகழ, ஆலிலைச் சயனனும் கண்ணன் கண் விழித்து, பன்றி வடிவாகி நீரில் முழுகிய நிலத்தைப் பந்து போல் எடுத்து நிலை நிறுத்தினார்.

அப்போது ஆயிரம் சதுர்யுகம் கழிந்து எனக்குப் பகல் வந்தது. நாம் உலகை எடுத்து நிலைநிறுத்தினோம் என்ற செருக்குடன் நாராயணர் பாற்கடலில் படுத்துறங்கினார்.

நான் தேவரையும் மனிதரையும் விலங்குகளையும் செடி கொடிகளையும் மண்ணையும் விண்ணையும் படைத்தேன். அவ்வாறு படைத்த எனக்கு ''யானே பரம்'' என்னைவிட வேறு கடவுள் இல்லை'' என்று எண்ணிச் செருக்குற்றேன். நாம் உறங்கினால் உலகம் ஒடுங்குகின்றது. நாம் விழித்தால் உலகம் உண்டாகின்றது. என்று எண்ணி, நான் படைத்த மலைகள் கடல்கள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்து வந்தேன். பாற்கடலில் கார்க்கடல்போல் கண் துயிலும் மாதவன் மார்பில் ஓங்கி ஒரு அடி அடித்து ''எழுந்திரு'' என்றேன்.

''நீ யார்?'' என்றேன். ''நான் உன் தந்தை, இன்னும் உனக்குத் தூக்க மயக்கம் போகவில்லையோ? என்று கூறி '' சீதரனார் சிரித்தார்.

நான் அவரைப் பார்த்து ''உனக்குத்தான் தூக்க மயக்கம்; நான்தான் உலகங்களைப் படைக்கின்றவன். உனக்குத் தந்தை; யானே பிரமம்'' என்றேன்.

நாராயணர், ''நான் முகனே! நீ என் நாபியில் பிறந்தவன். ஆதலால் நான் உன் தந்தை'' என்றார்.

நான் அவரைப் பார்த்து ''நீ தெளிவில்லாமல் பேசுகின்றாய். உன் உந்தியில் வந்ததால் நீ யென் பிதாவோ? பேஷ். அப்படியாயின் கட்டையில் பிறந்த கனலுக்குக் கட்டை பிதா வாகுமோ? நீ தூணில் பிறந்தாயே. அதனால் தூண் உனக்குத் தந்தையா? பிருகு முனிவருடைய சாபத்தால் நீ எடுத்த பத்துப் பிறவிகளிலும் நான் உன் தலையில் எழுதியுள்ளேன். அவ்வாறு எழுதி என் கை சிறந்துளது'' என்றேன்.

இதனைக் கேட்ட விஷ்ணு வெகுண்டு கரங்களைக் கொட்டிக் கூறுவார். ''உன் உச்சித் தலையை சிவமூர்த்தி நகத்தால் கிள்ளி எடுத்தாரே. அத்தலையை இன்று வரை படைத்துக் கொண்டாயில்லை. நீ படைப்புத் தொழில் பண்ணுகின்ற லட்சணம் விளங்குகின்றதல்லவா? மூடனே! உன்னைப் பெற்ற தாயும் நானே, தந்தையும் நானே, கடவுளும் நானே. குருவும் நானே. மாயையால் மதி மயங்கினாய். பொன்னின்றிப் பூண் இல்லை. இதுபோல் நானின்றி நீயில்லை.''

''நான்பரம்'' ''நான்பரம்'' என்று இருவரும் இகலினோம். திருமால் வில் வளைத்து என்மேல் எண்ணில்லாத கணைகளைத் தூவினார். நான் தருப்பைகளையே பாணமாக்கிச் சொரிந்தேன். அவர் நாராயணப் படையை ஏவினார். நான் என்னுடைய பிரமாஸ்திரத்தை ஏவித் தடுத்தேன்.

திருமால் சிவாஸ்திரத்தை யெடுத்து மனதால் பூசனை செய்து என் மேல் விடுத்தார். நானும் எனக்கு முன் சிவபிரான் தந்த சிவாஸ்திரத்தை விடுத்தேன். அப்படைகள் கக்கிய நெருப்பு மழையால் உலகங்கள் எரிந்தன. கடல்கள் வற்றின. மலைகள் கரிந்தன. அந்த இரு படைகளும் உலகெங்கும் உலாவின.

அப்போது என் முகத்தில் தோன்றிய நாரத முனிவன் வந்து எங்களை நோக்கிக் கூறுவனாயினன். நீங்கள் இருவரும் யானே பரம் பொருள் என்று போர் புரிகின்றீர்கள். இருவரும் சிவ கணையை ஏவி அவமாக உலகங்களை யழிக்கின்றீர்கள். அக்கணைகளைத் தந்தவர் யார்? என்று உணர்ந்தீர்களில்லை. போரை விட்டுச் சமாதானம் அடையுங்கள். இல்லையேல் ஆதியாய் அருவுருவமான ஓர் பெருஞ் சோதியார் உமது நடுவில் தோன்றுவார்'' என்று புகன்று போனான்.

அந்த அறவுரையை நாங்கள் கேட்டும் அமைதி பெறாது ஆயிரம் ஆண்டுகள் அமர் புரிந்தோம். எங்களை அடக்கியாள வேண்டும் என்று எங்கள் இடையே ஒரு பேரொலி தூண் போல் தோன்றியது. நாங்கள் அதைக் கண்டு அதிசயமும் அச்சமும் அடைந்தோம்.

''சிறுவர்களே! உங்கள் போரை விடுத்து இதன் அடிமுடி தேடித் தெளிவீர்'' என்று ஒரு பேரொலி வானில் தோன்றியது. அதைக் கேட்ட நாங்கள் சினந் தணிந்தோம். அகந்தை கொண்ட மனந் தணியவில்லை. அடிமுடி கண்டவரே பெரியர் என்று முடிவு செய்தோம். நான் முடி காண்பேன் என்று கூறினேன். அச்சுதர் அடி காண்பேன் என்றார். நடை பயிலாத இளஞ்சிறுவர்கள் வானில் உள்ள கதிரவனைக் கையால் பிடிக்க முயன்றது போல் இருந்தது எங்கள் செயல்.

நூறு யோசனை உயரமும் அகலமும் உடைய பன்றி வடிவங் கொண்டு திருமால் தமது கொம்பால் நிலத்தைக் கிளைத்துக் கொண்டு சென்றார். நான் அன்னமாகி விண்ணில் பறந்து தேடினேன். கீழும் மேலும் செல்லச் செல்ல அடியும் முடியும் நீண்டு கொண்டேயிருந்தன.

திருமால் ஆயிரம் ஆண்டுகள் தேடினார். ஏழுலகங்களையும் அகழ்ந்தார். அடி தெரியவில்லை. அயர்ந்தார். உயிர்த்து மேனி மெலிவுற்றார். சிவனடியைச் சிந்தித்து வந்தித்தார்.

அன்னமாகிப் பறந்து நான் பட்டதை என்ன என்று கூறுவேன்? சிறகுகள் அயர்ந்தன. சோதியின் முடி தெரியவில்லை. உள்ளம் வெந்து நொந்து மீண்டேன்.

நானும் நாராயணரும் அச்சோதியைச் சோதிக்காமல் வழிபாடு செய்தோம். முக்கண் மூர்த்தி எங்கள் முன் தோன்றியருள் புரிந்தார்.

எம்பெருமான் எங்களுக்கு அருள் புரிந்து ''உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று கேட்டார். ''அன்பு ஒன்றுதான் வேண்டும்'' என்று நாங்கள் வரம் கேட்டோம். அச்சோதி மெல்லக் குறுகி ஒரு மலை வடிவாயிற்று.

அச்சோதி எங்கள் முன் தோன்றிய நாள் சிவராத்திரி யாகும். நாங்கள் அண்ணாமலையை மும்முறை வலம் வந்து செம்மை பெற்றோம். ஆதலால் மகனே நீ சிவத்தை வழிபட்டு உய்க'' என்று பிரம தேவர் தட்சனுக்குக் கூறிச், சென்றார்.

**தட்சன் சிவ பூசை செய் படலம்:**

பிரம தேவன் புகன்றதைக் கேட்ட தட்சன் காசியம்பதிக்குச் சென்று கங்கையில் முழுகினான். பின்னர் திருநீற்றில் மூழ்கினான். கங்கைக்கரையில் மணிகர்ணிகையில் ஓர் ஆலயம் அமைத்து அதில் ஒரு சிவலிங்கத்தை எழுந்தருளப் பண்ணி, ஆயிரம் ஆண்டுகள் அன்புடன் வழிபாடு செய்தான்.

கரை மிடற்றண்ணல் கருணையுடன் காட்சி தந்தருளினார். தட்சன் எம்பெருமானுடைய இணையடிகள் மீது வீழ்ந்தான். ''எந்தையே! அகந்தையால் உம்மை யிகழ்ந்தேன். என் பிழைகளைப் பொறுத்து அருள் புரியும்'' என்றான். சிவபெருமான் தட்சனுக்கு அருள் புரிந்து கணங்கட்கு நாயகனும் பதம் நல்கினார்.

திருமால் நான்முகன் இந்திரன் ஆகியோரும் பிற தேவர்களும் வீரபத்திரரை வணங்கித் தத்தம் இடமெய்திச் சிவபூசை ஆங்காங்கே செய்து தத்தம் உடலிலுற்ற ஊனங்களைப் போக்கிக் கொண்டனர்.

**கந்த விரதப் படலம்:**

கருவூரில் அரசு புரிந்து வந்த முசுகுந்தச் சக்ரவர்த்தி ஒரு நாள் வசிஷ்ட முனிவரை வணங்கித் துதித்து, கந்தவேளுக்குரிய விரதங்களைக் கூறும்படி கேட்டார். வசிஷ்ட முனிவரும் அவ்வாறே பின்வருமாறு கூறலானார்.

வார விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம் சிறந்தது. பகீரதன் என்னும் சக்கரவர்த்தி கோரன் என்னும் அரக்கனால் தன் ஆட்சி கவரப்பட்டு அல்லலுற்றான். அவன் சுக்கிராச்சாரியார் சொற்படி வியாழன் பகலுணவும், சனிக்கிழமை பகலுணவும் கொண்டு, வெள்ளிக்கிழமையன்று ஊண் உறக்கம் இன்றி, மூன்று ஆண்டுகள் விரதமிருந்தான். கந்தவேளின் வேற்படை வந்து அரக்கனின் உயிரைக் கவர்ந்து சென்றது. பகீரதன் மீண்டும் தன் அரசைப் பெற்று மகிழ்ந்தான்.

சப்த ரிஷிகளில் சிறந்தவராகத் திகழ விரும்பிய நாரதர் விநாயகப் பெருமான் சொற்படி கார்த்திகை விரதமிருந்து முருகவேளை வழிபட்டார். முதல் நாள் பகல் மட்டும் உணவு கொண்டு கார்த்திகை யன்று விடியற் காலையில் நீராடி, தூய ஆடைகளை யுடுத்தி வழிபாடுகளை முடித்து, முதல்வன் புராணத்தைப்படித்துவிட்டு நீர் மட்டும் அருந்தி, இரவு முழுவதும் தியானம் புரிந்து கொண்டிருந்து, மறுநாள் காலை வழிபாடுகளை முடித்து விட்டுப் பகலில் முனிவர்களுடன் சேர்ந்து பாரணை செய்தார். இப்படிப் பன்னிரண்டு ஆண்டுகள் விரதமிருந்து ஏழு முனிவர்களில் மேலான பதவியை யடைந்தார். இன்னும் பலர் கார்த்திகை விரதத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றனர்.

ஐப்பசி மாதம் வளர் பிறையில் பிரதமை முதல் ஆறு நாட்களும் காலையில் நீராடி விதிப்படி பூசை செய்து, புராணத்தையும் படித்து வரவேண்டும். நிதமும் சிறிது நீர் மட்டும் அருந்தி வந்து ஏழாம் நாள் சிறப்பாக வழிபாடாற்றிப் பாரணம் செய்ய வேண்டும். இவ்வாறு, தேவர்களும் முனிவர்களும் விரதமிருந்து மேன்மை பெற்றனர். இதுவே ஒப்பில்லாத விரதம்.

வசிஷ்ட முனிவர் கூறியதைக் கேட்ட முசுகுந்தன் நெடுங்காலம் அந்த விரதங்களைக் கடைப்பிடித்து வந்தான். கந்தவேள் மயில் வாகன மூர்த்தியாகத் தன் பரிவாரங்களோடு அவன்முன் காட்சியளித்தார். முசுகுந்தன் உலகம் முழுவதும் அரசாளும் வண்ணம் வீரவாகு முதலிய ஒன்பது வீரர்களையும் தனக்குத் துணைவர்களாகத் தந்தருளுமாறு வரம் வேண்டினன். முருகவேளும் அவ்வாறே அருளினர்.

நவ வீரர்கள் சற்றுத் தயங்கினர். பெருமான் முசுகுந்தனின் அன்பின் சிறப்பை அவர்களுக்குக் கூறிச் சில காலம் பூமியில் இருந்து வரப் பணித்து விட்டு மறைந்தனர். அவர்களும் அவ்வாறே பூமியில் பிறந்து துணைவர்களானார்கள். முசுகுந்தன் கருவூரிலிருந்து ஆட்சி புரிந்து வந்தான்.

ஒரு சமயம் விண்ணுலகம் சென்று இந்திரனுக்குச் சேனாதிபதியாக இருந்து வலன் என்னும் அசுரனை யழிக்கத் துணை புரிந்தான். பின்பு இந்திரன் பூசை செய்து வந்த சோமாஸ்கந்தராகிய தியாகராஜப் பெருமானைக் கண்டு பரவசமாகித் துதித்தான் :

ஏகனே போற்றி யார்க்கும்
 ஈசனே போற்றி அம்மை
பாகனே போற்றி மேலாம்
 பரஞ்சுடர் உருவே போற்றி
மேகமார் களனே போற்றி
 விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி
 முடித்திடும் முதல்வா போற்றி. (1)

அம்புயா சனன்மால் இன்னும்
 அளப்பருந் திறத்தாய் போற்றி
நம்பனே போற்றி எங்கள்
 நாதனே போற்றி கோதில்
செம்பொனே மணியே போற்றி
 சிவபெரு மானே போற்றி
எம்பிரான் போற்றி முக்கண்
 இறைவனே போற்றி போற்றி. (2)

பொங்கரா அணிக ளாகப்
 புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்தில் பூதி
 அணிந்திடும் ஆதி போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல்
 வியன்புயம் போர்த்தாய் போற்றி
சங்கரா பரமா போற்றி
 தாணுவே போற்றி போற்றி (3)

முன்னெனும் பொருளுக் கெல்லாம்
 முன்னவா போற்றி முப்பால்
மன்னுயிர்க் குயிரே போற்றி
 மறைகளின் முடிவே போற்றி
என்னைமுன் வலிந்தாட் கொண்டே
 இருநிலம் விடுத்தாய் போற்றி
நின்னுருக் காட்டி என்னை
 நினைப்பித்த நித்தா போற்றி (4)

எவ்வெவர் தம்மை யேனும்
 யாவரே எனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே
 அவர்க்கருள் தருவாய் போற்றி
மெய்வரு தெளிவில் உன்னை
 வெளிப்பட உணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி
 சிறப்பொடு, தருவாய் போற்றி (5)

அம்புய மலர்மேல் அண்ணல்
அச்சுதனாகி வானோர்
தம்பதம் எமக்கு நல்கும்
தற்பரா என்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேதம்
நவின்றிட அடைந்தோர்க் கெல்லாம்
உம்பர்தம் பதமும் ஈயும்
உலகுடை முதல்வா போற்றி (6)

என்றெல்லாம் பலவகைகளில் முசுகுந்தன் இறைவனைத் துதித்தான். பாற்கடலில் துயில் புரியும் பரந்தாமன் பூசித்து வந்த மூர்த்தியை இந்திரன் பெற்று வந்து வழிபட்டுக் கொண்டிருந்தான். அதைப்பூவுலகிற்குக் கொண்டு வந்து பூசிக்க விரும்பினான் முசுகுந்தன். இந்திரனுக்கு விருப்பமில்லை. எனினும் அதனை முதலில் பூசித்து வந்த திருமால் இணங்கினால் அதைத் தருவதாகக் கூறினான். முசுகுந்தச் சக்ரவர்த்தியும் திருமாலை வேண்டி அனுமதி பெற்றார். பின்னும் இந்திரன் தான் பூசித்து வந்த மூர்த்தியைப் பிரிய மனமில்லாமல் அதே மாதிரி ஆறு மூர்த்திகளைச் செய்வித்தான். அவைகளை ஒவ்வொன்றாக முசுகுந்தனுக்குக் கொடுத்தான். முசுகுந்தன் ஒவ்வொன்றையும் பெற்றுக் கொண்டு முதலில் கண்ட மூர்த்தி அவைகளல்ல வென்று தெரிவித்தான். பின்னர் இந்திரனிடம் ஏழு மூர்த்திகளையும் பெற்றுக் கொண்டு பூவுலகுக்குக் கொண்டு வந்தான்; திருமால் பூசித்த மூர்த்தியைத் திருவாரூரிலும், மற்ற மூர்த்திகளைத் திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயில், திருக்கோளிலியூர், திருவாய்மூர், திருமறைக்காடு என்ற ஆறு இடங்களிலும் ஒரே நாளில் நிறுவி விதிப்படி வழிபாடுகளியற்றினான். பின்னர்த் திருவாரூரில் சிறப்பாக விழா நிகழ ஏற்பாடு செய்தான். நெடுங்காலம் அரசு புரிந்து, தன் புதல்வனுக்கு முடி சூட்டிவிட்டுத் தவம் புரிந்து விண்ணுலகை யடைந்து, கந்த வேள் திருவடிகளை வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தான்.

—(தொடரும்.)



சென்னைச் சைதாப்பேட்டைச் செங்குந்த கோட்டம்,
அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் திருமண மண்டபத்தை,
அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்., அவர்கள் திறப்பு விழாச் செய்தல்.

# அம்பலவாண தேசிகர்
# பிள்ளைத்தமிழ்*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

முன்னுரை :

அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த அரும் பெருங்கவிஞர்களுள், சென்ற நூற்றுண்டில் வாழ்ந்திருந்த மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் (1815-1876), குறிப்பிடத்தக்க பெருஞ் சிறப்புடையவர் ஆவர். கோவை உலா தூது கலம்பகம் அந்தாதி புராணம் முதலிய பிரபந்தங்கள் அனைத்துமே, அவரால் பாடப்பெற்றுள்ளன. அவைகள் அனைத்துமே, தனித்தனிச் சிறப்பும் அமைப்பும் உடையனவாகத் திகழ்கின்றன. அம்முறையில் பிள்ளைத் தமிழ் பாடுவதிலும், அவர் தமக்கு நிகர் இன்றிச் சிறப்புற்றுத் திகழ்ந்தார். பிள்ளைத் தமிழ் பாடுவதில் குமரகுருபரர் பகழிக்கூத்தர் முதலியவர்கள்தான், பெருந் திறமை பெற்றவர்கள் என்று ஒரு கருத்து, அறிஞர் உலகில் நிலவி வந்தது. அக்கருத்து அறவே மாறி நீங்கும்படி, அருமையான பிள்ளைத் தமிழ் நூல்களைச் சிறப்பாகப் பாடியளித்தவர் என்று, மழவை மகாலிங்க ஐயர், மகாவித்துவான் அவர்களை மிக வியந்து போற்றியுள்ளார். இவ்வாறே, ''பிள்ளைத் தமிழ் நூல்களுக்கு அப்பெயர் ஏன் வந்தது தெரியுமா? மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களால், வேறுபிறர் எவரிலும் மிகச் சிறப்பாகப் பாடப் பெற்றமையால், பிள்ளைத் தமிழ்கள் ''பிள்ளை அவர்கள் பாடிய தமிழ் நூல்கள்'' என்னும் புதிய நல்ல பொருத்தமான பொருளைப் பெற்றன என்று, சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் அவர்கள், மகாவித்துவான் அவர்களின் அளப்பரும் மாட்சிமையினை விளக்கிப் புகழ்ந்து துதிக்கின்றார்.

பெருங் கவிஞர் திரிசிரபுரம் மகாவித்வான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய பிள்ளைத் தமிழ்கள், மொத்தம் எட்டு. அவற்றுள் திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், அகிலாண்ட நாயகி பிள்ளைத்தமிழ், மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ், காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத் தமிழ் என்னும் ஐந்தும், அம்பிகை, பற்றியன. திருவிடைக்கழிப் பிள்ளைத்தமிழ், முருகனைப் பற்றியது. சேக்கிழார் பிள்ளைத்தமிழ், பெரிய புராணம் பாடியருளிய அருண்மொழித் தேவர் பெருமான் ஆகிய அடியவரைப் பற்றியது. அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ், திருவாவடுதுறை ஆதீனத்தில் 15-ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த குருமகா சந்நிதானம் அவர்களைப் பற்றியது.

## அம்பலவாண தேசிகர்

இப்பிள்ளைத் தமிழ்க்குரிய கவிதைத் தலைவர் ஆகிய அம்பலவாண தேசிகர் (கி.பி. 1845—1869), ஏனையர்போல் அருவநிலையில் அன்றி உருவநிலையில் நேர்முகமாக இருந்து பழகியவர். மகாவித்துவான் பிள்ளையவர்களுக்குப் பல்லாற்றானும் தண்ணளிகள் செய்து, அவரைப் போற்றிப் பாராட்டிப் பாதுகாத்தவர் ஆவர். மேலும், இவரே நமது பிள்ளையவர்களைத் திருவாவடுதுறை ஆதீனப் புலவராகத் தேர்ந்தெடுத்து, நியமித்து அமர்த்திக் கொண்டு அருளியவர். 'மகாவித்துவான்' என்ற மாட்சிமை மிக்க சிறப்புப் பட்டமும், இவராலேயே பிள்ளை அவர்களுக்கு வழங்கப்பெற்றது. அதனுல் இவரைப் பற்றிய பிள்ளைத்தமிழ், திருவாவடுதுறை ஆதீன வரலாறுகள்—மரபுகள்—சிறப்புகள்—சைவசித்தாந்த நுட்பக் கருத்துக்கள் முதலியன நிறைந்து, ஏனைய பிள்ளைத் தமிழ்களையெல்லாம் விட, ஒரு வகையில் மிக்க பெருஞ் சிறப்புடையதாகத் திகழ்கின்றது எனலாம்.

இவ்வுண்மையை மகாவித்துவான் பிள்ளை அவர்களே, வேறு ஒரு காரணம் கூறிச் செவ்விதின் எடுத்துக் காட்டி விளக்குகின்றார். பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தம், கவிஞன் தான் விரும்பும் தெய்வத்தையோ தலைவனையோ ஒரு குழந்தையாகப் பாவித்து, அக்குழந்தையின் மூன்றும் திங்கள் தொடங்கி, இருபத்தொன்றும் திங்கள் வரையில், இரண்டு திங்களுக்கு ஒன்றாகப் பத்துப் பருவங்கள் பகுத்து, அவ்வப்பருவத்தில் குழந்தைகளுக்கு இயல்பாக உள்ள பண்பு செயல் நிலை ஆகியவற்றை அமைத்து, முறையே காப்பு தால் செங்கீரை சப்பாணி முத்தம் வருகை அம்புலி சிறுபறை சிற்றில் சிறுதேர்

* சென்னை மயிலை சாஸ்திரி மண்டபத்தில், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூலகத்தின் சார்பில், மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் நூற்றுண்டு விழா நிகழ்ந்த பொழுது, ஆந்திரப் பல்கலைக் கழக முன்னுள் துணைவேந்தர் திரு. கே. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார் முன்னிலையிலும், மதுரைப் பல்கலைக் கழக முன்னுள் துணைவேந்தர் திரு. டாக்டர். தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் தலைமையிலும், ''பிள்ளைத் தமிழ்'' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது. [10—7—76]

என்னும் அப்பத்துப் பருவங்களுக்கும், ஒரு பருவத்திற்குப் பத்துப் பாடல்களாக, மொத்தம் நூறு (100) ஆசிரிய விருத்தப் பாடல்களால் பாடுவதாகும். இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ். பெண்பாலுக்காயின், சிறுபறை—சிற்றில்—சிறுதேர் என்னும் மூன்று பருவங்களை நீக்கி விட்டு, அவற்றிற்குப் பதிலாக முறையே கழங்கு—அம்மானை—ஊசல் என்னும் மூன்று பருவங்களைச் சேர்த்துப் பாடுதல் வேண்டும். இங்ஙனம் பாடும் பிள்ளைத் தமிழில், முதற்கண் அமைவது காப்புப் பருவம். அதன் கண், கவிஞன் தான் பாட மேற்கொண்ட தெய்வம் அல்லது தலைவனாகிய குழந்தையைத் திருமால் முதலிய தெய்வங்கள் காத்தருளும்படி, வேண்டுதல் புரியும் முறையிற் பாடுவது மரபு.

## (1) "கொலைதீர் தெய்வக்" காப்பு

அங்ஙனம் தெய்வங்களை வேண்டுங்கால், அத்தெய்வங்கள் கொலைத்தொழில் செய்யாதனவாக இருத்தல் வேண்டும் என்பது, இலக்கண விதி.

> "கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்
> செங்கீரை தால் சப்பாணி முத்தம்
> வாரானை முதல வகுத்திடும் அம்புலி
> சிறுபறை சிற்றில் சிறுதேர் என்னப்
> பெறுமுறை ஆண்பாற் பிள்ளைப் பாட்டே"

என்று, இவ்விதியினை இலக்கண விளக்கப் பாட்டியல் இனிது வகுத்துக் கூறும். இவ்வாறு கொலைதீர் தெய்வங்களையே காப்புப் பருவத்தில் பாட வேண்டும், என்று கூறும் இலக்கண நூல்களின் விதியினைக் கவிஞர் எவரும் கவனிப்பதும், பின்பற்றுவதும் இல்லை. ஏன் எனில், திருமால் முதலிய எந்தத் தெய்வமும் ஒவ்வோர் அசுரனைக் கொல்ல நேர்ந்துளது. இவ்வாற்றால் கவிஞர் எவருமே பின்பற்றாத, பின்பற்ற இயலாத நிலையில் இருக்க, அவ்விலக்கண விதியினை முழுவதும் தழுவி ஏற்று, நந்திதேவர் சனற்குமாரர் சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டார் அருள்நந்திசிவனார் மறைஞான சம்பந்தர் உமாபதிசிவனார் அருள்நமச்சிவாயர் சித்தர்சிவப்பிரகாசர் நமச்சிவாய மூர்த்திகள் ஆகிய கொலை தீர் தெய்வங்களை மட்டுமே, காப்பாக அமைத்துப் பாடியிருப்பதனால், அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ், ஏனைய எல்லாப் பிள்ளைத்தமிழ்களையும் விட, இது மிக்க பெருஞ் சிறப்பு உடையதாக விளங்குகின்றது என்று, மகாவித்துவான் பிள்ளை அவர்களே, இதன் முதற்கண் குறிப்பிடுகின்றார்!

> "வழிபடு தேவுளும் கொலைதீர் தெய்வம்
> காப்புரைக்க என வகுத்த ஆன்றோர்
> மொழியுணர்ந்தும், அவர்வழிச்சென் றிலர்
> முன்னோர்;
> இரும்புகழ்க் கோமுத்தி எங்கள்
> பொழிகருணைச் சின்மயஅம் பலவாண
> தேசிகன்மேற் புகலப் புக்க
> கழிமகிழ்யாம் அவ்வழிச் சென்றனம்!
> சிறக்கும் இப்பிள்ளைக் கவியும் தானே".

இத்தகைய சிறப்பு மிக்க அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழ் முழுவதையுமே மிக விரிவாக ஆராய்ந்து சுவைத்தல் இங்கு நமக்கு இயலாதாயினும், அதன்கண் இடையிடையே ஆங்காங்கு வரும் ஒரு சில சுவைமிக்க பகுதிகளை மட்டும், இங்குக் கண்டுணர்ந்து இன்புறுவோம்.

## காப்புப் பருவம்

(1) நூலின் தொடக்கத்தில் விநாயகர் துதி அமைந்துள்ளது. இப்பாடல் விநாயகரின் இயல்பினைச் சிறப்புற விளக்குகின்றது. விநாயகப் பெருமான் அருமையில் எளிய அழகர். இருளை விரும்புவதும், வளைதோண்டிக் கீழ் நோக்கிச் செல்வதுமாகிய பெருச்சாளி, அவரது திருவடியின் கீழ் உள்ளது. கொடிய நஞ்சையும் விலை மதிப்பரிய மாணிக்கத்தையும் ஒருங்கே யுடைய பாம்பு, அப்பெருமானின் பெருவயிற்றிற் கட்டும் அரைக்கச்சாக அமைந்து விளங்குகின்றது. அவர்தம் திருமுடியின்மேல் வெண்மையும் தண்மையும் தூய்மையும் உடைய பிறைத் திங்கள் ஒளிவீசிப் பிறங்குகின்றது. இவ்வாற்றால் விநாயகப் பெருமான் தம்மை அடைந்தவர்கள் தாமதம் இராசதம் சத்துவம் என்னும் முத்திற இயல்புகளுள் எத்திறம் உடையராயினும், அவர்கள் அனைவருக்கும் எளிவந்து திருவருள் புரிதலை உணரலாம். அவர் தமது திருமேனியின் மீது அணிந்துள்ள மாலையானது, மேல் கீழ் என்னும்வேறுபாடு கருதாமல், திருமுடியினின்று திருவடிகாறும் நீள அமைந்து, திருவயிறாகிய நடுவிடமும் பொருந்தித் தாப்பிசைப் பொருள் கோள்போல் திகழ்கின்றது. இத்தகைய விநாயகப் பெருமானை நாம் தொழுது உய்வோம்.

> "சீர்கொண்ட தகுதியில் திரிகுணமும்
> நிறுவிய திறத்து அடிக் கருமூடிகம்,
> திகழ்நடுச் செம்மணி ஒளிப்பணி,
> முடிச்சிகைச் சிறுபிறை வயக்கிடுதலால்,
> தார்கொண்ட மலர்செறி கிழக்குமேக்கொடு
> பகைதவிர்ந்து, தாய் நாப்பண்நட்டுத்
> தாப்பிசைப் பொருள்கோளின் மேவஅமர்
> கயமுகத் தம்பிரான்தாள் பரசுவாம்"

2. திருவாவடுதுறைக்கு அரசவனம் என்றொரு பெயர் உண்டு. அவ்வரசவனம், ஆலவனம் (காரைக்காலம்மையாருக்கு அருள் புரிந்த திருவாலங்காடு), குருந்த வனம் (மணிவாசகரை ஆட்கொண்ட திருப்பெருந்துறை) என்னும் இரண்டிற்கும் இடையே உள்ளது. ஆலவனமும் குருந்தவனமும் சென்று வழிபடுபவர்கள் அருள்பெறுமாறு, இடையே உள்ள அரசவனத்திற் சிங்கநோக்கம் போல, புருஷ சிங்கமாகிய அம்பலவாண தேசிகர் எழுந்தருளி விளங்குகின்றார். அவரைக் காத்தருளுமாறு, "புற இருள் நீக்கிக் காட்டுதற்கு பன்னிருவகைப் பட்ட சூரியர்கள் போல, அகவிருள் நீக்கி உணர்த்துவதற்குப் பன்னிரண்டு சூத்திரங்கள் கொண்டு, சிவஞான போதச் செழும்பொருள் நூலைச் செய்தருளிய ஆசிரியர் மெய்கண்ட தேவரை நாம் தொழுவோமாக."

> "வாய்ந்த வடபால் ஆலவனம்
> வயங்கு தென்பாற் குருந்தவனம்
> மருவு வாரும் அருள்பெறுவான்
> மன்னும் நடுப்பால் அரசவனத்து

ஆய்ந்த சிங்க நோக்கம்என
அமர்ந்து நோக்கும் குருசிங்கம்,
அருள்கூர் திருவம் பலவாண
அடிகள் தமைக்காத் தருள்கஎன்றே...

(3) பல பொருள்களுக்கும் பலவற்றிற்கும் உரிய பொதுப் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறல் வேண்டுமாயின், தலைமை பற்றியேனும், பன்மை பற்றியேனும் சிறப்பித்துக் கூறுதல் வேண்டும் என்பது இலக்கண விதி. இதனைத் தலைமை பற்றிய வழக்கு, பன்மை பற்றிய வழக்கு என்பர். சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவரின் பெயர், மறைஞான சம்பந்தர் என்பது. மறைஞானசம்பந்தர் என்னும் தொடர், மறையுடனும் ஞானத்துடனும் சம்பந்தம் உடையவர் எனப்பொருள் படும். எனவே சான்றோர்கள் அனைவருக்குமே, அது பொதுவாக உரிய காரணப் பெயர் ஆகும். ஆயினும், சேற்றில் பிறப்பன வேறு எத்தனையோ பிற பொருள்களும் உள எனினும், தாமரைக்கே பங்கஜம் (பங்கம்—சேறு; ஜம்-தோன்றுவது) என்னும் பெயர், தலைமை பற்றி வழங்குதல் போல, ஏனைய பிற சான்றோர்கள் அனைவருக்கும் கூடப் பொதுவாக உரிய தொடர் எனினும், தலைமை பற்றிய வழக்கால், சிறப்பாக மறைஞான சம்பந்தர் என்னும் தொடராவது, சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் மூன்றாமவராகிய கடந்தை மறைஞானசம்பந்தர்க்கே உரியதாகும். அத்தகைய சிறப்பு மிக்க மறைஞான சம்பந்தர் எங்களது அம்பலவாண தேசிகர் ஆகிய குழந்தையினைக் காத்தருள்க என்று, அவரைப் பணிந்து வணங்குகின்றோம்.

## (2) செங்கீரைப் பருவம்

(4) சிவ பெருமானே அம்பலவாண தேசிகராக எழுந்தருளியுள்ளார். அவர் தம்முடைய கண்டத்தின் கருமையை நீக்கியதனால், நாம் ஆணவ மலத்தின் கருமை ஒழிந்தோம். அவர் தமது யானைத்தோற் போர்வையை விலக்கியதனால், யாம் எம்மை மூடிப் போர்த்திருந்த மாயையினின்று விலகினோம். அவர் தமது அரவத் தொகைகளைப் பூணாமல் போக்கினார் ; அப்பொழுதே நாங்களும் எம் வினைத் தொகைகளைப் பூணாமல் போக்கினோம். இங்ஙனம் எம்முடைய மும்மலங்களையும் போக்கியருளிய அம்பலவாண தேசிகர் செங்கீரை ஆடுவாராக.

(5) அம்பலவாண தேசிகர், சிவபெருமானைப்போல மண் புனல் கனல் வளி வெளி என்னும் ஐம்பூதங்களாகவும் திகழ்கின்றார். பர சமயத்தவர்கள் வாயில் நுழைந்து பயில்கின்ற மண்ணாகவும், சைவப் பயிர் தழையப் பாயும் புனலாகவும், அடியவர்களின் கொடிய பாவக் காடுகளை எரித்தொழிக்கும் கனலாகவும், உண்மை அடியவர்களின் வினையாகிய பஞ்சு பறந்தொழியச் செய்யும் வளியாகவும், தவ நெறியில் நிற்கும் முனிவர்களின் உள்ளங்களில் பரவி உலாவி நிற்கும் வெளியாகவும், விளங்குகின்றவரே! அரச வனம் என்னும் திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் குருநாதரே! எமக்காகச் செங்கீரை ஆடியருள்க.

(6) அம்பலவாண தேசிகர் சிவபெருமானின் வேறு அல்லர். இவரே முன்னர்ச் சிவபெருமானாக விளங்கியிருந்தார். அப்போது இவர் காம தகனம் செய்தார். அதனால் இவருக்குக் காமதேவன் பழைய பகைவன் ஆயினன். பழைய பகைவனாகிய அக்காம தேவன், இவரை எவ்வாற்றாலேனும் வெல்லக் கருதித் தனது படைக் கருவிகள் பலவற்றையும் திருவாவடுதுறையைச் சூழ்ந்து முற்றுகையிட விடுத்துள்ளான். அதனாலேயே திருவாவடுதுறையைச் சூழ்ந்து எங்கணும் காஞ்சி மரங்களும், கரும்புத் தோட்டங்களும் உள்ளன. மாஞ்சோலைகளில் குயில்களும், மருத மரங்களில் கிளிகளும் நிரம்பியுள்ளன. தாமரை முல்லை அசோகு நெய்தல் முதலிய மலர்கள் எங்கும் காணப்படுகின்றன. கமுகம் பாளைகள் எங்கும் விரிந்து தோன்றுகின்றன. நீர் நிறைகளில் மீன்கள் எழுந்து பாய்ந்து துள்ளுகின்றன.

(7) அம்பலவாண தேசிகர், புண்ணிய வேத முடிவான பொருள்களை யாவரும் தெளியும்படி உபதேசிப்பதால், அந்தணராக விளங்குகின்றார். ஞான வெண் குடை நீழலில் வைகி அருளாட்சி நடத்துதலால், அரசராக இருக்கின்றார். அடியவர்களின் உடல் பொருள் ஆவி மூன்றையும் வாங்கிக்கொண்டு, அவர்களுக்குத் தம்மைக் கொடுப்பதனால் வணிகராக வயங்குகின்றார். உயிர்களாகிய நிலத்தில் உணர்வு என்னும் நீரைப் பாய்ச்சிப் பேரின்பமாகிய போகம் விளையும்படி செய்வதனால் வேளாளராக மிளிர்கின்றார். நால்வகை வருணங்களைக் கடந்து நின்றும், அந்த நால்வகை வருணத்தவர்களின் செயல்களை ஒருங்கே புரிந்துவரும் இவர்தம் திறம் வியக்கத்தக்கது.

## (3) தாலப் பருவம்

(8) ஆகமமாகிய சங்கிலிகள் பூட்டி, வேதமாகிய தொட்டிலில், உபநிடதங்களாகிய பள்ளியணையின் மீது வைகியிருக்கும் யாம், அறிவற்ற இவர்கள் செய்துள்ள தொட்டிலிலும் இடம் கொண்டு, அமர்வதோ? என்று நீர் எண்ணற்க. முற்காலத்தில் மாணிக்கவாசகர் பொருட்டுப் பொங்கி எழுந்த நதிக் கரையை அடைக்கக் கூலியாளாகப் போந்தபொழுது, நீர் ஒரு மர நிழலில் வெறும் மண்ணிலன்றோ கிடந்து உறங்குவதுபோல நடித்தீர். அதனை நினைந்து இப்போது யாங்களிடும் தொட்டிலிலும் நீர் எழுந்தருளல் வேண்டும்.

## (4) சப்பாணிப் பருவம்

(9) கையில் இருந்த பலவகைச் சுமைகளும் நீங்கப் பெற்றோர், பிறகு ஏதேனும் வேலை ஒன்றனைச் செய்ய நேர்ந்தால், அதனைச் செய்வதற்குத் தாம் சிறிதும் தயங்கார். அதுமட்டுமன்று. பிறர் சொல்வதற்கு முன் தாமே செய்யவும் முற்படுவர். அம்பலவாண தேசிகரே! நீர் முன்னர்ச் சிவபெருமானாக இருந்தபொழுது மழு மான் சூலம் கபாலம் நெருப்பு உடுக்கை முதலிய சுமைகளை ஏந்தியிருந்தீர். இப்போது அச்சுமைகளை ஒழித்துவிட்டீர். ஆதலின் யாங்கள் இடும் வேலையைத் தாங்கள் செய்தல் கடமையாகும். வேலை செய்தால் கைகள் கன்றிப் போகும் என்று நீர் சொல்லுதல் கூடாது. நீர் முன்னர் மதுரையில் பாணபத்திரருக்காக விறகு வெட்டினீர்; வந்தியம்மைக்காக மண்வெட்டினீர்; ஒரு கொடியவனைத் தண்டிப்பதற்சாக, அவனது அங்கம் வெட்டினீர்; அப்போதெல்

லாம் நும் கைகள் கன்றிப் போகவில்லை. ஆதலின் இப்போதும் அவைகள் கன்றிப் போக மாட்டா. ஆதலின் 'எம்பொருட்டு நும் கைகளால் சப்பாணி கொட்டியருள்க.'

## (5) முத்தப் பருவம்

*10.* உயிர்களுக்குள்ள பந்தமானது, நால் வகைப்படும். அவைகள் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் எனப்படும். உயிர்களின்பால் ஆணவம் என்னும் மூலமலம் செம்பிற் களிம்பு போல் அநாதியே கலந்து நிற்கின்றது. அதற்குப் பின்னர் மாயை கன்மம் என்னும் இரண்டு மலங்கள் உயிருடன் வந்து கலக்கின்றன. அதன் விளைவாகத் தனுகரணங்கள் உயிர்களுக்குக் கிடைக்கின்றன. அவற்றால் உயிர்கள் பல்வேறு புவனங்களில் பிறந்து, போகங்களை அனுபவிக்கின்றன. இவற்றுள் உயிர்கள் ஆணவ மலத்துடன் கலந்தது அகப்பந்தம். மாயை கன்மங்களோடு கலந்தது அகப்புறப்பந்தம். உயிர்கள் தனுகரணங்களைப் பெற்றது புறப் பந்தம். புவனபோகங்களில் பிணைந்தது புறப் புறப்பந்தம் என்று, இங்ஙனமெல்லாம் சைவ சித்தாந்தத் தத்துவ நுட்பங்களை எங்களுக்கு உபதேசிக்கும் தங்கள் திருவாயால், எங்களுக்கு முத்தம் தந்தருள்க.

*11.* பெத்த நிலையிற்போல் முத்திநிலையிலும் பந்தங்கள் உண்டு. ஆனால் அவை கேடு பயப்பன அல்ல. நன்மையே விளைவிப்பவை. ஆதலின் அவற்றைப் பந்தம் என்று சொல்லாமல் சம்பந்தம் (நல்உறவு) என்று வழங்குவர். அச் சம்பந்தம் அகம் அகப்புறம் புறம் புறப்புறம் என நான்கு வகைப்படும். உயிரானது மலபரிபாகம் சத்திநிபாதம் இருவினைஒப்பு என்னும் நிலைகளை அடைந்து, மலங்களினின்று நீங்கிச் சுத்த நிலை எய்தி, இறைவனுடன் இரண்டறக் கலத்தல், அகச்சம்பந்தம். அருளினிடத்து மட்டும் நிற்றல், அகப்புறச் சம்பந்தம். அருளினது உபகாரத்தினைத் தெளிவாகக் கண்டுணர்தல் புறச் சம்பந்தம். தாமே பிரமம் என்று எண்ணுதல் புறப்புறச் சம்பந்தம் ஆகும். இந்நான்கனுள் முதலதாக விளங்கும் அகச்சம்பந்தமே மிகவும் மேலானதாகும்.

*12.* இறைவன் அடியவர்களின் இருதய கமலத்தில் வீற்றிருக்கின்றான். தாமரைமலர்க்கு, தரை கிழங்கு நாளம் இதழ் கேசரம் பொகுட்டு என்னும் அமைப்புகள் உண்டு; உள்ளமாகிய தாமரை மலர்க்கு நாபியே தரை. பிருதிவி தத்துவமே கிழங்கு. பிருதிவி முதலிய 24 தத்துவங்களே நாளம். வித்தியா தத்துவங்கள் ஏழும் சுத்த வித்தை ஒன்றும் ஆகிய 8 தத்துவங்களும், இதழ்கள். இந்த எட்டு இதழ்களிலும் பிரணவம் முதலிய எட்டு சக்கரங்கள் அமைந்துள்ளன. மகேசுவரம் சதாசிவம் ஆகிய தத்துவங்கள், 64 கேசரங்கள். சத்தி தத்துவம், அதன் பொகுட்டு (இப்பொகுட்டின்கண் 51 பீஜ சக்கரங்கள் அமைந்துள்ளன). இங்ஙனம் அமைந்துள்ள இருதய கமலம் ஆகிய தாமரை மலரில் இறைவன் வீற்றிருந்தருள்கிறான்.

*13.* இறைவனை நாம் நம் உடம்பில் இருதயம் நாபி புருவநடு என்னும் மூன்று இடங்களில் வழிபடுதல் வேண்டும். இருதயம் பூசைத் தானம். நாபி ஓமத்தானம். புருவநடு தியானத் தானம். இருதயத்தில் இறைவனைத் திருவைந்தெழுத்தால் அமைந்த வடிவில், கொல்லாமை ஐம்பொறிஅடக்கல் பொறுமை இரக்கம், அறிவு மெய் தவம் அன்பு என்னும் எண்வகை மலர்களால் அருச்சித்து, திருவைந்தெழுத்தோதி வழிபடுதல் வேண்டும். குண்டலித் தானமாகிய நாபியில், ஞான அனலை எழுப்பி, அதன்கண் திருவைந்தெழுத்தால், விந்துத் தானத்து அமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடியாகிய சுருக்குச் சுருவங்களால் ஓமம் செய்து வழிபடுதல் வேண்டும். தியானத் தானமாகிய புருவ நடுவில், சிகர யகர வகாரங்கள் முறையே தற்பதப் பொருளும், துவம்பதப் பொருளும், அசிபதப் பொருளும் ஆகும் முறைமையில் திருவைந்தெழுத்தால் சிவோகம் பாவனை செய்து வழிபடுதல் வேண்டும்.

*14.* உயிர்கள் உய்யும்படி வேத ஆகமங்களை எடுத்துக் கூறியும், ஓலம் என்று அபயமிட்ட தேவர்களின் பொருட்டு நஞ்சை அமிர்தமாக உண்டும், திரிபுரங்களைச் சிரித்து எரித்தும், பாண்டிய மன்னனும் சங்கப் புலவர்களும் ஐயம் தெளிய ''இறையனார் களவியல்'' என்னும் பொருளிலக்கண நூல் இயற்றியும், பாணபத்திரர் தருமி என்னும் அடியவர்களுக்காக ''மதிமலிபுரிசை மாடக் கூடல்'' ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'' என்னும் பாடல்களைப் பாடியும் மிகவும் புகழ்பெற்ற நின்னுடைய சிவந்த திருவாயால் எங்களுக்கு முத்தம் தருவாயாக.

## (6) வருகைப் பருவம்

*15.* அம்பலவாண தேசிகரே! சிவபெருமானாகிய நீர், சூரிய மண்டலத்தின்கண் உறைதலை விளக்குவதைப் போல, நும் திருமேனி சிவந்த நிறம்கொண்டு திகழ்கின்றது. ஒருவருக்கு உள்ள சிறப்பு, பிரதாபம் என்றும், புகழ் என்றும் இரு வகைப்படும். வீரச் செயலால் பிரதாபம் பிறக்கும். கொடைத் திறனால் புகழ் உண்டாகும். இவற்றுள் பிரதாபம் செந்நிறம் உடையதாகவும், புகழ் வெண்ணிறம் உடையதாகவும் நூல்களில் கூறப்படும். நீர் அடியவர்களின் மலங்களை அழிக்கின்றீர். அதனால் பிரதாபம் உடையவராகத் திகழ்கின்றீர். மேலும் அளவற்ற பேரின்பத்தை அடியவர்களுக்கு வழங்குகின்றீர். அக்கொடைத்திறனால் எல்லையற்ற புகழ்பெற்றுத் திகழ்கின்றீர். நும் சிவந்த திருமேனி நுமது பிரதாபத்தையும், நீர் அணிந்துள்ள வெண் திருநீறு நுமது புகழையும் விளக்குகின்றன. இங்ஙனம், சிறந்த திருவாவடுதுறைநகர்க்கண் வளர் திருவருட் செல்வப்பிரான் வருகவே. செம்மை திகழ் சிவ ஞானவடிவன் அம்பலவாண தேசிக உத்தமன் வருகவே.

*16.* சிறந்த மாதவம் புரிந்து வழிபடுபவர்களுக்கன்றி, ஒரு தவமும் புரியாத அவமிகுந்த நுங்கள்பால், யாம் வருதல் முறையன்று என்று கூறற்க. முழு நிலாவானது நல்ல பெரு நகரத்தில் மட்டுமேயன்றிக் கொடிய காட்டிலும் தன் ஒளியைப் பரப்புகின்றது. மேகமானது வயல்கள் மிகுந்த மருதத் திணையில் மட்டுமின்றி, வறண்டு பயனற்ற களர் நிலத்திலும் மழை பொழிகின்றது.

17. அம்பலவாண தேசிகரே! நும் திருவடிகளை முறையே கிரியை ஞானம் என்னும் இரண்டாகவும், திரோதானம் அநுக்கிரகம் என்னும் இரண்டாகவும் வேதாகமங்கள் கூறும். இங்ஙனம் இரண்டிரண்டாகச் சிறந்தெடுத்துப் புகழப்பெறும் திருவடிகளை, யாமும் வருக வருக என்று இரண்டிரண்டு சொற்களால் அடுக்கி மகிழ்ந்து விளிக்கின்றோம். அருள் கூர்ந்து வருக வருக.

18. திருநாவலூரில் நிகழ்ந்த நம்பியாரூரரின் திருமணத்திற்கு, நும்மை யார் அழைத்தார்கள், அழைக்காமலே சென்றதாலேயன்றோ, பித்தன் பேயன் என்றெல்லாம் நீர் இகழப் பெற்றீர்? அழைக்காமலே சென்று அவமானப்பட்ட நீர், வருந்தி வருந்தி அழைக்கின்ற எங்கள்பால் வருதல் ஆகாதோ? வந்தால், எங்கள்பால் வசையின்றி வாழ்த்துக்கள் பெறலாம். சிறப்புக்கள் எய்தலாம்.

19. தந்தையைக் கொலை செய்தவர் (சண்டேசர்), தாயைக் கொலை செய்தவர் (பரசுராமர்), பிள்ளையைக் கொலை செய்தவர் (சிறுத் தொண்டர்), சுற்றம் முழுவதையும் கொலை செய்தவர் (கோட்புலி நாயனர்) ஆகியவர்களிடம்தான் நீர் செல்வீரோ? அன்புமிக்க எங்கள்பால் வரமாட்டீரோ?

20. அம்புலியே! கலையமைதி பெற்றிருத்தல், இருள் (அறியாமை) கடிதல், கழுநீர்மலர் உவந்திடுதல், அரவபந்தம் கழிதல், ஒளி உருவத்துடன் விளங்குதல். தண்ணளி மிகுதல், உயிர்ப்பயிர்க்கு அருள்தல், பரிதி (சூரியன்) மண்டிலத்து எய்தல், எவரும் மதியோன் (அறிவாளி) எனப் பொலிதல், மான் ஏந்தி நிற்றல் முதலியவற்றல் எங்கள் அம்பலவாண தேசிகருடன், நீ ஒப்புமை பெற்று விளங்குகின்றாய். ஆதலின் அவருடன் ஆட வருக.

21. அம்புலியே! மேருவை வளைத்தல், பலரும் மகிழப் பொலிதல், புலவர் பலர் சூழ்தரப் புது விருந்தாக வாய்ச்சுவை அமிழ்தளித்தல், சத்துவ குணப் பிரதானன் எனத் திகழ்தல், அரசு நிழல் வைகுதல் முதலிய குணங்களால், நமக்கு ஒப்புமை உடையவனாக இருக்கின்றான் என்று விரும்பி, எங்கள் அம்பலவாண தேசிகர் உன்னைத் தம்முடன் விளையாட அழைக்கின்றார். ஆட வருக.

### (7) அம்புலிப் பருவம்

22. அம்புலியே! கூடும் நாள் ஒன்றில் மட்டும் நீ, தேவர் முப்பத்து மூவருக்கு அமுதளிப்பாய். இவன் நாள்தோறும் எண்ணிலாருக்கு இனிய அமுது உதவும் கொள்கையன். புறஇருளை மட்டும் நீ சிறிது சிறிதாகப் போக்குவாய். இவனே அகவிருள் (ஆணவ மலம்) முழுவதையும், ஒரு நொடியில் அழித்தொழிப்பான். இராகு என்னும் ஒரு பாம்பினல் அவ்வப்போது கவ்வப்பட்டு நீ வருந்தி உழல்வாய். இவன் அளவற்ற பாம்புகளைத் தன்மேல் அணிந்தும், ஒரு தீங்கும் இன்றி இருப்பான். இத்தகைய அம்பலவாண தேசிகருக்கு நீ எங்ஙனம் சமமாவாய்?

23. அம்புலியே! உரோகிணி, கார்த்திகை முதலிய நட்சத்திர மகளிர் சூழ, நீ மாதர் கூட்டத்தில் இருப்பவன். இவனே தூய மாதவர் குழாத்திடையே எப்போதும் இருப்பவன். நீ வெண்மை நிறம் ஒன்றுமே உடையவன். இவனே 'நிறங்கள் ஓர் ஐந்துடையாய்' என்றபடி பொன்மை வெண்மை செம்மை கருமை புகைமை என்னும் ஐந்து நிறங்களையுடையவன். நீ வளர்ந்தும் தேய்ந்தும் வருகின்ற பதினறு கலைகளை உடையவன். இவன் அறுபத்து நான்கு கலைகளை நிரம்ப உடையவன். நின்பால் முயல் இருக்கும். இவனது விருது முதலியவற்றில் சிங்கம் இருக்கும். நீ களங்கம் உடையவன். இவன் களங்கம் எதுவும் இல்லாத அகளங்கன். ஆதலின் மூடரும்கூட இவனுக்கு நீ சமம் என்று கூறமாட்டார்கள். எனவே, நீ சிவலோகமே போன்ற திருவாவடுதுறைச் சித்தாந்த சைவனை, அருள்நெறி நடாத்தும் அம்பலவாண தேசிகனுடன் ஆட வா.

24. யாவருக்கும் அருளைவழங்கி, ஞானத்தைக் கொடுத்து, மலமாயை கன்மங்களைப் போக்கி, அனைவரையும் இன்பப் பெருங்கடலில் திளைக்கும்படி செய்பவன், அருட்குரவர் சூளாமணியாகிய அம்பலவாணதேசிகன். நீயோ தெளிவற்றுக் கலங்குபவன், குருவின் மனைவியை விழைந்து புணர்ந்து பழிகொண்டவன். கொடிய பாவியாகிய காமுகன். ஆதலின் நீ இவனுக்குச் சமம் என்று சொல்லும் வாய்க்கும் கூட, ஒரு கழுவாய் (பிராயச்சித்தம்) செய்தல் வேண்டும். மாதவ முனிவர்கள் பலர் சூழ்ந்து திரண்டு நிற்க, வருக என்று நின்னை இவன் கட்டளை இட்டருளினன். உடனே விரைந்து ஆட வா.

25. அம்புலியே! நீ திருவாவடுதுறைத் தலத்தின் பெருமையை அறியாயோ? ஒரு சாபத்தால் உமாதேவி அடைந்த பசுவடிவத்தை மாற்றி, அவள் முன்பு இருந்த தெய்வ வடிவை அடையச் செய்த தலம் (கோமுத்திபுரம்), இதுவே ஆகும். இத்தலத்திற்கு வந்தால் அம்பலவாணதேசிகர் ஆகிய குருதரிசனம் கிடைக்கும். அவர் அருளால், கோமுத்தி புரீசுவரர் ஆகிய சிவலிங்கதரிசனம் கிடைக்கும். அம்மட்டோ! ஆதீனத்தைச் சார்ந்துள்ள எண்ணற்ற தம்பிரான்மார்கள் ஆகிய சங்கமர் தரிசனமும் கிடைக்கும். இங்ஙனம் குரு-லிங்க-சங்கமம் என்னும் மூவகைத் தரிசனங்களையும் ஒரே காலத்தில், ஒரே இடத்தில், வேறு எங்கே இத்துணை எளிதாகவும் இனிதாகவும் நீபெற இயலும்? இத்தலத்திற்கு நவகோடி சித்தபுரம் என்பது பெயர். நவகோடி சித்தர்கள் இங்கு நிலையாகத் தங்கித் தவம் புரிந்து, வாழ்ந்து நலம் பெறுகின்றனர். இங்கே நீ வந்தால் உன்னுடைய கயரோகநோய், மற்றும் பழிபாவங்கள் யாவும் நீங்கும்.

### (8) சிறுபறைப் பருவம்

26. சித்தர் பலர்மொய்த்த கோமுத்தி (திருவாவடுதுறை) அம்பலவாண தேசிகரே! சிறுபறை முழக்கி அருள்க. அப்பறை, அறிவில்லாத எங்களுடைய இந்திரியங்கள் ஆகிய விலங்குகளை வேட்டையாடுவதற்குக் குறிஞ்சிப் பறையாகவும், எங்களுடைய அடங்காத மனம்

ஆகிய இமில் ஏற்றை அடக்கும் முல்லைப்பறை யாகவும், எங்களின் உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் கொள்ளை கொள்ளும் பாலைப் பறையாகவும், சிவஞானம் என்னும் அருள்நீர் பெருகப் பாய்ச்சுவதற்கு ஒலிக்கும் மருதப் பறையாகவும், எம்முடன் மாறுகொண்டு வாது புரியும் பரசமயக் கொள்கைகளை மாய்க்கும் நெய்தற்பறையாகவும் அமையும்படி, சிறுபறை முழக்கி அருள்க.

**(9) சிற்றிற் பருவம்**

27. அம்பலவாணதேசிகரே! நீர் ஒருவரே பலராகவும் பலவாகவும் வியத்தகத் திகழ்கின்றீர். ஆசைப் பேயை அறவே ஒழிப்பதனால் ஒருபெரும் மந்திரவாதி; பலவகைப் புண்ணியச் செயல்கள் ஆகிய குழந்தைகளைப் போற்றி வளர்ப்பதனால் ஒப்பற்ற தாய்; அடைந்தோரின் துன்பமாகிய சேறு உலரும்படி செய்வதனால் ஒளிமிக்க சூரியன்; பரசமயங்கள் ஆகிய யானைகள் அடங்கித் தோற்று ஓடும்படி செய்வதனால் வெற்றிமிக்க வியன்பெரும் சிங்கம்; தீவினைகள் ஆகிய காடுகளை எரித்து ஒழிப்பதனால், ஆற்றல் மிக்க பெருநெருப்பு; பிறவியாகிய அரவின் நஞ்சைப் போக்கிக் காப்பதனால் பொருவிலாப் புள்வேந்தன் (கருடன்) என்றெல்லாம் சொல்லும்படி, நீர் சிறப்புமிக்கு விளங்குகின்றீர்.

**(10) சிறுதேர்ப் பருவம்**

28. அம்பலவாணதேசிகரே! தரிசுநிலமாகக் கிடைக்கும் எங்கள் மனமாகிய வயலில், காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மார்ச்சரியம் ஆகிய மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன. அவற்றைத் தாங்கள் அருளாகிய தழலால் எரித்துக்கொளுத்தி, திருவைந்தெழுத்து ஆகிய கொழுவினால் உழுது, அன்பு என்னும் விதையை விதைத்து, ஆர்வமாகிய நீரைப் பாய்ச்சி, அயற் சமயங்களாகிய விலங்குகள் மேயாதபடி, பொறுமை என்னும் வேலியைக் கோலி, தவமாகிய பசும் பயிரை வளர்த்து, சிவ அனுபவம் என்னும் பெரும்போகம் விளையச் செய்து, அதனை நாங்கள் நுகருங்கால் விடயங்களாகிய கள்வர்கள் கவர்ந்துகொள்ளாதபடி, காத்தருள்கின்றீர். சிவஞானச் செல்வரே! செல்வம் மலியும் துறைசை அம்பலவாண தேசிகரே, நீர் சிறுதேர் உருட்டி அருள்க.

**முடிவுரை :**

இங்ஙனம் எத்தனையோ பற்பல அற்புதக் கற்பனைநலங்களும், சொற் பொருட் சுவைத் திறங்களும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியருளிய அம்பலவாண தேசிகர் பிள்ளைத்தமிழின்கண் அமைந்து காண்கின்றன. இவ்வாறே அவரால் பாடப்பெற்ற எல்லாப் பிள்ளைத்தமிழ்களுமே விளங்குகின்றன. ஒரு சிறந்த கவிதை என்றால், அதன்கண் அறிவு நலம் (Intellect), உணர்ச்சி நலம் (Emotion), கற்பனைநலம் (Imagination), கலைநலம் (Technique), தெய்வநலம் (Sublimity), என்பன அமைந்திருத்தல் வேண்டும்.

ஓங்கும் அறிவுநலம், நல்ல உணர்ச்சிநலம்
பாங்குமிகு கற்பனைப் பண்புநலம்—
தேங்கரும்பாம்
செய்ய கலைநலம், சீர்த்திமிகு தெய்வநலம்
எய்தியதே இன்கவிதை யாம்.

—ந. ரா. மு.

இனிய நல்ல எழிற்கவிதைக்குரிய இவ்விலக்கணத் திறன், மகாவித்துவான் பிள்ளையவர்கள் பாடிய கவிதைகள் எல்லாவற்றிலுமே செவ்விதின் அமைந்து காணப்படும். அத்தகைய பெருநலம் சான்ற அவர்தம் கவிதை நூல்களைத் தமிழ் உலகமும், சமய உலகமும், தக்காங்கு போற்றிப் பயின்று, பயன்கொண்டு உய்யத் திருவருள் புரிவதாக.

**

## சிவஞானசித்தியார் வகுப்புத் தொடக்கவிழா

சென்னைத் திருமயிலை அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயிலில், சைவசித்தாந்த மகாசமாசத்தின் சார்பில், ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., அவர்கள், வாரந்தோறும் முறையாக நடத்த இருக்கும் சிவஞானசித்தியார் வகுப்பின் தொடக்க விழா, 8-8-76 ஞாயிறு அன்று மாலை, 6.30 மணியளவில், முன்னாள் அறநிலைய ஆணையர் 'சிவநெறிப்பெருந்தகை' திரு. அ. உத்தண்டராமன், B.A., B.L., I.A.S., (RTD.) அவர்கள் தலைமையில், மிகவும் சிறப்புற நடைபெற்றது. அதுபோது வகுப்பைத் தொடங்கிவைத்து, இந்நாள் அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I.A.S., அவர்களும், சென்னைத் துணை ஆணையர் திரு. எம். சூரியராஜ், B.A., B.L., அவர்களும், சிறப்புரையாற்றினர்கள். சைவ சித்தாந்த மகாசமாசத்தின் தலைவர் திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார், M.A., அவர்கள் வரவேற்புரையும், நன்றியுரையும் நவின்றார்கள். கபாலீசுவரர் கோயிலின் உதவி ஆணையர் - நிர்வாக அதிகாரி திரு. ஏ. என். பார்த்தசாரதி, B.SC., அவர்கள், விழா நிகழ்வதற்குப் பல்லாற்றானும் ஒத்துழைத்து, உதவிகள் புரிந்தார்கள். சைவ அன்பர்கள் பலர் வகுப்பிற்குத் திரளாக வந்திருந்து ,வகுப்பின் தொடக்க விழாவைச் சிறப்பித்தனர். திரு. சுந்தரேசதேசிகர், திரு. லால்குடி சுவாமிநாதன் ஆகிய இருவரும், முதலிலும் முடிவிலும் திருமுறைப்பாடல்கள் பாடி மகிழ்வித்தனர்.

# திருமந்திரமும் இன்றைய சமுதாயமும்

''திருக்குறள்வேள்'' திரு. கு. வரதராச பிள்ளை, B.A., திருச்சி.

இன்றைய சமுதாய வாழ்வுக்குத் திருமந்திரம் எத்துணை பயன்படுகிறது என்பது அதனைத் தொடர்ந்து பயின்றவர்க்கு நன்கு விளங்கும். சீவன் சிவமாக ஆகலாம் என்ற யோக நெறிகளைக் கூறியதோடு அமையாமல் சமுதாய மக்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குரிய அன்பு நெறியையும் திருமூலர் கூறியுள்ளார்.

**ஒன்றே குலம் ஒருவனே தேவன்**

இதுவே சமுதாயம் பெறவேண்டிய முடிவான இலட்சியமாகும். இன்றைய உலகில் நாம் காண்பதென்ன? மனித சமுதாயத்தில் நிறத்தினால் வேறுபாடு. மொழியினால் வேறுபாடு, இனத்தினால் வேறுபாடு, மதத்தினால் வேறுபாடு எனவேறுபாடுகள் பலவுள்ளன. ஆங்கிலேயர், ஐரோப்பியர், அமெரிக்கர், ஆப்பிரிக்கர், எகிப்தியர், இந்தியர், சீனர், உருசியர் என நாட்டுப்பிரிவால் வேறுபாடும் உண்டு. இனி ஒவ்வொரு நாட்டிலும் எத்துணையோ பிரிவுகள்? இன்றைய பாரதத்தில் இருபத்திரண்டு மாநிலங்கள் உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் மொழியால், இனத்தால், மதத்தால் பிரிவுகளைக் காண்கிறோம். இப்பிரிவுகள் நாட்டு ஒற்றுமையையே குலைப்பதாகவுள்ளன.

''எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்நாட்டு மக்கள்'' என்று தேசீயக் கவி பாரதியார் வழிகாட்டியும், இன்று பிரிவினைச் சக்திகளே தாண்டவமாடுகின்றன.

இனி ஒரு தேசத்தின் முன்னேற்றத்தைக் கண்டு மற்றொரு தேசத்துக்குப் பொறாமை. இப்பொறாமையே பிரிவினைக்குக் காரணமாவதோடு மனித சமுதாயத்தையே அழிக்கவல்ல போருக்குத் தூண்டுகோலுமாகிறது. விஞ்ஞான வளர்ச்சிபெற்ற இக்காலத்தில் போர் என்றால் நடுங்க வேண்டியுள்ளது? ஏன்? ஒரு தேசத்தின் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து கொண்டு ஒரு அணுகுண்டை வெடித்தால் உலகமே நாசமடையும்படியான தீமையை அது விளைவித்துவிடும்.

இவ்வாறான சூழ்நிலையில் ''ஒன்றே குலம்'' என்ற மந்திரமொழி எவ்வளவு பொருத்தமாக வுள்ளது? சர்வதேசத் தலைவர்கள் வழிகாட்டியாக இருந்து மக்களிடையே இக்கருத்தைப் பதியுமாறு செய்தால் வேற்றுமைகள் நீங்கி உலகமக்கள் ஒற்றுமையாக வாழ வகை செய்ய முடியும்.

இவ்வொற்றுமை எவ்வாறு உண்டாகும்? இதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. கடவுள் உண்டு என்றும், அக்கடவுளும் ஒருவனே என்றும், அவனை வழிபடுவதற்குரிய நெறியும் ஒன்றுதான் என்றும் உணர்வதேயாகும். ஆனால் இன்று உலகில் என்ன காண்கிறோம்? சைனம், பௌத்தம், கிருத்துவம், இஸ்லாமியம், சைவம், வைணவம் எனப் பல மதங்கள் உள்ளன. இன்னும் இவற்றைத் தவிர எத்துணையோ பல மதங்கள் நாட்டுப்புறத்தில் உள்ளன. ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு வகையான வழிபாடு நடைபெறுகிறது. இறைவனை உருவமாக வைத்து வழிபடுகின்றனர்; உருவமும் அருவமும் அல்லாத அருவுருவமாக (இலிங்கமாக) வழிபடுகின்றனர்; அருவமாக வைத்து வழிடுபவதும் உண்டு. உருவத்திலே எத்துணையோ வகை. மரத்திலிருந்து தேவர் வரை பல உருவங்களை நாகரிக வளர்ச்சிக்கேற்ப மக்கள் வணங்குகின்றனர். வழிபாட்டிலே நரபலி முதல் பாட்டவி வரை இறைவனுக்குப் படைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு கொள்கை உண்டு. உயிரினங்களின் பிறப்பு இறப்பைப் பற்றிப் பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன. மறு பிறப்பை ஒத்துக்கொள்ளாத மதம் உண்டு. சில மதங்கள் வினைகளை ஒத்துக் கொள்வதில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் உலோகாயத மதமும் உண்டு. இவையெல்லாம் அந்தந்த தேசத்தின் சூழ்நிலை காரணமாக மக்களின் மனப்பண்புக்கேற்ப அமைந்தனவாகும்.

மதத்தின் பேரால் எத்துணையோ காலம் சண்டை நடந்ததாக ஐரோப்பிய நாட்டுச் சரித்திரத்தில் படிக்கிறோம். நூறாண்டுச் சண்டை (Hundred-years' war) எனக் கேள்விப் படவில்லையா! ஒரு மதத்திலே பல பிரிவுகளுக்கிடையே இச்சண்டைகள் நிகழ்ந்தன. இனி மதத்தின் அடிப்படையிலே பல நாட்டைப் படையெடுத்து அந்நாட்டு மக்களைப் பலாத்காரமாகத் தங்கள் மதத்துக்குச் சேர்த்துக் கொண்டதாகவுள்ள மதமும் இருக்கத்தானே செய்கிறது. இன்னும் மத அடிப்படையில்தான் நம் பாரத நாடு துண்டிக்கப்பட்டது. அதன் விளைவு இன்றும் நம்மைப் பாதித்துக் கொண்டிருக்கிறதே! இனி நம் நாட்டிலுள்ள புராதன மதங்களாகிய சைவ வைஷ்ணவ மதங்களுக்கிடையே வேறுபாடும் அவற்றைப் பின்பற்று

பவர்களிடையே மதக் காழ்ப்பும் இருந்து கொண்டுதானே உள்ளன. மேலும் சைவத்தில் எத்தனை பிரிவு? வைஷ்ணவத்தில் எத்தனை பிரிவு? பௌத்தத்திலும் ஆருகதத்திலும் எத்தனையோ வகைகள்?

அதனால்தான் ஆசிரியர் திருமூலர் ஆறுசமயமும் (மதமும்) கண்டவர் உண்மைப் பொருளைக் காணாது வீண் பெருமை பேசிக்கெடுகின்றனர் என்றார். இச் சமயங்கள் எல்லாம் கடந்து விளங்குபவன் அவ்விறைவன். அவன் ஒருவனே தேவன் எனத் தெளியுங்கள்; அவ்வாறு தெளிந்தால் சமயப் பிணக்கின்றி உண்மையான சாந்தி நிலை அடையலாம் என்று அறைகூவி அழைக்கிறார்.

''ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனவன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே.''

—மந். 1,533

அவ்வாறு ஆறு சமயங்களும் கடந்த பொருளையே சிவன் என்று ஆசிரியர் வழங்குகிறார். அவனை அடைவதே தவம்; மற்றையவை அவமாகும். ஆதலால் அப்பெருமான் திருவடியை அடைந்து உய்தி பெறுவதே நலமாகும்.

''சிவமல்ல தில்லை யறையோ சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்கு
அவமல்ல தில்லை அறுசம யங்கள்
தவம்வல்ல நந்திதாள் சார்ந்துய்மின் நீரே.''

—மந்: 1534

மாணிக்க வாசகரும்,

''அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோன்.''

என்று சிவனே எல்லாச் சமயத்தவர்க்கும் வீடு பேறு அளிக்கவல்லவன் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

எனவே சமயக் காழ்ப்பின்றி அம்மெய்ப் பொருளே சமயம் கடந்த பொருள் என்று உணர்ந்து வழிபடின் உலகிலுள்ள எல்லா வேறுபாடுகளும் ஒழியும். ஆதலின் ''ஒருவனே தேவன்'' என்ற திருமூலர் அமுதமொழி இன்றைய சமுதாயத்துக்கு எத்துணை தேவையானது என்று சொல்லவும் வேண்டுமோ!

**அன்புநெறி**

ஒன்றேகுலம், ஒருவனே தேவன் என்ற குறிக்கோளை அடைவதற்குரிய வழி அன்பு நெறியேயாம்.

''அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்.''

என்றார் திருவள்ளுவர். நம் இனம் பிற இனம் என்ற வேற்றுமையோ, நம் சமயம் பிற சமயம் என்ற மாறுபாடோ, அன்பு முகிழ்த்து மலரும் போது உண்டாகா. மேலும் துன்பம் கண்ட போது உதவுவதே அன்பின் செயலாம். எல்லோரும் துன்பம் நீங்கி இன்புற்றிருக்கவே அன்புடையோர் விரும்புவர்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றார் திருமூலர். தாயுமானவர்,

''எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.''

என்று சாதி சமய வேறுபாடின்றி எல்லோரும் இனிது வாழவேண்டும் என்று விரும்பினார்.

அன்பர்க்கு மனமுவந்து இன் சொல் பேசி அமுதம் அளிப்பதுவும் அன்பின் வெளிப்பாடுதான். அவ்வாறு அன்பர்க்கு அளிப்பது இறைவனுக்கே படைப்பதாகும். ஆனால் இறைவனுக்குப் படைப்பது அன்பர்க்கு அளிப்பதாகாது.

''படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே.''

—மந்: 1857

படமாடக் கோயில் என்பது, சித்திரங்கள் வரையப்பட்ட கோயிலாகும். நடமாடக் கோயில் என்பது நடமாடும் கோயிலாகிய உடம்பாகும்.

''ஊனுடம்பு ஆலயம்''

என்று ஆசிரியர் கூறியுள்ளார். இறைவன் விரும்பி எழுந்தருளியிருக்கும் இடம் உடம்பாகும். அதனால் நடமாடும் நம்பர்க்கொன்று ஈயில் அது பகவற்காகும்.

தம்முடைய உடம்பையே இறைவனுக்கு உறைவிடமாக அளித்து, இடைவிடாது அவனையே எண்ணியிருப்பவர் உண்பது, மூன்று புவனங்களில் உள்ளவர்களும் உண்டதாகும்.

''தண்டறு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டிசை நந்தி எடுத்துரைத் தானே.''

—மந்: 1858

அத்துடன் நில்லாது அந்தணர் வாழ்வதற்குரிய இடம் அமைத்துக் கொடுப்பதை விடவும், ஆயிரம் கோயில்கள் கட்டுவதை விடவும், ஒரு ஞானிக்கு ஒரு பகல் உணவளிப்பது மிகவும் சிறப்புடையது என்று உணவளிப்பதின் பெருமையை ஆசிரியர் கூறுகிறார்.

''அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்
பகரும் ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை என்பது நிச்சயந் தானே.''

—மந்: 1860

சைவ சமயாசிரியர்களாகச் சமயத்தை நிலை நாட்ட வந்த திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்ற பெருமக்கள் என்ன செய்

தார்கள்? தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவீழிமிழலை என்ற தலத்துக்கு இறைவழிபாட்டுக்கு எழுந்தருளியபோது நாட்டில் கொடுமையான பஞ்சம் தாண்டவமாடியது. மக்கள் உண்ண உணவின்றிப் பட்டினியால் வாடி வதங்குவதைக் கண்டனர். உடனே வீழிமிழலைப் பெருமானது திருவடியைச் சிந்தித்திருந்தனர். அச்சிந்தனையின் பயனாகப் பெருமான் இரங்கித் திருக்கோயிலில் படிக்காசு நல்கிப் பசிப் பிணி போக்க உதவியருளினான் என்று பெரிய புராண வாயிலாக அறிகிறோம். ஆதலால் நாயன்மார்கள் மக்களுக்கு உதவிசெய்வதையே சிறந்த தொண்டாக எண்ணியிருந்தனர் என்பது இவ்வரலாற்றிலிருந்து புலனாகிறது. ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' என்பது அப்பெருமக்கள் காட்டிய வழியாகும்.

''யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி''

என்பது திருமந்திரம்.

திருமூலர் அருளிச்செய்த திருமந்திரப் பாடல்கள், சமுதாயத்துக்குச் செய்யும் தொண்டினைச் சிறப்பித்துப் பேசுகின்றன. சமுதாயம் நல்ல முறையிலே அமைய வேண்டுமாயின் தனிப்பட்ட குடும்பம் நன்றாக நோய் நொடியின்றித் திடகாத்திரமுடைய மக்களைப் பெற்றிருக்க வேண்டும். அதற்காகவே அட்டாங்க யோகம் என்ற பகுதியில் இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம் ஆகிய நான்கு உறுப்புக்களைச் சிறப்பித்துக் கூறி உடல் வளர்ச்சிக்கு அவற்றின் இன்றியமையாமையை எடுத்து இயம்புகிறார் ஆசிரியர்.

இதனையடுத்துக் கருவிலேயே சிசுக்கள் கூன் குருடு முடமின்றி அறிவும் ஆற்றலுமுடையனவாக அமையவேண்டிக் 'கருப்பக்கிரியை' என்ற ஒரு பகுதியில் சிறந்த உபதேசங்களை அருளிச் செய்கிறார் ஆசிரியர். இப்பகுதியை இக்கால அறிஞர்கள் நன்கு பயின்று மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது தலையாய கடனாகும்.

### கரு உற்பத்தி

ஆண் பெண் கூட்டுறவின்போது சுக்கில சுரோணிதக் கலப்புக் கேற்றவாறு கருப்பையில் அமையும் சிசுவின் குணம் இருக்கும். போக காலத்தில் சுக்கில சுரோணிதக் கலப்பில் சுக்கிலம் எதிர்த்துச் செல்லுமாயின் அப்பொழுது உண்டாகும் சிசு இறைவனைப் போன்றிருக்கும்; அந்நேரம் சுரோணிதம் மாறி எதிர்த்து வருமாயின் சிசு திருமாலைப்போன்றிருக்கும்; இரண்டும் சமமாக இருப்பின் சிசு பிரமனைப் போன்றிருக்கும்.

''ஏற எதிர்க்கில் இறையவன் றானாகும்
மாற எதிர்க்கில் அரியவன் றானாகும்
நேரொக்க வைக்கின் நிகர்போகத் தானாகும்
பேரொத்த மைந்தனும் பேரர சாகுமே.''
—மந் : 458

சிசுவானது முறையே உருத்திரனுக்குரிய தாமத குணமும், விஷ்ணுவுக்குரிய சத்துவ குணமும், பிரமனுக்குரிய இராசத குணமும் பெறும் என்றும், இம் முக்குணங்களும் ஒத்த அச்சிசு பேரரசை ஆளும் திறமையுடையதாக இருக்கும் என்றும், ஆசிரியர் கூட்டுறவுக் காலத்தில் சிசுவுக்குக் குணம் அமைவதைக் குறிப்பிடுகிறார்.

### பால் வேறுபாடு

அடுத்து, கருவானது ஆணாகவோ பெண்ணாகவோ அமைவதும் ஆண் பெண் கூட்டுறவைப் பொறுத்ததாகும் என்று விளக்குகிறார். அக்கூட்டுறவின்போது தந்தையினிடத்து உண்டாகும் சுக்கிலம் மிகுந்து, தாயினிடத்து உண்டாகும் சுரோணிதம் குறைந்து வெளிப்படுமாயின் அச்சிசு ஆணாகும்; சுரோணிதம் மிகுந்து சுக்கிலம் குறைந்து வெளிப்படுமாயின் சிசு பெண்ணாகும்; இரண்டும் ஒத்திருப்பின் சிசு அலியாகும்.

ஆண்மிகில் ஆணாகும் பெண்மிகில் பெண்ணாகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்.''

என்ற அவரது பாடல் வரிகளை நோக்குக.

இனி போக காலத்தில் பிராணன் ஓடும் முறையினை ஒட்டிச் சிசு ஆணாகவோ பெண்ணாகவோ அலியாகவோ பிறக்கும் என்கிறார். போக காலத்தில் பிராணவாயு வலநாசியில் (சூரிய கலையில்) இயங்கினால் சிசு ஆணாகும்; இடநாசியில் (சந்திர கலையில்) இயங்கினால் சிசு பெண்ணாகும்; அக்காலத்தில் பிராணவாயுவை அபான வாயு எதிர்த்துவரின் இரண்டு குழந்தைகள் பிறக்கும்; சூரியகலை சந்திரகலை இரண்டிலும் ஒத்துப் பிராணன் இயங்கினால் குழந்தை அலியாகுமாம்.

''குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபான னெதிர்க்கில்
குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே.''
—மந்: 482

### ஆயுள்நிலை

இனி, சிசுவினது ஆயுளையும் இம்முறையிலே நிர்ணயிக்கலாமென்று ஆசிரியர் கூறுகிறார். சுக்கிலத்தை வெளிப்படுத்தும் பிராணனுக்கேற்ப ஆயுள் அமையும். சுக்கிலம் பாய்ந்த பின் ஐந்து விரற்கடை ஓட்டம் இருக்குமாயின் சிசுவின் ஆயுள் நூறாண்டாகும்; நான்கு விரற்கடையாயின் சிசுவின் ஆயுள் எண்பதாகும்; இம்முறையிற் பிராணசெயம் பெற்ற யோகி பகுத்தறிந்து பாய்ச்ச முடியும் என்கிறார்.

''பாய்ந்தபி னஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபி னாலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே.''
—மந்: 479

### தாயின் உடற்கூறு

கரு உற்பத்தியின்போதும் கரு வளரும் போதும் தாயினது வயிறு மலசலம் மிகாமல்

இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சிசு ஊமை குருடு இல்லாததாய் அறிவுடையதாய் இருக்கும்.

''மாதா உதரம் மலமகின் மந்தனும்
மாதா உதரம் சலமிகின் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தின் வைத்த குழவிக்கே.''

—மந்: 481

மேலும் பெண்ணோடு கலக்கும் நாளுக்கு முன்னாளிலே, கணவன் தன்னிடத்துக் காதலால் விளையும் இன்பம் மிகவேண்டின், அப்பெண்ணின் வயிருகிய பாண்டத்தில் மலத்தையும் வாத பித்த சிலேத்துமங்களையும் விலக்குமளவு விலக்கிப் பொருந்த வேண்டும்.

''கலக்குநாள் முன்னாள் தன்னிடைக் காதல்
நலத்தக வேண்டில்அந் நாரி யுதரக்
கலத்தின் மலத்தைத் தண்சீதத்தைப் பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே.''

—மந். 1955

இவ்வாறு சுக்கில சுரோணிதக் கலப்புக்கேற்பவும், பிராணன் இயக்கத்துக்கேற்பவும் மாதாவின் உடல்நிலைக்கேற்பவும் சிசு அமைகிறது என்பது புலனாயிற்று.

**கூட்டுறவு காலம்**

இனி, ஆண் பெண் கூட்டுறவுக்குரிய நாள் நேரம் ஆகியவை பற்றியும் ஆசிரியர் கருணையோடு அருளுகிறார். பெண்ணோடு கூடுவதற்கு மாதவிடாயான ஆறுநாட்களுக்குப் பின்னரும், மாதவிடாய் வருகின்ற ஆறு நாட்களுக்கு முன்னரும் ஆகும் என்று கூறுகிறார். மேலும் பொழுது புலர்வதற்கு முன்னுள்ள நான்கு முகூர்த்தமே (பின்னிரவு), சூரியகலையில் (வல நாசியில்) பிராணன் ஓடும். அதுவே போகம் செய்வதற்கு உகந்த நேரமாகும்.

செய்யும் அளவில் திருநாள் முகூர்த்தமே
எய்யுங் கலைகாலம் இந்து பரிதிகால்
நையுமிடத் தோடின் நன்காகும் நூல்நெறி
செய்க வலமிடந் தீர்ந்து விடுக்கவே.''

—மந். 1941

அஃதாவது முன்னிரவில் போகம் செய்வோர் வீரியம் இழப்பர்; பின்னிரவில் போகம் செய்வோர் உணர்வால் எய்தும் பயனை அடைவர். விஞ்ஞான வளர்ச்சியில்லாத காலத்தில் ஆசிரியர் இத்துணை விபரம் கொடுப்பது நம் மனோர்க்கு ஓர் அற்புதமாக இருக்கிறது.

**விந்து செயம்**

இறுதியாக விந்து செயம் அமையும் முறையைக் கூறுகிறார் ஆசிரியர். மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினியைச் சிரசுக்குமேல் கொண்டு செல்லும் ஆற்றலுடையார்க்கு விந்து நீக்கம் இல்லையாம். அஃதாவது, விந்து என்ற பெயரினையுடைய வித்தை அது பொருந்தியிருக்கின்ற மூலாதாரத்திலே ஓங்கி எரிகின்ற குண்டலினித் தீயால் விரும்பி எரித்து அச்சத்தியை முடிவில்லாச் சூரிய மண்டலத்தில் ஏற்றி மதிமண்டலத்தைச் சாரச் செய்தால் குளிர்ந்த அமுதம் உண்டாம்.

''விந்துவென் வீசத்தை மேவிய மூலத்து
நந்திய அங்கியி னாலே நயந்தெரித்து
அந்தமில் பானு அதிகண்ட மேலேற்றிச்
சந்திரன் சார்புறத் தண்ணமு தாமே.''

—மந்: 1958

இவ்வாறு யோக நெறியால் விந்து அழியாதவாறு புணர்ந்து ஆணும் பெண்ணும் ஆகிய இருவுடலும் கலந்தால், விந்து நழுவிப் போகாது. அவ்வாறு அமையும் போகமே சிவபோகமாம். இந்த முறையிலே மூடர்கள் மாதரின் ஆசையைத் தீர்க்கமாட்டார்கள்.

''யோகமவ் விந்து ஒழியா வகையுணர்ந்
தாகம் இரண்டுங் கலந்தாலு மாங்குருப்
போகஞ் சிவபோகம் போகிநற் போகமா
மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே.''

—மந் : 1960

அப்போது சிரசின்மேல் விந்துவும் (ஒளியும்) நாதமும் (ஒலியும்) உயர்ந்து பொருந்த, மூலக்கனலின் வெப்பம் மயிர்க்கால்தொறும் நிறைந்து சிந்தனை சிவமயமாக, உடம்பில் விந்து (வீரியம்) வற்றிவிடும்.

''விந்துவும் நாதமும் மேவக் கனல்மூல
வந்த வவன் மயிர்க் கால்தோறும் மன்னிச்
சிந்தனை மாறச் சிவமய மாகவே
விந்துவு மாகுமெய்க் காயத்தில் வித்திலே.''

—மந்: 1963

மக்கள் அனைவர்க்கும் அன்னசாரமான வீரியம் என்றும், பிராணசாரமான ஒளிமண்டலம் என்றும் இருவகை உண்டு. பிராணசாரமான ஒளிமண்டலத்தை அறிந்து அதிலே நிலைபெற்றுச் சாதிக்கவல்லார்க்குப் பொன்னொளியுடன் கூடிய பிரணவ தேகசித்தியும், அட்டமாசித்திகளும் கிட்டும். அன்னவர் அழியாது நீடுவாழ்வர்.

''அன்னம் பிராணனென் றூர்க்கு மிருவித்து
தன்னை யறிந்துகண்டு சாதிக்க வல்லார்க்குச்
சொன்ன மாமுருத் தோன்றும்எண் சித்தியாம்
அன்னவ ரெல்லாம் அழிவற நின்றதே.''

—மந்: 1966

ஆசிரியர் கூறுவதுபோன்று விந்து செயம் பெற்றால் குடும்ப விருத்தி குறையும். நாளடைவில் மக்கள் தொகை அதிகரிக்காது. இன்றைய உலகில் மக்கள் தொகை அதிகரிப்பினால் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டு எத்துணையோ கொடுமைகள் நிகழ்வதைக் காண்கிறோம். அரசினரும் குடும்பக்கட்டுப்பாட்டை வற்புறுத்தி அதற்கான செய்கை முறைகளைக் கையாண்டு வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மக்கள் தொகை இரு மடங்காகப் பெருகி உலகம் தாங்க முடியாத நிலை வருமோ என்று கணக்கில் வல்லுநர்கள் அஞ்சுகிறார்கள். இந்நிலையில் ஆசிரியர் திருமூலரின்

உபதேசம் எத்துணை இயல்பாகவுள்ளதாகவும் பயனுடையதாகவும் தெரிகிறது?

எனவே "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலர் காட்டிய இலட்சியம், அதனை அடைவதற்குரிய அன்புநெறி வளர்வதற்கேற்ற சமுதாய அமைப்பு எல்லாம் இன்றைய உலகுக்கு மிகவும் இன்றியமையாதன என்பது புலனுகிறது. ஆகவே அவர் காட்டிய நெறியே சென்று நாம் உய்தி பெறுவோமாக.

இதுகாறும் சிந்தித்ததின் முடிவாக, ஆசிரியர் திருமூலர் திருமந்திரம் என்னும் பொன்றுப் புகழ்பெற்ற அரிய நூலில் முதலில் மனித சமுதாயத்துக்கு இன்றியமையாத் தேவையாகிய அறவாழ்வைக் கூறிப் பின் சமயநெறிகளை எடுத்துரைத்து இறுதியாகத் தத்துவ ஞானத்தைக் காட்டி உய்தி பெறும் நெறியினை அருளிச் செய்த முறையினைப் போற்றிப் பயன் பெறுவோமாக.

"திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குக்
கருமூல மில்லையே காண்."

திருமூலர் திருவடி வாழ்க.

# திருப்புகழ் இசைத் தட்டு வெளியீடு

தமிழ் மக்களால் பெரிதும் பக்தியுடன் போற்றப்பெற்று வரும் துதிப் பாடல்களுள், அருணகிரி நாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் மிக்க சிறப்பிடம் பெற்றுத் திகழ்வனவாகும். திருப்புகழ்ப் பாடல்களின் தெய்விகச் சிறப்பு, சந்த நலம், தாள நுட்பம், பக்தி அனுபவம், மனமுருக்கும் திறன் முதலியன, எவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்ள வல்லன. இணையற்ற இத்துணைச் சிறப்பு மிக்க திருப்புகழ்ப் பாடல்களை, நமது இசைவாணர்கள் தமது இசையரங்குகளின் ஈற்றில், ஒருவகைத்துணுக்குப் பாடல்கள் போலவே, மிகவும் புறக்கணிப்பாகப் பாடுவது வழக்கம். இந்த அவல இழிநிலையினை மாற்றி, திருப்புகழ்ப் பாடல்களுக்கு இசை உலகில் மிக்க கௌரவமும் முக்கியத்துவமும் சிறப்பும் பெரிதும் ஏற்படச் செய்யும் வகையில், "இசைப் பேரரசி" சேலம் ஜெயலட்சுமி அவர்கள், புகழ்மிக்க எச். எம். வி. கம்பெனி மூலம், திருப்புகழ்ப் பாடல்கள் சிலவற்றை நீள இசைத்தட்டில் இனிய இசையில் வழங்கியிருக்கின்றுர்கள். அண்மையில் அருணகிரிநாதப் பெருமானின் 600-ஆம் ஆண்டு விழா, இந்திய நாடெங்கணும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றதனை அடுத்து, இங்ஙனம் "திருப்புகழ் இசைத் தட்டு" வெளியிடப் பெற்றிருப்பது, கலையன்பர்களுக்கும், முருக பக்தர்களுக்கும் பெருமகிழ்ச்சியைத் தரும் ஓர் அரிய நல்ல நிகழ்ச்சியாகும்.

'இசைப்பேரரசி' ஜெயலட்சுமி அவர்கள், சேலத்தில் தெய்விகச் செந்நெறியிலும், கலையுணர்விலும், அறப் பெருஞ்செயல்களிலும், சிறந்தோங்கித் திகழும் ஒரு பெரும் செல்வக் குடும்பத்தில் தோன்றியவர். சமயம், இலக்கியம், தத்துவம், சங்கீதம் முதலிய பல துறைகளில், சிறு வயது முதலே நல்ல பற்றும் பயிற்சியும் ஞானமும் இயல்பாகவே வாய்க்கப் பெற்ற இவர்கள், தமிழ் உலகில் "பரிதிமாற் கலைஞர்" என்று புகழ் ஓங்கிய திரு வி. ஜி. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ. அவர்களுக்குக் குருவாக விளங்கிய, மகாவித்துவான் மதுரைச் சபாபதி முதலியார் அவர்களின் பெயர்த்தியாரும், காலஞ்சென்ற தமிழவேள் திரு. சர். பி.டி. ராஜன் அவர்களின் நெருங்கிய உறவினரும் ஆவார்.

சுவாமி விவேகானந்தரின் "அயல்நாட்டுப் பயண வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகள்", பேர்ல் பக் அம்மையாரின் "மகளிர் கூடம்" முதலிய ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்துள்ள இவ்வம்மையார்க்கு, மைசூர் டி. சௌடையா, மகாராஜபுரம் விசுவநாத அய்யர், ஆகியோர் இசை பயிற்றிய பேராசிரியர்கள் ஆவர். கானமிர்த வர்ஷிணி—அனந்தப்பிரியா—இசைக் கலையறிஞர் முதலிய சிறப்புப் பட்டங்கள், இவ்வம்மையாருக்குத் தக்கோர்களால் அவ்வப்போது அளிக்கப்பெற்றுள்ளன. இந்தியப் பெரு நகரங்கள் பலவற்றில் மட்டுமேயன்றிக் கொழும்பு, யாழ்ப்பாணம், கோலாலம்பூர், மலாக்கா, ஈப்போ, சிங்கப்பூர் முதலிய அயல்நாட்டுப் பெரு நகரங்களிலெல்லாம் கூட, இவ்வம்மையார் சிறப்புற இசையரங்குகள் நிகழ்த்தியுள்ளார்.

எத்தனையோ பற்பல சமுதாய நல அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, பொதுநலத்தொண்டுகள் புரிந்து வரும் அம்மையார் அவர்கள், தாமே தம் பொறுப்பில் "இந்தியக் கலாச்சார நிறுவனம்" "செயலியற் கலை நிலையம்" என்னும் இரண்டு நிறுவனங்களைத் தோற்றுவித்து, நன்கினிது நடத்தி வருகின்றுர்கள். "பண்டைத் தமிழரின் இசைக் கலைத் திறன்கள்", "இசைப்பாடல் இயற்றுவோர்—பாடுவோர் நிலையில், தமிழக மகளிரின் கலைப்பணி" "103 தமிழ்ப் பண்களும், அவற்றிற்கு இணையான தற்கால இராகங்களும்" முதலிய அரிய பல ஆராய்ச்சிக்கட்டுரைகள், அம்மையாரால் எழுதப் பெற்று, "உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்" "பரோடா இந்தியச் சங்கீத சங்கம்" முதலிய அமைப்புகள் நடத்தும் ஆராய்ச்சி இதழ்களில் வெளியிடப் பெற்றுள்ளன.

சென்னைத் தமிழிசைச் சங்கம், மற்றும் டெல்லி, சென்னை, பாண்டிச்சேரி வானொலிகளில், முறையே "தேசியக் கலை நிகழ்ச்சி", "வந்தனை செய்வோம்", "பண்ணிசைந்த பதிகங்கள்" "திருப்புகழ் இசையரங்கு" முதலிய பல்வேறு கலை நிகழ்ச்சிகளில், அம்மையார் அவர்கள் அவ்வப்போது கலந்து கொண்டு சிறப்புறக் கலைப் பணி புரிந்து வருகின்றுர்கள்.

இவர்களால் முன்னரே பாடப் பெற்றுள்ள "திருவாசகம்-சிவபுராணம்" மற்றும் "தேவாரப் பாடல்" இசைத் தட்டுகள், தமிழகத்தில் மட்டுமேயன்றிச் சிலோன், மலேசியா, சிங்கப்பூர், தென்னுப்பிரிக்கா முதலிய இடங்களிற் பெரிதும் பரவி மிகவும் போற்றப் பெற்று வருகின்றன. அதுபோலவே அண்மையில் வெளிவந்துள்ள அம்மையாரின் இந்தச் சிறந்த இனிய "திருப்புகழ்" இசைத்தட்டுக்களும், தமிழர்கள் எங்கெங்குள்ளனரோ அங்கெல்லாம் பரவிப் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை. தமிழகத் திருக்கோயில்களில், குறிப்பாக முருகன் திருக்கோயில்கள் எல்லாவற்றிலும், இத் "திருப்புகழ் இசைத் தட்டுகள்" இடையருது ஒலித்து, பக்தர்களுக்குப் பெரிதும் பரவசம் ஊட்டும் என்பது திண்ணம். திருப்புகழ்ப் பாடல்களை இனிய நல்ல இசையிற் பாடிய அம்மையார்க்கும், இசைத் தட்டுகளாக்கி வெளியிட முன் வந்த எச். எம். வி. கம்பெனியார்க்கும், சமய உலகமும், பக்தர் உலகமும் பெரிதும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையனவாகும்! திருப்புகழ் நீள இசைத்தட்டு விலை ரூபாய் 45. கிடைக்குமிடம்: "சரசுவதி ஸ்டோர்ஸ், 2/159, அண்ணுசாலை, சென்னை-2."

—ஆசிரியர்

# மணிமொழிகள்

(முற்றொடர்ச்சி) —: வாரியார் :—

52. நீ வயலில் எந்த விதையை விதைக்கின்றனையோ அந்த விளைவுதான் விளைந்து உன் வீட்டிற்கு வரும். கம்பை விதைத்து விட்டுக் கோதுமையை எதிர்பார்க்கக் கூடாது. கருவேலை நட்டுச் சந்தன மரத்தைப் பெறமுடியாது. அதுபோல நீ நன்மையே செய்தால் உனக்கு நன்மையே வரும்; தீமையைச் செய்தால் தீமையை அநுபவிப்பாய்.

53. ''நன்மையுந்தீமையுந் தான்தர நணுகும்''

1. புலன்களை வென்றவனே வீரன்.

2. இறைவனுடைய இலக்கணங்களையுணர்ந்தவனே ஞானி.

3. துன்பங்களைப் பொறுப்பவனே தவசி.

4. விருந்தினருக்கென்று வாழ்பவனே இல்லறத்தான்.

5. அறஞ் செய்ய வாய்ப்பு இல்லாத போது (கொடுக்க முடியாதபோது) இறந்தவனே இருந்தவன்.

6. கொடுக்காமல் பொருளைத் திரட்டி வாழ்பவனே இறந்தவன்.

54. அழுக்கு மூன்று வகையாகும். அவையாவன :

1. மன அழுக்கு. அவை : பொறாமை, ஆசை, கோபம், பகை என்பன. இந்த மன அழுக்கைத் ''தியானம்'' என்ற நீரால் கழுவுக.

2. வாயழுக்கு. அவை : பொய், புறங்கூறல், தீச்சொல் என்பன. இந்த வாயழுக்கைத் ''துதி'' என்னும் நீரால் கழுவுக.

3. மெய்யழுக்கு . அவை : கொலை, புலை, பிறன்மனை நயத்தல், களவு முதலியன. இந்த உடலழுக்கை 'அருச்சனை' என்னும் நீரால் கழுவுக.

55. நாவுக்கு அடிமையாகாதே! நல்லுணவு எங்கே? எங்கே? என்று தேடி ஏங்காதே. இறைவனருளால் கிடைத்ததை உண்டு திருப்தியடை. நாவுக்கு அடிமையானால் உனது நலங் குறையும்.

மீன் சதா உணவாசையினால் ஒழியாமல் தண்ணீரில் உலாவுகின்றது. ஒரு சமயம் உணவாசையால் தூண்டிலில் பட்டு இறந்துபடுகின்றது.

56. பிறவியைத் தருவது பற்றும், அவாவுமாம் என்று அறி.

பற்று என்பது உனது பொருளில் உள்ளம் வைப்பது.

அவா (ஆசை) என்பது பிறர்பொருளில் உள்ளத்தைச் செலுத்துவது.

பற்று வைத்திருப்பதால் குற்றமில்லை. ஆனால் பிறவி தொலையாது.

ஆசை வைத்திருப்பதால் பெருங் கேடு வரும். முதலில் ஆசையைத் தொலைத்து விடு ; பின்னர் பற்றையும் ஒழித்து விடு.

''அற்றது பற்றெனில் உற்றது வீடு''.

57. எண் சாண் உடம்புக்குச் சிரமே சிறந்தது. அத்தகைய தலைக்கு வைக்கும் அணையை (தலையணையை), சாணியென்றும் சந்தனமென்றும் அறியாத காலுக்கு வைத்துப் படுக்காதே. அவசியமானால் காலுக்குத் தனியாக ஒன்றை அடையாளத்துடன் வைத்துக் கொள்.

அரசனுக்கு இடும் சிங்காதனத்தைப் பணியாளனுக்கு இடுவது போலாகும் அது.

58. பணிவு என்ற பண்பு உன் வாழ்க்கையின் உயிர் நாடி. பணிவு இன்றி வாழ்பவனுடைய வாழ்க்கைத் தரம் நிச்சயமாக உயர்ச்சியடையாது. அடக்கமே உன்னை அமரனாகச் செய்யும். அதுவும் இளமையில் அந்த அடக்கம் வருவது பொன் மலர் மணம்பெற்றாற் போலும்.

இளமையில் வளையாத மூங்கில் கழைக் கூத்தாடியின் காலில் மிதிபடுகின்றது.

இளமையில் வளைந்த மூங்கில் அரசன் கரத்தில் வில்லாகப் பூசிக்கப்படுகின்றது. அன்றியும் வளைந்த மூங்கில் அரசனுடைய பல்லக்கில் மன்னனது மணி மகுடத்திற்கு மேல் விளங்குகின்றது.

59. இன்பமும் துன்பமும் நமது மனத்தினின்றும் உண்டாகின்றன ; மனமே பந்தத்திற்கும் முத்திக்குங் காரணமாகிறது. தீய மனம் நரகத்தைத் தருகின்றது. நன்மனம் பரகதியைத் தருகின்றது. மனத்தழுக்கு அற்றவரே பெரியார். மனத்துக்கண் மாசிலனாதலே எல்லா அறங்களுமாம். ஆதலினால் உன் மனம் பளிங்குபோல் இருக்கட்டும்.

60. ஒரு மனிதனை வெளித்தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவனென்றோ தீயவனென்றோ உறுதி செய்து விடாதே. உள்ளத்தின் பண்பைக் கண்டு முடிவு செய்.

பலாப் பழம் முள்ளு முள்ளாக மேலே தோற்றமளிக்கும். உள்ளுக்குள் சுவையுள்ள சுளைகள் பல உண்டு. வீணை கோணல்—ஆனால் இனிய நாதமுண்டு.

எட்டிப் பழம் மேலே பளபளவென்றிருக்கும். தொட்டாலே கசக்கும். நாவற் பழம் கருமை; ஆனால் இனிக்கும். பாம்புக் குட்டி பளபள வென்றிருக்கும் ; கொடிய விடத்தைத் தரும். அம்பு நேராக இருக்கும் ; உயிரை வாங்கும்.

61. உன் இனத்துடன் நீ ஒற்றுமையாக இரு. அப்போதுதான் உனக்கு உயர்வும் மதிப்பும் அழகும் உண்டாகும். உன் இனத்தை விட்டு நீ பிரிந்து விட்டால் நீ எல்லோராலும் வெறுக்கப் படுவாய்.

தலையிலே மயிர் இருக்கும்போது அது எவ்வளவு அழகாக உளது? இருண்டு சுருண்டு, நெய்த்து மிக அழகாக அமைந்து மதிப்பும் அழகும் பெறுகின்றது. ஆனல் தன் இனத்தை விட்டு ஒரு மயிர் தனித்து வேறுபட்டு வந்துவிடு மானல் அது இகழ்வும் அருவருப்பும் அடைகின்றது. இதனை நீ என்னி ஒற்றுமையாக இரு.

வாழ்த்து

இறைவனது திருநாமம் வாழி ;
போக யோக முத்திகளைத் தரும்
அப் பரம்பொருளின் திருவடிகள் வாழி ;
அறநெறி வாழி ; அன்புச் சமயம் வாழி ;
அருளின்பம் வாழி; உயிர்கள் எல்லாம் வாழி;

## செய்திச் சுருக்கம்

### திரு. வி. கே. ஆர்க்குப் பாராட்டு விழா

மாநிலம் புகழும் காஞ்சியம்பதியில் அறம் வளர்க்கும்அருள்மிகு காமாட்சியம்மையின் திருக்கோயில் திருப்பணிக் குழுவின் தலைவராக இருந்து, திறம்படக் குடநீராட்டு விழாவைச் செய்து முடித்த திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்களுக்கு, காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமி களின் அருளாசியுடன், சென்னை ஆழ்வார்பேட்டை வீனஸ்காலனியில், முன்னுள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில், 31-7-76 அன்று, பாராட்டு விழா நடை பெற்றது. திரு. சி. ஆர். பட்டாபிராமன், நீதிபதி எஸ். சூரியமூர்த்தி, திரு. ம பொ. சிவஞானம், எஸ். ஒய். கிருஷ்ணசாமி, டாக்டர் டி. எம். பி. மகாதேவன், கி. வா. ஜகந்நாதன், திரு. அ. ச. ஞான சம்பந்தம், திருமதி சௌந்தரம் கைலாசம், திரு. நா. பார்த்தசாரதி, திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் ஆகியோர் பலர், பாராட்டுரை வழங்கிச் சிறப்பித்தனர். ''ஆலயத் திருப்பணிமணி'' திரு. வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள், மேலும் இத்தகைய சிறந்த பல திருப்பணிகள் செய்து கொண்டு, அருள்மிகு காமாட்சியம்மை உடனுறை திருவேகம்பன் திருவருளால் நீடுழி காலம் வாழ்க! வாழ்க!! எனப் பலரும் வாழ்த்தி மகிழ்ந்தனர்.

### திருக்கோவையார் வகுப்புத் தொடக்க விழா

சென்னைத் தியாகராயநகர்த் தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில், 2-8-76 திங்கட் கிழமையன்று மாலை 6.30 மணியளவில், சுந்தர மூர்த்தி சுவாமிகள் குருபூசை விழாவும், திருக்கோவையார் வகுப்புத் தொடக்க விழாவும், முன்னுள் அறநிலைய ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார் B.A. B.L., அவர்கள் தலைமையில், மிகவும் சிறப்புற நிகழ்ந்தன. ''திருவாசகம் - திருக்கோவையார்'' இரண்டிற்கும் இடையேயுள்ள ஒப்புமைத் தன்மைகளையும், சிறப்பியல்புகளையும் பற்றித் ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A. M.O.L. அவர்கள் அரியதொரு விரிவுரை நிகழ்த்தினர். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை மாலைகளில், திருக்கோவையர் வகுப்புக்கள் தொடர்ந்து நடத்தப் பெற்று வருகின்றன. ஐம்பதுக்கு மேற்பட்ட அன்பர்கள் முறையாக வந்து கலந்து கொண்டு பயன் பெறுகின்றனர்.

### சென்னைக் கம்பன் கழகம்

தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரில், கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானின் இரண்டாம் ஆண்டுவிழா, 1976 ஆகஸ்டு 14, 15 தேதிகளாகிய இரு நாட்களிலும், திருமயிலை ஏ. வி. எம். இராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. 14-8-76 காலை நிகழ்ந்த ஆராய்ச்சிக் கருத்தரங் கிற்குத் திரு. மு. அருணசலம் தலைமை தாங்கினர். ''இராமாயணங்களில் அனுமன்'' என்னும் தலைப் பில் திரு பி. திருஞானசம்பந்தம், டாக்டர் எஸ். சங்கரராஜநாயுடு, டாக்டர் எஸ். கே. நாயர், திரு டி. ஆர். சர்மா, திரு அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

அன்று மாலை நிகழ்ந்தபேரவைக்கு, முன்னுள் நீதிபதி திரு என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தலைமை தாங்கினர். டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமி இறைவணக்கம் பாடினர். நீதிபதி திரு மு.மு. இஸ்மாயீல் வரவேற்புரையும், முன்னுள் நீதிபதி திரு. எஸ். மகராஜன் தொடக்கவுரையும், திருமதி டாக்டர் இந்திரா சோமசுந்தரம் விழாமலர் வெளியீட்டுரையும் நிகழ்த்தினர். கவிஞர் கண்ணதாசன், கம்ப ராமாயணம் புதிய பதிப்பை வெளியிட்டார். ''கம்பன் கண்ட நாடு'' என்னும் தலைப்பில், திரு க.கு. கோதண்டராமன் (கோசலம்), திரு. தெ. ஞானசுந்தரம் (கிஷ்கிந்தை), திரு இராதாகிருஷ்ணன் (இலங்கை) உரை நிகழ்த்தினர்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை (15-8-76) காலையில் நிகழ்ந்த கவியரங்கத்திற்குத் திரு. கி.வா. ஜகந் நாதன் தலைமை தாங்கினர். சீர்காழி திரு எஸ். கோவிந்தராஜன் இறைவணக்கம் பாடினர். ''கம்ப னின் பெண் பாத்திரங்கள் பேசுகின்றன'' என்னும் தலைப்பில், கம்பராமன் (கோசலை), ம. வே. பசுபதி (கைகேயி), டாக்டர் தமிழண்ணல் (தாரை), திரு அப்துல்ரகுமான் (சூர்ப்பணகை), திரு. தமிழவேள் (மண்டோதரி), திரு சொ. மீ. ச. சுந்தரம் (சீதை) ஆகியோர், கவிதைகள் இயற்றி வழங்கினர்.

அன்று மாலை நிகழ்ந்த பட்டிமன்றத்திற்கு நீதிபதி திரு மு.மு. இஸ்மாயீல் அவர்கள் தலைமை தாங்கி னர். செல்வி ஜெயஸ்ரீ இறைவணக்கம் பாட, திரு பழ. பழநியப்பன் அவர்களால் வரவேற்புரை நிகழ்ந்தது. ''சேர்ந்த தம்பிகளில் சிறந்தவர் யார்?'' என்னும் தலைப்பில் ''குகனே'' என்று திரு. இராதாகிருஷ்ணன், திருமதி நபீசாகலீம், திரு. அ. அருணகிரி ஆகியோரும், ''சுக்ரீவனே'' என்று திரு அ. ச. ஞானசம்பந்தம், திருமதி கலாதாக்கர், திரு. சுகிசிவம் ஆகியோரும்; ''விபீடணனே'' என்று திரு. க. கு. கோதண்டராமன், திருமதி இரா. காந்திமதி, திரு. தெ. ஞானசுந்தரம் ஆகியோரும் வழக் குரை நிகழ்த்தினர். தலைவர் அவர்கள் நீண்டதோர் அரிய ஆராய்ச்சி உரை நிகழ்த்தி, ''குகனே சிறந்த வன்'' என்று தீர்ப்புரை அளித்தார். திரு. கி.மு. அழகர்சாமி அவர்களின் நன்றியுரைக்குப்பின், நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

# சேக்கிழார் விளக்கும் தத்துவச் செந்நெறி

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

நமது தமிழ் நாட்டின் தெய்வப் புலவர்களுள் ஒருவர் சேக்கிழார் சுவாமிகள். அவர் இயற்றியருளிய நூல், பெரியபுராணம். அஃது எத்தனையோ பல அரும்பெரும் சிறப்புக்கள் வாய்ந்தது. ஆயினும், பெரும்பாலோர் அதன் கண் வரும் கதைப் பகுதிகளை மட்டுமே அறிவர், படிப்பர். பெரியபுராண விரிவுரைகள் செய்வோரும், அதன் கதைப் பகுதிகளை மட்டுமே, பொதுவாகக் கூறிச் செல்வர். பெரியபுராணம் மிக எளிய இனிய தெளிவான நடையிலேயே அமைந்திருக்கின்றது. எனினும், அதன்கண் இடையிடையே அரிய நுண்ணிய ஆழமான கருத்துக்கள் நிறைந்த பகுதிகள் பல உண்டு. அவற்றைப் பெரும்பாலோர் படிப்பதில்லை. பொதுவாக அவற்றை ஒதுக்கிவிட்டுக் கடந்து மேற்செல்வதே, பெரும்பாலும் பழக்கமாக இருந்துவருகின்றது.

சேக்கிழார் சுவாமிகள், நாயன்மார்களின் கதை அல்லது வரலாறுகளை மட்டுமே பாடி அருளியவர் அல்லர். கதைகளைக் கலைநுட்பமும், கருத்தாழமும், கற்பனைவளமும், தத்துவச் செறிவும் அமையும்படி அழகுறப் பாடி அளித்தவர், நம் தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமான்! அவர்தம் பெரியபுராணம் வெறும் கதைகளை மட்டுமே கொண்டதன்று; எத்துணையோ பல சமய தத்துவ நுட்ப விளக்கங்களை உட்கொண்டது. இவ்வுண்மையைச் செவ்வி தின் வலியுறுத்தப் பெரியபுராணத்தில், பின் வரும் பகுதி ஒன்றின் பொருட் சுருக்கத்தை மட்டும் ஈண்டுக் கண்டு அமைவோம்.

**பெரியபுராணத்தில் ஒரு பகுதி :**

திருஞானசம்பந்தப் பெருமான் பாண்டிய நாட்டிற்குச் சென்றார். மதுரை மாநகரில் சைவ சமயத்தை நிலைநிறுவினர். நின்றசீர் நெடுமாறர்-மங்கையர்க்கரசியார் - குலச்சிறையார் என்பவர்களை ஆட்கொண்டார். பாண்டி நாட்டில் சிவநெறி செழித்தோங்கச் செய்தார். பின்னர் அங்குள்ள தலங்களை வழிபட்டுக் கொண்டு சோழநாட்டிற்கு மீண்டும் போந்தார். சோழநாட்டில் திருக்களர்-திருப்பாதாளீச்சுரம் திருக்கொள்ளம் பூதூர்-திருநள்ளாறு-திருத் தெளிச்சேரி முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு செல்லலுற்றார். அதுபோது வழியில் போதிமங்கை என்னும் ஓர் ஊர் இருந்தது. அங்கே புத்தர்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் திருஞானசம்பந்தர் தமது திரளான அடியவர் திருக்கூட்டத்தோடு வருதலைக் கேள்வியுற்று, அழுக்காறு காரணமாக மனம் வெதும்பினர். புத்த நந்தி என்பவரின் தலைமையின் கீழ்த் திரண்டு கூடி வந்து, திருஞானசம்பந்தரையும், அவர்தம் திருக்கூட்டத்தாரையும் வழிமறித்துச் சமயத் தத்துவ வாதப்போருக்கு வருமாறு வலியுறுத்தி அழைத்துத் தலத்து நிறுத்தினர்.

**தத்துவ வாதம் :**

அவர்கள் விடுத்த அறைகூவலைத் திருஞானசம்பந்தர் 'இதுவும் இறைவன் திருவுளம் போலும்' எனக் கருதி, அங்ஙனமே ஆகுக என்று ஏற்றுக் கொண்டார். சாரிபுத்தன் என்னும் ஒருவர், பௌத்தர்களின் தலைவராக அமைய, சமணர்கள் புரிந்த அனல்வாதம் புனல் வாதம் மந்திரவாதம் முதலியன அல்லாமல், தம்முடன் தத்துவவாதம் மட்டுமே செய்தல் வேண்டும் எனப் பௌத்தர்கள் வற்புறுத்தினர். அங்ஙனமே அதற்குத் திருஞானசம்பந்தர் இசைந்தார். அப்போது திருஞானசம்பந்தரின் அடியவர்களுள் ஒருவராகிய சம்பந்தசரணலயர் என்பவர், அப்பௌத்தர்களுடன் தத்துவ வாதம் புரிதற்குத் தம்மை அனுமதித்தருளுமாறு திருஞானசம்பந்தரின் திருவடியிற் பணிந்து விண்ணப்பித்துக் கொண்டார்.

இருதிறத்தாரும் ஒரு மண்டபத்திற்குச் சென்று அமர்ந்து வாதம் நிகழ்த்தத் தலைப்பட்டனர். பௌத்தர்கள் விடுத்த அறைகூவலை ஏற்றுக்கொண்ட சம்பந்த சரணலயர், பௌத்தர்களின் தலைவராகிய சாரிபுத்தன் என்பவரை நோக்கி 'இனி நாம் வாதத்தைத் தொடங்குவோம். உங்களுடைய கடவுளின் இயல்பினையும், அவர் அருளிச்செய்து விளக்கியுள்ள வீடுபேற்று இயல்பினையும் பற்றிக் கூறுக' என்றார். அதன்படியே தொடங்கப்பெற்ற சமய வாதத்தில், சாரிபுத்தன் என்பவர், தமது பௌத்த சமயத்தின் கொள்கைகளைக் கூறலாயினர். அவர்கள் புரிந்த தத்துவ வாதம் வருமாறு:—

**சாரிபுத்தன் :** புத்தர்பெருமான், எங்களது பௌத்த சமயத்தின் தலைவர். அவர் எல்லையற்ற ஊழிகள் தோறும், எத்தனையோ பல எண்ணற்ற பிறவி வேறுபாடுகளில் புகுந்து பிறந்தும் இறந்தும், பிற உயிர்களுக்கு உறுதி செய்து, பின்னர் அக்கதியினின்றும் மாறி வீடுபேறு எய்துவார். கணபங்கம் என்னும் நிலையாமை இயல்பு கூறுவது, எங்களுடைய பௌத்த சமயம். அதன்கண் நின்று தானம்

தவம் யோகம் என்பவற்றை முறையாகச் செய்தால், அவற்றின் பயனாக ஞானம் உதிக்கும். அந்த ஞானத்தினால் பேரின்ப முத்தியைப் பெறலாம். அங்ஙனம் ஞானம் எய்திப் பேரின்ப முத்தி பெற்றவரே எங்களுடைய புத்தர் பெருமான். எல்லா மக்களும் உய்தி பெற்று ஈடேறும்படி, அவர் தருமநெறிகளை உலகிற்கு உபதேசித்தார். அவரே நாங்கள் வணங்குகின்ற கடவுளாவர்.

**சாணலயர் :** நல்லது; உங்களது தலைவர் வீடுபேறாகிய முத்தி பெற்றார் என்று கூறினீர், அம்முத்தியின் இயல்பு எத்தகையது?

**சாரிபுத்தன் :** அறிவுள்ள உயிர்கள் எல்லாம், உருவம், வேதனை, குறிப்பு, செய்கை, ஞானம் என்னும் ஐந்து கந்தங்களும் சேரும் சேர்க்கையால் உண்டாவன. இவ்வைந்தும் நீங்கி அழிந்தொழிதலே, வீடுபேறு ஆகிய முத்தி அல்லது நிர்வாணம் என்பது, பௌத்தர்களாகிய எங்களுடைய கொள்கை.

**சாணலயர் :** உங்களது சமயத்துக்குரிய தலைவராகிய புத்தர் முத்திபெற்றார் எனின், அவர் முன்பு பெற்றிருந்த ஞானம் முதலாகிய ஐந்து கந்தங்களின் சேர்க்கையும் அவரிடமிருந்து ஒருங்கே அழிந்து கெட்டிருத்தல்வேண்டும். அங்ஙனம் அழிந்து கெட்டனவாயின், உங்கள் கொள்கையின்படி அவரும் அழிந்தனராதல் வேண்டும். அழிந்த பின்னர் அவரை இருப்பவராகக் கொண்டு, நீவிர் விகாரை என்னும் கோயில்களைக் கட்டி அவற்றுள் நிற்றல் இருத்தல் படுத்தல் ஆகிய நிலைகளில் அவருக்கு வடிவங்களையும் அமைத்து, ஊட்டுதல் பூச்சூட்டுதல் கேட்பித்தல் முதலிய வழிபாடுகளையும் நீங்கள் செய்வது எற்றுக்கு? நீவிர் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக் கொள்பவர் யாவர்?

**சாரிபுத்தன் :** இருவினைக்குக் காரணமாகப் பஞ்சகந்தம் ஆகிய உடம்புகெட, எம் தலைவன் முத்தியிற் சேர்ந்திருக்கின்றார். அதனால் அவருக்குக் கோயிலும் வடிவமும் விழாவும் பூசையும் எடுத்தல் பொருந்துவதே யாகும்.

**சாணலயர் :** இருவினைக்குக் காரணமான பஞ்சகந்தங்களால் ஆகிய உடம்பு கெடுதலே முத்தி என்றீர். அங்ஙனமாயின் முத்தியிற் சேர்ந்ததும், அவருக்கு உடலும், பொருள்களை உணரும் கருவிகளாகிய கண் முதலிய கரணங்களும், இல்லாது ஒழிதல் திண்ணம். உடலும், கரணங்களும் இல்லாதொழிந்தால், அவருக்கு உணர்வு உதித்தல் இல்லையாகும். அவர் பொருட்டு உங்களாற் செய்யப்பெறும் வழிபாட்டை ஏற்றுக்கொள்ளுதற்கு, அவருக்கு உணர்வு வேண்டும்; அவ் உணர்வு உண்டாதற்கு ஐந்து கந்தங்களின் சேர்க்கை வேண்டும். முத்தியில் ஐந்துகந்தங்களும் அவிந்து ஒழிகின்றன என்பது உங்கள் கொள்கை. ஆதலின் உங்கள் தலைவனுக்கு முக்திநிலையில் உணர்வு நிகழ்வதும், வழிபாடு புலனாவதும் இல்லை. எனவே நீவிர் அவர் இருப்பதாகக் கொண்டு, இங்கு எடுக்கும் கோயில்—வடிவம்—வழிபாடு முதலியன, பயனில் செயல்களேயாம்.

**சாரிபுத்தன் :** அறிவு உணர்தலின்றி உறக்கத்தில் அழிந்து கிடக்கின்ற ஒருவனை, மற்றொருவன் நிந்தித்து மிதிப்பானாயின், உறங்குபவன் அதனை உணராவிடினும், நிந்தித்து மிதித்தவனுக்கு அச் செயல்களானாய தீவினைப் பயன் வந்தே தீரும். அதுபோல, முத்தியில் இருக்கும் முதல்வன் நமது வழிபாடு முதலியவற்றை உணராவிடினும் கூட, நாம் செய்யும் வழிபாடு முதலியவற்றின் பயன், நமக்கு வருதல் திண்ணம்.

**சாணலயர் :** ஒருவன் தனக்காகச் செய்யப்படும் ஒரு செயலின் பயனை எய்துவதற்கு, அதனை அவன் உடன்படுதலோ வெறுத்தலோ செய்தல் வேண்டும். இரண்டுமே நிகழாத போது, ஒருவன் ஒரு செயலின் பயனை எய்துவதில்லை. உம் தலைவன் பஞ்சகந்தமும் அவிந்த நிலையாகிய முத்தியில் நின்றான் எனப்படுதலால், உடன்பாடோ வெறுப்போ அவன்பால் நிகழ்தற்கு வாய்ப்புஇல்லை. ஆதலின் அவன் நின் வழிபாட்டினை ஏற்றுக்கொள்ளுதலோ, பயன் தருதலோ இல்லை.

**சாரிபுத்தன் :** பயன் வருதலுக்கு உடன்பாடும் எதிர்வும் ஆகிய உணர்வுடைய மனநிலை வேண்டுவதில்லை. முன்னைய உணர்வு இன்றி உறங்கினவனுக்குப் புது நிகழ்ச்சிகளில் உடன்பாடும் எதிர்வும் இல்லை. ஆனால் அவனைக் கொன்ற ஒருவனுக்குக் கொலைப்பாவம் வரும். அதுபோல எம் இறைவன் எமது வழிபாட்டில் உடன்பாடும் எதிர்வும் இலனாயினும், வழிபாட்டின் பயன் எமக்கு வருதல் ஒருதலை.

**சாணலயர் :** நன்று சொன்னாய். உறங்கினோன் கொலைப் பயன்போல, வழிபாட்டின் பயன்வரும் என்றாய். கொலையினால் பிரிக்கப்பட்ட உயிரும், உடலும், கொலைத் துன்பம் எய்திய உட்கருவிகளும் உண்டு என்பது, நின் உவமையினால் பெறப்படும். அவ்வுவமையின்படி, உனக்கு உன் வழிபாட்டின் பலன் வருதற்கு, உனது வழிபாட்டிற்குரிய இறைவனுக்கு உயிரும் உடலும் கருவிகளும் ஆகியவை, அம்முத்தி நிலையிலும் இருத்தல் வேண்டும். அங்ஙனம் இருப்பின், அது கந்தங்கள் அழிந்த நிலை அன்றாம். அன்றாயின் நுமது புத்தன் முத்தியில் சென்றதும் இல்லையாய் முடியும். நீ செய்யும் வழிபாட்டின் பயன் நினக்கு வரவேண்டுமானால், நின் முதல்வனுக்கு உடல் உயிர் கரணம் ஆகியவைகள் அமைந்திருத்தல் வேண்டும்; அவன் அழியாத முத்தியில் சென்றிருப்பானாயின், உடல் உயிர் கரணம் முதலியன அவனுக்கு இல்லையாய், முன்பே கெட்டொழிந்திருத்தல் வேண்டும். இதனால் நின்னுடைய கொள்கையும் கூற்றும் ஒன்றினொன்று பொருந்தாமல் முற்றிலும் முரண்பட்டு நிற்கின்றன.

மேலும், நின் தலைவன் ஒழியாத பேரின்ப முத்தியுற்றான் என்றாய். ஞானமே ஆன்மா; அது நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய்க் கணந்தோறும் தோன்றி அழியும்; அவ்வாறு தோன்றியழியுங்கால் வரும் வாசனையைப் பற்றுதலால் அறிவு நிகழும். அவ்வாசனையும் ஞானமும் அழிவதே, முத்தி என்பது நினது கொள்கை.

இன்பம் அடைதற்கு அறிவு உள்ளதாதல் வேண்டும். அறிவு நிகழ்தற்குக் கந்தங்களின் செயற்பாடு வேண்டும். நீ சொல்லுவது போலக் கந்தத்துடனே அறிவும் கெடுதலே முத்தியாயின், அந்த முத்தியில் இன்பம் அடைதற்கு எத்தகைய வாய்ப்பும் இல்லை.

கந்தங்கள் அவிந்து பொய்யாய் முடிந்த நிலையில், எம் புத்தன் முத்தியில் சேர்ந்தான் என்றும்; அதற்கும் முன்னமே அவன் எல்லாப் பொருள்களையும் உணர்ந்து, உலகம் உய்ய அறம் உரைத்துப் போயினுன் என்றும் கூறினுய். கணந்தோறும் தோன்றி அழியும் இயல்பிற்றுகிய அறிவினை உடைய அவன், கணந்தோறும் தோன்றி அழியும் பொருள்கள் முழுவதையும் ஒருங்கு உணர்தல் யாங்ஙனம்? நும் புத்தன் பெற்ற முத்திநிலை பொய்யாயினவாறு போல, அவன் எல்லாம் உணர்ந்து அறம் உரைத்துப் போந்தான் என்பதும் பொய்யே யாகும்.

**சாரிபுத்தன் :** உணர்வாவது பொதுவும் சிறப்பும் என்று இரண்டு வகைப்படும். ஓர் இடத்தில் அடர்ந்து உள்ள மரங்களைப் பிரித்துக் கூருமல் தொகுதியாக நோக்கிக் காடு என்றல் பொது உணர்வு. அங்ஙனமன்றி அங்குள்ள மரங்களைத் தனித்தனியாகச் சுட்டித்தேக்கு-வேங்கை சந்தனம்-மந்தாரம் என்று கூறி உணர்தல் சிறப்புணர்வு. இவ்வாறே எல்லாப் பொருள்களின் உணர்வும், பொதுவும் சிறப்பும் என இரு திறப்படும். தீயானது விறகுக் குவியலின் வைப்பினும் சுட்டெரிக்கின்றது. விறகைப் பிரித்துத் தனித் தனியே ஒவ்வொன்ருக வைப்பினும் எரிக்கின்றது. அதுபோல உணர்வானது, எல்லாப் பொருள்களையும் தொகுதியாய்ப் பொதுவாகவும் கண்டு கூறும்; தனித் தனியாகச் சிறப்பாகவும் கண்டு கூறும். இவ்வகையிலேயே எங்கள் முதல்வனும் பொருள்களையெல்லாம் தொகுத்தும் விரித்தும் முதற்கண் தான் உணருகின்ருன்; பின்னர்த் தொகுத்தும் விரித்தும் ஏனையர்க்கு உரைக்கின்ருன்.

**சரணுலயர் :** நன்று கூறினுய். உணர்வு இல்லாத தீயின் செயலை உணர்வின் செயலுக்கு உவமையாக எடுத்துக் காட்டினுய். பொருள்களைச் சார்ந்து நின்ற உணர்வு உருவுடையதன்று. நீ உவமை கூறிய எரியோ உருவம் உடையது. ஆதலின் நீ கூறிய உவமை இடப்பொருத்தம் உடையதன்று. மற்றும் நின் தலைவன் நிகழ்காலமேயன்றி, மற்றும் அதனை முன்னும் பின்னுமாகத் தொடர்ந்துவரும் இறப்பு எதிர்வு என்னும் காலங்களையும் தொகுத்து, முக்காலமும் ஒருங்கே அறிவான் என்ருய். அங்ஙனம் நின் தலைவன் அறிவானுயின், முக்காலமும் உணரும் உணர்வுக்கு உவமையாக நீ கூறிய பொருளாகிய எரியும்கூட, நிகழ்காலத்தில் இடப் பெற்றபோது சுடுதலே அன்றி, ஏனைய இறப்பு எதிர்வுகளிலும் கூடச் சுடுதல்வேண்டும். தீ அங்ஙனம் சுடுதல் யாண்டும் இல்லையாதலின், நீ கூறிய உவமை காலப் பொருத்தமும் உடையதன்று.

ஆதலின், நீ கூறிய முத்தியிலக்கணம் பொருந்தாதவாறு போல, நின் தலைவன் ஒரு கணத்திலேயே எல்லாப் பொருள்களையும் முழுதொருங்குணர்ந்தான் என மொழிந்த நின்கூற்றும் பொருந்தாமல் புரைபட்டது. எனவே, இத்தகைய புரைபட்ட அறிவுடன் நின் தலைவன் ஆகிய புத்தன் கூறிய திரிபிடகம் என்னும் நூலும் புரையுடைத்தேயாகும்.

இதுகேட்ட சாரிபுத்தன், மேலும் வேறு ஏதும்பேச வழியின்றி, வாயடைத்து நின்ருன். தான் கூறியவற்றைக் கொண்டே, தன் கூற்றுக்களை மறுப்பது கண்டு, அவன் செய்வது அறியாது திகைத்தான். அப்போது சம்பந்தர் பெருமான் ''சமயம் என்பது அறநெறி பிறழாத பயன்மிக்க நல்லொழுக்க வாழ்க்கையேயன்றி, வெறும் அறிவுநெறி தழுவிய பயனில் வாதமும் நம்பிக்கைகளும் அன்று'' (Religion is not mere correct belief but righteous living ) என்று பலவகைகளில் அறிவுறுத்தி, அவனைச் சிந்தை திருத்தித் தெளிவுபெறச் செய்தருளினுர் என்று, சேக்கிழார் பெரியபுராணத்தின்கண் (செய்யுட்கள் 2817 முதல் 2827 வரை) கூறிச் செல்கின்ருர்.

**முடிவுரை :**

இப்பெரியபுராணப் பகுதியில், நாம் ஊன்றி நோக்கி உணர்ந்துகொள்ளத் தகுவன பற்பல உள்ளன. போதிமங்கையில் வாதம் நிகழ்ந்தபோது, சேக்கிழார் பெருமான் அதனை உடனிருந்து நேரே காண்கிலர். மற்று, இங்ஙனம் நிகழ்த்திருத்தல் கூடும் என்பதனையே, அவர் நுண்ணிதின் ஓர்ந்துணர்ந்து பாடியருளியிருக்கின்ருர். இஃது அவர்தம் நுண்மாண் நுழைபுலத்திற்குச் சிறந்தபெரும் சான்ருகும். பண்டைக் காலத்தில் ''ஒட்டிய சமயத்து உறு பொருள்வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறி'' இருந்து நிகழ்த்திய சொற்போர்த் திறங்களையே, சேக்கிழார் பெருமான் இப் பகுதியில் பொற்புற விளக்கியுள்ளார். சமய வாதங்கள் நேர்தல் கூடாது. நேர்ந்தால் அவற்றை எங்ஙனம் நிகழ்த்துதல் வேண்டும் என்பதனைத் தருக்க நெறிமுறைகளுக்கு ஏற்பவும், தத்துவ நூற் கொள்கைகளின் அடிப்படையிலும், சுவாமிகள் நம் உளங்கொளத் திறம்பட நிகழ்த்திக் காட்டியருளியிருக்கின்ருர்.

ஆசிரியர் அருள்நந்திசிவாசாரியர். தமது சிவஞானசித்தியாரின் பரபக்கப் பகுதியில் பல்வேறு மதக் கொள்கைகளையும் முறையே எடுத்துக் கூறி, அவற்றைப் பின்னர் மறுத்துரைத்து, நமக்குத் தத்துவஞான விளக்கம் செய்தருள்கின்ருர். அத்துறையில், அருள் நந்திசிவத்திற்கு ஓர் வழிகாட்டியாகவும், முன்னேடியாகவும் விளங்கியவர் சேக்கிழார் பெருமானேயாவர் எனலாம்.

பெரியபுராணத்தில், திருஞான சம்பந்தர் வரலாற்றில், சம்பந்த சரணுலயரால் மறுக்கப்பட்ட பௌத்தக் கொள்கை, மாத்தியமிகம் யோகாசாரம் வைபாடிகம் சௌத்திராந்திகம் என்னும் நால்வகைப் பிரிவுகளுள், சௌத்திராந்திகம் என்பதே யாகும். இதனையே, சித்தியார் பரபக்கப் பகுதியில் அருள்நந்திசிவம் விரிவாக விளக்கி மறுத்துரைத்து அருள்கின்ருர். எனவே ஆசிரியர் அருள்நந்தி சிவத்தின் தத்துவ விளக்கச் செந்நெறிக்கு வழிவகுத்துக் காட்டிய சான்ருேர் சேக்கிழார் சுவாமிகளே என்பதும்; சிவஞானசித்தியாரின் பரபக்கப் பகுதி அமைப்புக்கு அடிகோலிய அருள்நூல் பெரியபுராணமே என்பதும் நன்கினிது தெளியப்படும். சேக்கிழார் புகழ் வாழ்க! பெரியபுராணம் எங்கும் பரவுக!

**

# கைங்கரியச் செல்வம்

மகாவித்வான் ஸ்ரீமத் அண்ணங்கராசார்ய சுவாமிகள்
காஞ்சிபுரம்.

மாஞானிகளால் இருள் தருமாஞாலமென வழங்கப்பட்ட இந்நிலவுலகில் அகவிருளை யொழிக்கஅருட் கடலான எம்பெருமான் சாஸ்திரங்களாகிய பெருவிளக்கை ஏற்றி வைத்தருளினான். ‘‘கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பகமும் சொற் பொருள்தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து’’ என்ற திருமங்கை யாழ்வார் பாசுரம் இங்கு உணரத்தக்கது. பிரமாணங்களுள் முதன்மை பெற்ற வேதங்களும், அவற்றுக்கு வியாக்கியானமாகத் தோன்றிய இதிகாச புராணங்களும் மற்றும் ஆழ்வாராசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களுமான நூல்களெல்லாம் கடல் போல் விளங்குவன. அவற்றுள் அறிவிக்கப்படும் அர்த்தங்கள் கடலலைகள் போலவும், கடலில் நுண் மணல்கள் போலவும் எண்ணிறந்துள்ளனவெனினும், அவை மூன்றே வகுப்பில் அடைக்கப்பட்டுள்ளன; தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் என்பனவாம் அவை. எது பரம்பொருளோ அதுவே தத்துவமெனப்படும். பரம்பொருளின் பதவிணை சேர்தற்கு எது உபாயமோ அதுவே ஹிதமெனப்படும். பதவிணை சேர்ந்த பின் அனுபவிக்கப்படுவது எதுவோ அதுவே புருஷார்த்த மெனப்படும். சிறிது விரித்துரைப்பின், திருமகள் கொழுநனே தத்துவமென்றும், அவனடி சேர்தற்குச் சரணாகதியே உபாயமென்றும், அடி சேர்ந்து அத்தாணிச் சேவகம் புரிதலே புருஷார்த்தம் என்றும் தேறி நிற்கும்.

இவற்றுள் கடையான புருஷார்த்தத்தைப் பற்றியே இங்குச் சிறிது விவரணங்காட்ட எழுகின்றோம். ஈண்டு நாம் திருக்கச்சி நம்பியின் பெருமையை யனுபவிக்கப் புகுந்ததனாலும், நம்பிக்கு விளைந்த பெருமையெல்லாம் கைங்கரியச் செல்வத்தைப் பற்றியதே யாதலாலும், அதனை விவரித்துப் பேசுவதே நம்பியின் பெருமையனுபவமாகும். விஷ்ணு ஆலயங்களில் நாதமுனிகள் ஆளவந்தார் போல்வரான ஆசாரியர்கள் திருக்கோலம் திகழாத இடங்களிலும் திருக்கச்சி நம்பிகளின் திருக்கோலம் திகழக் காணா நின்றோம். அவர் விசேஷமாக நூல்களை இயற்றி உலகுக்கு உதவி புரிந்தவரல்லர். தேவப் பெருமாள் விஷயமாகத் தேவராஜாஷ்டகமென்னும் எட்டு சுலோகங்கள் கொண்ட சிறிய துதிநூல் ஒன்றை மட்டுமே இவர் பணித்துள்ளார். ஆகவே ‘தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்’ என்னும்படியான பெருமையைப் பற்ற இவர்க்குத் தேவாலயங்களில் திருக்கோலம் அமைந்ததென்ன இயலாது. ‘‘திருவாலவட்டம் திருக்கச்சி நம்பி’’ என்று உலகம் பரவிய வியபதேசம் பெற்ற இவ்வாசிரியர் கைங்கரியச் செல்வம் ஒன்றினாலேயே பெருமை பெற்று விளங்கி ஆலயங்களிலும் சிறப்புப் பெற்றாரென்பர் பெரியோர். ஆகவே இவ்வாசிரியர் திருவுள்ள முகக்குமாறு கைங்கரியத்தின் சிறப்பைச் சிறிது பேசுவோம்.

நாம் பெறவேண்டிய பெரும் பேறு பரமனடியிணையில் பணிவிடை செய்வதே யென்பதை மீண்டும் மீண்டும் விவரிக்கத் தேவையில்லை. பணிவிடை யென்பதும் கைங்கரியம் என்பதும், பரியாயமேயாகும். பணிவிடை யென்பது தென்மொழி; கைங்கர்யம் என்பது வடமொழி என்னுமித்தனையே வாசி. கிங்கர: என்னும் சொல்லின் மேல் ப்ரத்யய விசேஷம் ஏறியதனால் கைங்கர்யமென்கிற சொல் தேறுகிறது. ‘‘நியோஜ்ய கிங்கர ப்ரைஷ்ய புஜிஷ்ய பரிசாரகா’’ என்னும் அமர கோசத்தின் படி பணிவிடை செய்பவன் என்னும் பொருளைக் கொண்டது கிங்கர பதம். ‘கிஞ்சித் கரோதீதி கிங்கர: ’—ஏதேனும் ஒன்றைச் செய்து கொண்டிருப்பவனென்பது சொல்லின் மேல் தேறும் பொருள். அன்னவனுடைய செயல் கைங்கரியமெனப்படும். பகவான் திறத்திலும், அவனடியார்களான பாகவதர்திறத்திலும் செய்யும் பணிவிடையைக் கைங்கர்யமென வழங்குவர் பெரியோர்.

இங்கே ஒருசிறு விசாரம். கீழே உதாஹரித்த அமரகோசத்தில் ‘‘ஸேவாச்வவ்ருத்தி’’ என்று கூறப்பட்டது. ‘பிறர்க்கு உழைப்பது நாய் வேலை’ என்பது இதன் பொருள். மநு தர்ம சாஸ்த்ரத்திலும் நான்கா மத்யாயத்தில் ‘நாய் வேலையாகிய அடிமைத் தொழில் கொள்ளத் தகாதது’ என்று மறுக்கப்பட்டுள்ளது. அதைக் கண்ட ஒரு ரஸிகர் ‘‘ஸேவாச்வவ்ருத்திரிதியத் அபத்தம் தத்உதீரிதம், ஸ்வைராரீ க்வ சுநக; விக்ரீதா ஸு : க்வ ஸேவக:’’ என்றார். இதன் கருத்தானது—‘‘அடிமைப்படுவது நாய் வேலை யென்று மனுமஹர்ஷி கூறியது தவறு; ஒருவர்க்கும் அடிமைப்படாமல் யதேஷ்டமாகத் திரிகிற நாய் எங்கே? நாலு காசுக்கு உயிரை அறவிலை செய்திருக்கும் சேவகன் எங்கே? என்பதாம். இதனால் சேவகன் நாயினும் கடைப்பட்டவன் என்றதாம். இதைக் கொண்டு கைங்

கரியத்தை இழி தொழிலாக நினைக்கலாகாது. வயிற்றை வளர்ப்பதற்காகச் செய்யும் சேவகத் தொழிலே அங்குப் பழிக்கப்பட்டது என்பது மூலத்திலேயே ஸ்பஷ்டமாக வுள்ளது. ஸ்வரூப ப்ரயுக்தமாகவும், குணங்கண்டும் உரிய விஷயங்களில் தொண்டு செய்வது பழிப்புக்கு இலக்காமதன்று. ''கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானை யல்லாலறியாக் குலமகள்'' என்று ஸ்ரீகுலசேகராழ்வாரால் புகழப்பட்ட ஒரு பதிவிரதை தன் கணவனுக்குச் செய்யும் பல்வகைத் தொண்டுகளை இதிஹாஸ புராணங்களிற் கேட்பது தவிர, கண்கூடாகவும் காண்கிறோம். அங்ஙனமே சிஷ்யன் ஆசாரியனுக்குச் செய்யும் பணிவிடைகளும் பிரசித்தம். உபதேசரத்தின மாலையில் ''பின்பழகராம் பெருமாள் சீயர் பெருந்திவத்தில், அன்பதுவுமற்று மிக்கவாசையினால் — நம்பிள்ளைக்கானவடிமைகள் செய்அந் நிலையை நன்னெஞ்சே, ஊனமற வெப்பொழுது மோர்'' என்று மணவாள மாமுனிகள் அருளிய பாசுரம் அறியாதாரில்லை.

பகவத் ராமாநுஜர் அருளிச் செய்த வேதார்த்த ஸங்க்ரஹத்தின் முடிவில் 'நநுச' அத்யந்த சேஷதைவ ஆத்மந; அநவதிகாதிசயம் ஸுகமிதி உக்தம் பவதி; ததேதத் ஸர்வ லோக விருத்தம்'' என்று தொடங்கிப் பூர்வபக்ஷ ஸித்தாந்தங்கள் விசதமாகவரையப்பட்டுள்ளன. அங்கு ''ஸர்வம் பரவசம் துக்கம் ஸேவா ச்வருத்தி;'' இத்யாதிகளை உத்க்ஷேபித்து ஒருங்கே விட்டிருப்பதைக் காணவேணும். அதுவே முமுக்ஷுப்படி ரஹஸ்யத்தில் ''சேஷத்வம்துக்க ரூபகமாகவன்றோ நாட்டில் காண்கிறதென்னில்; அந்த நியமமில்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்கும் இருப்பு ஸுகமாகக் காண்கையாலே'' என்கிற ஸ்ரீஸூக்திகளால் நிரூபிக்கப்பட்டது.

துஷ்யந்த சக்ரவர்த்தியின் ஒரு செய்கையைக் கேளீர். இவன் வேட்டையாடச் சென்றபோது கண்வரென்னும் மகரிஷியின் ஆச்ரமத்திற் புகுந்து, அங்கு சகுந்தலையினிடத்தில் காதல் கொண்டான். அவள் வெய்யிலில் படுகிற தாபத்தைக் கண்டு மனமிளகிச் சொல்லுகிறான்- ''ஸம்வீஜயாமி நலிநீதள தாலவ்ருந்தை: ஸம்வாஹயாமி சரணுவுத பத்மதாம்ரௌ'' என்கிறான். அம்மா சகுந்தலே! தாமரையிலையை விசிறியாக்கி வீசட்டுமா? உன் கால்களை என் மடியிலிட்டுக்கொண்டு வருடட்டுமா? என்கிறான் இவனே சக்ரவர்த்தி. அவளோ ஒரு காட்டுப் பெண். இவன் இந்த வார்த்தை சொல்லுவதற்கு உரியவனா? என்று பார்க்க வேணும், அவள் பாலுண்டான உகப்பு சொல்லுவித்த தத்தனை. ஒரு காமுகனுடைய செய்கையையா உவமை கூறுவது? என்ன வேண்டா. ஸ்ரீவிஷ்ணு புராணம் (1-20-இல்) ப்ரஹ்லாதாழ்வானுக்கு அருள் செய்யத் தோன்றிய ஸ்ரீநருஸிம்ஹமூர்த்தி அந்தர்த்தானமடையப் போகிற சமயத்தில் வரம் வேண்டுகின்ற அந்த பாலபக்தன் 'யா ப்ரீதிர விவேகாநாம் விஷயேஷு அநபாயிநீ, த்வாதம் அநுஸ்மரதஸ் ஸாமே ஹ்ருதயாந் மாபஸர்ப்பது'' என்றான். அவிவேகிகளான பாமரர்களுக்குச் சிற்றின்பங்களிலே எவ்வகையான காதல் குன்றாது மேன்மேலும் பெருகிச் செல்லுமோ அத்தகைய காதல் எனக்கு உன்றன் சிந்தனையில் கொழுத்துவிட்டு வளரவேணுமென்பது மேலே காட்டின சுலோகத்தின் பொருள்; ப்ரஹ்லாதனோ நாலைத்து பிராயச் சிறுக்கன். சிற்றின்பத்தைச் சிறிதும் அறியாதவன். சிற்றின்பங்களிலே பாமரர்களுக்கு எத்தகைய காதல் விளைகின்றதென்பதையும் அறியகில்லான். இப்படியிருக்க, இவன் 'விஷயேஷு அவிவேகி நாம் யா ப்ரீதி:' என்று சொன்னது எங்ஙனம்? என்று விவேகிகள் விமர்சிக்க வேண்டும். துஷ்யந்த மஹாராஜன் போல்வாரான காமுகர்களினுடைய கதைகளைக் கேட்டிருந்து அதனால் சொல்லுகிறானென்ன வேணும். ஆகவே, பகவானுடைய கைங்கரியத்தில் பக்தர்களுக்கு உண்டாகும் அபிநிவேசத்திற்கு விஷயாந்தரங்களில் பாமரர்களுக்குண்டாகும் ருசியை நிதர்சனமாகக் காட்டுதல் ஏற்குமென்க. கீழே நாமெடுத்துக் காட்டின முமுக்ஷுப்படி ஸ்ரீசூக்தியில் 'உகந்த விஷயத்துக்குச் சேஷமாயிருக்கு மிருப்பு ஸுகமாகக் காண்கையாலே'' என்ற விடத்தை வியாக்கியானித்தருளா நின்ற மணவாள மாமுனிகள், பாமரர்களின் பணிவிடையையே நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தியைக் கொண்டு மூதலிக்கிறார் (திருவாய்மொழி 4.1.5) ''பணிமின் திருவருளென்றும் அஞ்சீதப்பைம் பூம்பள்ளி, அணிமென் குழலா ரின்பக் கலவியமுதுண்டார்'' என்ற பாசுரத்தின் ஈடு வியாக்கியானம் ஸேவிப்பது.


ஆக இவ்வளவால்-கைங்கரியம் செய்வதென்பது ஸர்வாத்மநா ஹேயம் என்று நினைக்கத் தக்கதன்று என்பதும், உகப்புக்கு இலக்கான விஷயத்தில் கைங்கரியம் பரமபோக்யமாகுமென்பதும் நிரூபிக்கப்பட்டது. இனி கைங்கரியத்தின் வகைகளை நிரூபிக்கிறோம். மாநஸிகம் வாசிகம் காயிகம் என்று கைங்கரியம் மூவகைப்படும். இவற்றுள், அது செய்யவேணும் இது செய்ய வேணும் என்று நெஞ்சால் பாரிப்பதான மாநஸிகம் இருக்கட்டும். வாசிகமான கைங்கரியம் சில அதிகாரிகளுக்கே உற்றதாகும். வேதம் வல்லவர்கள், திவ்யப்பிரபந்தமோதினவர்கள், ஸ்தோத்ர நூல்களை யதிகரித்தவர்கள் வாசிக கைங்கரியம் பண்ணவுரியார். இக்கைங்கரியம் எம்பெருமானுக்கு ப்ரீதி கரமேயாகும். இதைவிட மேம்பட்டது. காயிக கைங்கரியம். திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை, ஸ்ரீபாதம் தாங்குதல், சாமரை வீசுதல், குடைபிடித்தல் முதலியவை காயிக கைங்கரியமெனப்படும். இவற்றுள் ஒன்றான திருவாலவட்டம் பணிமாறுதலாகிய தொண்டைக் கடைப்பிடித்தவர் திருக்கச்சி நம்பி. ஆலவட்டமென்று விசிறிக்குப் பெயர். ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடிகள் ''தொடையொத்த துளபமுங் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னும் அடியன்'' என்றும் ''துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி'' என்றும் தாமே பணித்தபடி அர்ச்சைத் திருமேனியில் துளபமும் கூடையும் பொலிந்து தோன்றுவது போலத் திருக்கச்சி நம்பிகளும் ஆலவட்டமும் கையுமாகவே எங்கும் காட்சி தருவர். ஆசார்ய ஹ்ருதயத்தில் (1-85) ''புஷ்பத்யாக போக மண்டபங்களில் பணிப்பூவு மாலவட்டமும் வீணையுங் கையுமான அந்த

ரங்கரை'' என்ற விடத்தில் ஆலவட்டமும் கையுமான அந்தரங்கராக வ்யபதேசிக்கப் பெற்றவர் திருக்கச்சி நம்பிகள்.

காயிக கைங்கரியத்திற் காட்டிலும் தனத்தால் செய்யும் கைங்கரியம் சிறந்ததென்று சிலர் நினைப்பதும் சொல்லுவதுமுண்டு. அது எம்பெருமான் திருவுள்ளத்தால் சிறப்புற்றதாகாது. ஏனென்னில், நாம் சரீரத்தில் அதிகமான அன்பு செலுத்துகிறோமோ? தனத்திலே அதிகமான அன்பு செலுத்துகிறோமோ? என்று ஆராய்ந்து பார்ப்போமாயின், தனத்திற் காட்டிலும், சரீரத்திலேதான் மிக்க பிரேமம் காட்டுகிறோமென்பது கட்கூடு. இதைப் பலமுகமாக நிரூபிப்போம். பெருங்குற்றஞ் செய்தவொருவனுக்கு அரசன் 'ஆயிரம் ரூபா அபராதம், அது கட்டத் தவறினால் ஒரு வாரம் காவல்' என்று சிக்ஷை விதித்தால் தரித்திரனும் சரீரத்துன்பத்தை ஸஹிக்க மாட்டாமல் பணத்தைச் செலுத்துகிறானேயொழிய, 'ஆயிரம் ரூபா எதற்காகச் செலுத்துவது! ஒருவாரம் சிறையிலிருந்து வந்துவிடலாமே' என்று நினைத்துச் சிறையிருக்க இசைவதில்லை. பெருமாள் திருத்தேரிலெழுந்தருள, வடம் பிடிக்க வாருங்கள் என்றழைத்தால் 'வேணுமானால் பத்தெட்டு ரூபா தருகிறேன் கொண்டு போங்கள், ஒட்டன் வேலைக்கு நாம் வரோம்' என்பார்களேயன்றிப் பெருப் பேறான இக்கைங்கரியம் செய்ய இதோ வருகிறேன்'' என்று சொல்லி வடம் பிடிக்க வருவாரில்லையே.

சிலர் பணத்தைக் கனக்க மதித்து சரீரத்தை அலக்ஷியம் செய்வாருமுளர். திருவாய்மொழியில் (4.9.2) 'சாமாறும் கெடுமாறும்' என்ற விடத்து ஈட்டில் ஒரு கதை யருளிச் செய்கிறார் காண்மின்; ஒரு ராஜதுரோகியைத் தண்டிக்கும் அரசன் கையையும் காலையும் தெறித்து விடக் கட்டளையிட, ராஜபடர்கள் அப்படியே செய்தாயிற்று. உதிரமொழுக வொழுக வீடு வந்து சேர்ந்திருக்கிறான். சில நாழிகையில் உயிர் துறக்கப் போகிறான். உற்றாரும் உறவினரும் வந்து 'ஐயோ! இப்படியாயிற்றே'' என்று கண்ணீர் பெருக்கி வருந்தி நிற்க, தண்டனையுண்ட இவன் சொல்லுகிறான்-'ஐந்நூறு தா, ஆயிரம் தா' என்று சொல்லிக் காசு பறித்துக் கொள்ளாதே இவ்வளவோடே போனது உங்கள் ஆசீர்வாத பலமல்லவா? என்றானாம். முற்காலத்துத் தண்டனைகள் பலவிதமாயிருக்கும். தோசைக் கல்லைப் பழுக்கக் காய்ச்சி அதன் மேல் உட்காரச் சொல்லுவார்களாம். அந்தக் கல்லில் அரைத் துணியோடு உட்கார்ந்தாலும் கேள்வியில்லை. ஒருவன் துணி எரிந்து போனால் காசு நஷ்டமாகுமே யென்று அரைத் துணியை அவிழ்த்து வைத்துவிட்டு உட்கார்ந்தானும். இவன் சரீரத்தை அலக்ஷியம் பண்ணிப் பணமே கண்ணாயிருப்பவன். மற்றொரு கதையுங்கேண்மின். ஒரு குற்றவாளிக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. முப்பது ரூபா அபராதம் செலுத்த வேண்டியது; தவறினால் முப்பது சாட்டையடி பட வேண்டியது; அதுவும் தவறினால் மூன்று விரல்களையெடுக்க வேண்டியது என்று. எளிதாக முப்பது ரூபாயைச் செலுத்தி விட்டுப் போகலாமிவன்; பணம் கொடுக்கப் பின் வாங்கி முப்பது சாட்டையடிக்கு இசைந்து நின்றான். பத்தடிக்கு மேல் தாங்க முடியாமற் போகவே சிறிது நேரம் பொறுத்து மூன்று விரல்களை யெடுக்க ஸம்மதித்து நின்றான்; இரண்டு விரல்களை எடுத்தும் சகிக்க முடியாமற் போக முப்பது ரூபாயை வைத்திட்டுக் கும்பிட்டுப் போனான். சாட்டையடிகளும் பட்டு விரல்களையுமிழந்து முடிவாக, வேண்டா வெறுப்புடனே பணத்தைச் செலுத்தினான். இத்தகைய பணப் பிசாசுகளிடத்தில் பகவான் பணத்தாற் செய்யும் கைங்கரியத்தையே பேணுவன். பணத்தைப் பொருள்படுத்தாது சரீரத்தைக் கனக்கப் பேணுமவர்களிடத்தில் சரீரத்தைச் சிரமப் படுத்திச் செய்யும் கைங்கரியத்தையே பேணுவன். பொதுவாகச் சரீரத்தைச் சிரமப்படுத்திச் செய்யும் கைங்கரியமே உத்தமமாகக் கருதப்படும். ஆகவேதான் பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் (3) ''வாழாட்பட்டு நின்றீருள்ளிரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்'' என்று சொல்லியழைத்தார். இதில் மண் கொள்ளுகை மணங் கொள்ளுகை என்று இரண்டு கூறப்பட்டது. எம்பெருமானுடைய உத்ஸவங்களில் உடலால் சிரமப்பட்டுச் செய்யும் கைங்கரியம் மண் கொள்ளுகை. இஃது இடையூறின்றி நடைபெற வேணுமென்று அபிமானிக்கை மணங்கொள்ளுகை.

முடிவாக ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் கைங்கர்யமே பரமபுருஷார்த்தமாகக் கொள்ளப்பட்ட தென்பது உரைத்தக்கது. நம்மாழ்வார் திருவாய்மொழியில் நான்காம் பதிகத்தில் தூதுவிடத் தொடங்கும் போதே ''முன் செய்த முழுவினையால் திருவடிக்கீழ்க்குற்றேவல் முன் செய்ய முயலாதேன் அகல்வது வோ! விதியினமே'' என்றார். 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்' என்று கைங்கரியத்தையே பாரித்தார் பெரியாழ்வார். 'உனக்குப் பணி செய்திருக்குந் தவமுடையேன்' என்றார். ஆண்டாளும் திருப்பாவையில் 'குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது உனக்கே நாமாட் செய்வோம்' என்றாள். தனது திருமொழியிலும் ''கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் இப்பேறு எனக்கருள் கண்டாய்'' என்றும் 'பள்ளி கொள்ளுமிடத்து அடிகொட்டிடக் கொள்ளுமாகில் நீ கூடிடுகூடலே'' என்றும் அருளிச் செய்தாள். இவற்றை அடியொற்றி ஆளவந்தார் 'கதா அஹம் ஐகாந்திகநித்ய கிங்கர; ப்ரஹயிஷ்யாமி' என்றார். எம்பெருமானார் சரணாகதி கத்யத்தில் பிரார்த்தித்தது 'நித்ய கிங்கரோ பவாநி' என்று அரங்கனிடம் அருள் பெற்றதும் 'நித்திய கிங்கரோ பவ' என்றே. இவையெல்லாம் அனுஷ்டான சேஷமாகக் கண்டது திருக்கச்சி நம்பிகளிடத்திலேயாதலால், இவருடைய பெருமை ஒப்புயர்வற்ற தென்று தலைக்கட்டி நிற்கிறோம்.



அருள்மிகு

# வேண்டவராசி அம்மன்

திரு. த. இராதாகிருஷ்ணன்

''அன்னையைத் தெய்வமாகக் கொண்டாடு'' என்கிறது உபநிடதம். மற்ற தெய்வ வழி பாட்டைக் காட்டிலும் ஜகந் மாதாவான அம்பி கையை வழிபடுவது மிகவும் சிறந்தது. குழந் தைகள் எவ்விதமிருந்தாலும், பெற்ற தாய் அவர்களை ஒருக்காலும் கைவிட மாட்டாள். இதற்கிணங்க நெல்லிக்குப்பம் கிராமத்தில் குடி கொண்டு வேண்டுபவர்களுக்கு, வரம் ஆசியுடன் அருள் வழங்கி வருகின்ருள், அன்னை வேண்ட வராசி அம்மன். (வரம்+ஆசி=வராசி)

செங்கற்பட்டு மாவட்டத்தில் திருப் போரூர், திருக்கழுக்குன்றம், திருவிடைச்சுரம், அநுமந்தபுரம் ஆகிய தலங்களுக்கு அருகில் உள்ள புண்ணியத் திருத்தலம் நெல்லிக்குப்பம். நீர் வளத்தாலும், நில வளத்தாலும் குடி வளத்தாலும் சிறப்புற்ரோங்கி நிற்பது நெல்லிக் குப்பம். இந்தத் திருத்தலத்தைப் பற்றிய பழைய வரலாறு, மச்சபுராணம், வாமன புராணம், கூர்மபுராணம், லிங்கபுராணம் ஆகிய வற்றில் காணப்படுகின்றன.

நெல்லி வனம் என்று பழய புராணங்களில் குறிப்பிடப்படும் இந்த ஊர், கடலோரத்தி லுள்ளதாதலின் காலப்போக்கில் நெல்லிக் குப்பம் என மாறியிருக்கக்கூடும். ஏழுநாகக் கன்னியர்கள் பூசித்ததும், கந்தர்வ லோகத்தி லிருந்து வந்த கன்னியர்கள் பூசிக்கப் பெற்றது மான திருத்தலம். வேண்டிய வரங்களைக் கொடுக்கும் இந்த மகாசக்தியை வேண்டவராசி அம்மன் என்று பக்தர்கள் போற்றுகின்றனர்.

ஆதிசேடன், கார்க்கோடகன், வாசுகி, அனந்தன், குளிகன், பதுமன், மகாபதுமன் முதலிய நாகக் கூட்டங்கள் வழிபட்டதை இன் றும் காணும் வகையில் அம்மன் பாதத்தின் அருகில் இராஜ நாகங்கள் இருக்கும் காட்சியைக் காணலாம். திருக்கச்சூரிலிருந்து திருக்கழுக் குன்றம் சென்ற சித்தர்களும், யோகிகளும் இந்த ஆரண்யத்தின் வழியாகச் சென்றுள்ளனர்.

அருளாட்சி புரியும் அன்னை, தனது திருக் கரத்தில் ஒளி வீசும் திரிசூலத்தினுல், ஒப்பற்ற தனது தனித்தன்மையை விளக்குகிருள்.

சிரசில் ஏழு நாகங்கள் வீற்றிருக்கும் காட்சி ஏழுலோகங்களையும் காப்பவள், ஏழு நாடிகளில் உறையும் சக்தி, ஏழுபிறவிப் பவ்வம் போக்க வந்த சக்தி, எழு நாத சக்தி என்பதைப் புலப்படுத்துகின்றன. பஞ்சபதுமைகளைத் தனது பாதத்தின் கீழ் நிறுத்தியுள்ளதை நோக்கு மிடத்து, பஞ்சமகா பாதகங்களை நீக்கும் பரம சக்தி—பஞ்சாட்சரி—பஞ்ச கிர்த்தியங்களை நடத் தும் தேவி என்பதைப் புலப்படுத்துகின்றன.

அழகொழுகும் திருமுகம், அருள் ஒளி வீசும் திருக்கண்கள், மாணிக்க முடியமைந்தது போன்ற திருச்சென்னியைக் காணுங்கால், ராஜரீகம் புரியும் சக்தியாக விளங்குகின்ருள். போர்க்கோலம் கொண்ட துர்க்கையாயும், காப்பதில் காளியாகவும்—சிவசக்தியாகவும் விளங்குகிருள்.

இப்படிப்பட்ட உயர்ந்த சக்திக்கு, ஆடியில் விழா எடுக்க நினைத்தார்கள் பெரியோர்கள். நினைத்ததை நலமுற முடித்து வைத்தாள் அன்னை. அன்னையின் அருளாலும், அடியார்கள் பலரின் உதவியாலும் கடந்த 16 ஆண்டுகளாக விழா வெகு சிறப்புடன் நடைபெறுகிறது. 18-7-76 அன்று 17-வது ஆண்டு ஆடித் திரு விழா வெகு விமரிசையாக நடந்தது. காலையில் அம்மன் ஆலயத்தில், மகாகணபதி—பாலசுப்ர மணிய சுவாமி பிரதிஷ்டை—மகாகும்பாபி ஷேகம்—அம்மனுக்கு மகா அபிஷேகம் நடந் தது. மாலையில் சொற்பொழிவுகள், பக்திப் பாடல்கள் நடந்தன. திருவேற்காடு அருட்கவி ஸ்ரீதேவி கருமாரி தாசர் இயற்றிய அம்மன் தலபுராண மலரை, உயர்திரு ஆர். பத்மநாபன் ஐ.ஏ.எஸ். அவர்கள் வெளியிட்டார்கள்.

இந்த ஒப்பற்ற தேவிக்கு, கருணை மழை பொழியும் பரம்பொருளுக்கு, ஆடித்திருவிழாக் குழுவினர் திருவேற்காடு அருட்கவி ஸ்ரீதேவி கருமாரிதாசர் அருளினுல் புராணம் இயற்ற ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றனர். அன்னையின் கருணை வெள்ளம் தேங்கிக் கிடக் கின்றது.

சேரவாரும் செகத்தீரே.

# வாலி வழக்கு

(முற்றொடர்ச்சி)

'முதுபெரும்புலவர்'
திரு. புரிசை
சு. முருகேச முதலியார்

மேற்றோல் கருகி அளியப்பழுத்த ஒரு வாழைக்கனியில் பாயும் ஊசியைப்போல, ஐம்பெரும் பூதங்களின் ஆற்றலும் ஒருங்கே படைத்திருந்த வாலியின் மார்பகத்தில் இராமன் வாளி எளிதாகப் பாய்ந்தது; என முன்னர்க் கூறிமுடித்தோம். பேரிடியும் யுகமுடிவிற்கான பெருங்காற்றும் சாய்க்க மேருமலை சாய்ந்ததுபோல வாலி சாய்ந்தனன். தம்பியைப் பற்றி நின்ற வாலியின் கரங்கள் நழுவின. அவன் தப்பிப் பிழைத்தனன். ஆனால், வாலியின் கரங்கள் மார்பில் தைத்த வாளியைப் பற்றிப் பறிப்பதில் தளரவில்லை.

வாளியின் முனை பாயும்போது ஒருமுனை குத்தும். பின்புறம் இழுத்தால் இருமுனை அறுக்க அது வெளிவரும். வாலிக்கு அக்கடுங்கணை அவன் காலிலோ கையிலோ குத்தவில்லை, அது உயிருக்குறைவிடமாகிய நடுமார்பகத்தில் பாய்ந்தது. அக்கணையைத் தானே வலிந்திழுக்கும்போது அதனால் அவனுக்குண்டாகுந் துன்பம் எவ்வளவு? அவ்வளவையும் அவன் பொருட்படுத்தவில்லை. தனது மரணத்தையும் பொருட்படுத்தாத மனோ நிலையினனாக நின்றனன் வாலி. ''வீரனுக்குச் சேர்ந்த மரணம் சிறு துரும்பு'' என்ற பழமொழிக்கு இலக்கியமாக இலங்கிய அவன் அக்கடுந்தொழிலில் வெற்றி கண்டான். அதைக்கண்ட மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந்தார்கள் ''வீரரை யார் வியவாதார்''. பறித்தவாளியில் பொறித்த நாமத்தை நோக்கினன் ''அப்புகழோன்'' என்றனர் கம்பர். பேரடிபட்ட ஒருவனுடைய கண்கள் பஞ்சடையும். கையும் மெய்யும் கருத்தும் ஒருங்கே சோரும். அப்படியின்றி அவன் தனது வீழ்ச்சியைப் பொருள்படுத்தாது எய்த வீரனைப் பொருள்படுத்துகின்றனனென்றால், வாலியின் திண்ணிய எண்ணத்தில் விரைந்தோடும் வாளியும், பறந்தோடும் உயிரும் தமது ஓட்டங்கள் தடைப்பட அடைபட்டு நிற்கின்றவென்றால், அவ்வெங்கணைவீரன்மங்காப்புகழினனன்றோ?

வாலி கண்ணாரக் கண்டனன். ஒரு சிறந்த பெயரை. இது இராம என்ற நாமம். அவ்விராம வென்ற சொல் ஒருமகாமந்திரம். பாரத நாட்டில் வைணவப் பெருமக்கள் எட்டெழுத்தையும், சைவப்பெருமக்கள் ஐந்தெழுத்தையும் மூலமந்திரமாகக் கொண்டு போற்றிவருகின்றார்கள். இம்மந்திரங்களுக்குள்ள இரு தெய்வங்களுக்கும், பல்வேறு வடிவங்களும் வரலாறுகளும் உள. அவற்றிக்கெல்லாம் முடிந்த முடிபாகவும் சிறந்தவொன்றாகவும் விளங்குவன, அரி அரன் என்ற பெருநிலை. அந்த உச்சநிலையில் உருவமொன்றுமின்றி யொருபேரொளிப்பிழம்பாக நிற்கும். அதுவே உலகிற்கெல்லாம் செம்மையைச் செய்யும் செம்மை. செம்மையென்ற சொற்குரிய பொருள் நுனித்துநோக்கற்குரியது. அம்முடிவிற் காணும் ஒளி சிகப்பு கருப்புமானது. அதையே செம்மையென்கின்றனர். ''செம்மையே யாய சிவபதம்'' எனச் சைவப் பெருமக்களும், ''மூவுருவும் கண்ட போதொன்றும் சோதி முகிலுருவம் எம் மடிகள் உருவம்'' என வைணவப் பெருமக்களும் கூறிக் குதூகலிக்கின்றார்கள். நமது பாரத நாட்டில் இவ்விரு சமயங்களையும் வேற்றுமையின்றி நிறைந்த பற்றுதலோடு பரவிப்பயின்று பயன்பெற்று வாழையடி வாழையாக வளர்ந்து சிறந்துவரும் பக்தர்களும் உளர். அவர்கள் கொண்டிருக்கும் மூலமந்திரம் எட்டெழுத்தல்ல, ஐந்தெழுத்தல்ல, இரண்டெழுத்தே. அதுதான் ரா மா ரா மா வென்ற திருநாமம். இம்மூலமந்திரத்தால் உள்ளம் ஒருப்பாடுற்ற பெரியோர்கள் பலர். ''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை யெண்ணிக்கொண்டற்று'' என்றபடி, யெண்ணற்கரிய பெரியோர் அம்மூலமந்திரத்தால் காம வெகுளி மயக்கங்களைக் கட்டறுத்தவர்கள். அவர்களில் அரசியல் விளக்கத்தால் அனைத்துலகும் அறிய வெளிநின்ற வித்தகரே, நமது காந்தியடிகள்.

கம்பரை ஒருவெறுங் கவிவலவராகமட்டில் கருதிவிட முடியாது. அவர், ஆழ்வார்களால் அருளப் பெற்ற, திருவாய்மொழியோவென்று திகைக்கத்தக்க அரும்பெருங் கவிபாடிப் பரவசத்தில் ஆழ்ந்து விடுபவர்.

''நீயாதி பரம்பொருளும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும்நின் அடியவே அயலில்லை
தீயா ஒளித்தியால் வெளிநின்றால் தீங்குண்டோ
வீயாத பெருமாயை விளையாட்டும் வேண்டுமோ''

''காண்பார்க்கும் காணப்படுபொருட்கும் கண்ணாகி
மாண்பால் உலகனைத்தும் வயிற்றொளித்து வாங்குதியால்
பூண் பார்போல் நிற்றியால் யாதொன்றும் பூணாதாய்
ஆண் பாலோ பெண் பாலோ அப்பாலோ எப்பாலோ''

என்பனபோன்ற சாத்திரமும் தோத்திரமுமாகிய, தெள்ளத் தெளிந்த பாடல்கள், படிக்கும் நம்மையும் பரவசப்படுத்துகின்றன. அவ்வகையரும் பாக்களின் பயனுள் கம்பநாடர் கருத்து எவ்வளவு ஆழங்காற் பட்டிருக்கும் என்பதனை, உள்ளியறிந்த உத்தம வைணவப் பெருமக்கள், அவரை ஆழ்வாரேயென அழைத்து மகிழ்ந்ததில் அதிசயமென்ன?

இக்கம்பரின் கோட்பாடு ராமநாமத்தை மூலமந்திரமாகக் கொண்டு சைவ வைணவ வேற்றுமையில் சிக்காத வொரு பெருநிலையுடையது. இதனை ''அரனதிகள் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்கள் பரகதி சென்றடைவரிய பரிசேபோல்'' என விளக்கமாகக் கூறியிருத்தலாலும், சிவ விஷ்ணுக்களின் சிறப்புரைக்கவரும் பொழுதெல்லாம் தங்கு தடையின்றி அவ்வம்மூர்த்தங்களின் முன்னின்று உருகுவாராகிமொழிந்து வருவதனுலும், நன்கறியலாம். இக்கம்பர் தனது கதாபாத்திரங்களுள் பேரிடம் பெற்ற பெருவீரனுன வாலியும், தம்மைப்போல, அரியரரிடத்து வேற்றுமையின்றிப் பரவும் பக்தனென்பதனைக் காட்டியுள்ளார்.

வாலி திசைகள் தோறுஞ்சென்று நாள் தோறும் சிவபெருமான் தளிகளில் வழிபாடு செய்கின்றவன் எனவும், அவனே இராமனை மும்மூர்த்திகளுமொன்ருகிய ஒள்ளியன் பிறவி நோய்க்கு மருந்தானவன் எனத் தனது மனைவிக்கும் மகனுக்கும் உரைத்து ஒருப்படுத்தினனென வும் இசைக்கின்ருர். அவ்வரியாருடைய திருநாமம், உயிரோயும் நேரத்தில் நினைவு கூறவந்தது அவ்வாளியின் பயன் என விரிவு செய்து காட்டுவார்; வரும்பாடலில், இராமநாமத்தைக் கண்டானென்னது, ''இராமன் என்னும் நாமத்தைக் கண்ணிற் கண்டான்'' என விதந்து கூறுகின்றனர். இப்பெயர் இத்தசரதகுமாரன் தோற்றத்து அளவில் உள்ளதல்ல. அதற்கு முன்னரே பரவிப் போற்றவிருந்தது. அதனலேயே முனிவர் சமதக்கினியார் தமது திருக்குமரனை இராமன் என அழைத்து வந்தனர். அவ்விராமனே தவத்துயர்வால் பரமனிடத்தில் பரசு என்னும் படையைப் பெற்ற பின், பரசுராமனென விளங்கினுன். அப்பரசுராமனுக்குப் பிறகு தமது சற்சீடனுகிய தசரதப் பெருந்தகை பெற்ற பெருமகனுக்கு இத்திருப்பெயராகிய ராமன் என்னும் பெயரை இட்டழைத்தார் வதிட்ட மாமுனிவர். இத்தொன்மைச் சிறப்பெல்லாம் தோன்றுகின்றது அடுத்துவரும் கம்பர் கவியில். ஆனல், வரும் கவி ராமமந்திரப் பெருமையையும் அதுமரண காலத்து முன்னிற்கப்பெற்ற பக்தன் வாலியின் இலட்சிய வெற்றியையும் விளக்கித் தனித்து நிற்கும் பாடலாகின்றது. இப்பாடல் வாலி வழக்கிற்கு உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ யாதொன்றும் இயம்பும் வகையில் தொடர்புறவில்லையென்பதனை அறிஞர்கள் ஆழ்ந்துணரவேண்டும்.

'-மும்மைசால் உலகுக்கெல்லாம்
மூலமந்திரத்தை முற்றும்
தம்மையே தமக்கு நல்கும்
தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே மறுமை நோய்க்கு
மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்''

வாளியில் எழுத்தைக் கண்ட வாலி, தான் பெரிதாக மதித்திருந்த பெருந்தகை, உலகம் பழிக்கத்தக்க கொடுமைக்குக் கூட்டுறவானது நோக்கித் தான் வெட்கப்படுகின்றனன். தன் பழிக்கும் தான் நாணமுற்று, அதனேடன்றி, தனக்கு எதிர் பட்டார் சுமக்கும் பழிக்காகவும் தான் நாணமடையும் ஒருபெருமகனும் உளன். அவனே உலக நாணங்களுக்கெல்லாம் இருப்பிடமாகிய ஏந்தல். ''தன் பழியும் பிறர் பழியும் நாணுவான் நாணிற்கு உறைபதியென்னும் உலகு'' என்ற திருக்குறளை வாலிக்குச் சூட்டுகின்ருர் கம்பர்.

''இல்லறம் துறந்த நம்பி
யெம்மனேர் பொருட்டால் தங்கள்
வில்லறம் துறந்த வீரன்
தோன்றலால் வேத நூலில்
சொல் அறம் துறந்திலாத
சூரியன் மரபும் தொல்லை
நல் அறம் துறந்தது என்ன
நகைவர நாண் உட்கொண்டான்''

ஒரு கெட்டபிறப்பினுல் நல்லகுடிகெடுவதுண்டு, ஒரு நல்லவன் பிறந்தும் நல்லகுடி தீதடைகின்ற தேயென்பான், நம்பியென்றனன் வாலி. நான் முன்னர் கேட்டு மதித்தபடி ராமன் நல்ல நம்பிதான், அவன் சேரவொண்ணுதாருடன் சேர்ந்துவிட்டனன்; அப்படிக்கெடுக்க நின்றவன் என் தம்பி; என்பான்,'எம்மனேர் பொருட்டால் தங்கள் வில்லறம் துறந்த வீரன்' என்றனன் வாலி. தான் மதித்த மாண்பன்மனைவியைப் பிரிந்ததற்கு இரக்கமுற்று ''இல்லறந் துறந்த நம்பியென்றும், வெறுங்கையன் மேல் வாளியெய்த வில்லும் பழிபட்டது, பகையற்றவனைப் பகையாகக் கொண்டவன் மரபும் பழுதுபடுகிறதேயென வீரச் சிரிப்புற்று நாணும் வாலி வீரன், எனவும் தோன்றல் எனவும் உள்ளி உரைத்தனன்.

ஒப்பிலாதுயர்ந்தவன் இப்படி நடந்தால் தப்பொடு தாழ்ந்தவர் எப்படி யாவர்? ஒருக்காலும் முறைமாருத முதல்வன் என் பொருட்டுத் தன் முறைகெட முயன்றனனே யெனத் தனக்குள் சொல்லிச் சொல்லித் துன்புறுகின்றனன் வாலி. அப்போது அரசர்களை அறநெறி வழாமல் நிலை நிறுத்தத் தோன்றி அரசர்க்கரசனுன அவ்விராமன் வந்து தோன்றினுன். தவறு செய்தவர்கள், அத்தவறினுல் துன்புறுகின்றவர்களைக்காண நேரும் பொழுது, அவர் முகத்தில் யான் எப்படி விழிப்பது'' என வருந்துவது உலகியற்கை. தான் அவனது தம்பிக்குச் செய்ய வந்த உதவி காரணமாய்த் தனது உயிரும் ஊசலாட, அக்கடுமைக்காளாகியும், ஆளாக்கிய தன்னையும் தனது குடியையும் எப்பொழுதும் போலச் சிறப்பித்து உள்ளத்தோடு உரையாடிக் கொண்டிருக்கும் வாலியின் முகத்தில் எப்படி நாம் விழிப்பது, என்ற எண்ணமே சிறிதும் எழாமல் மிகப் பெருமிதத்தோடும் வந்து வெளிப்பட நிற்கின்றனனும் வேந்தன். கவியைப் பாருங்கள்

''இறை திறம்பினனுல் என்னை
இழிந்துளோர் இயற்கை எண்ணின்
முறை திறம்பினனுல் என்ன
மொழிகின்ற முகத்தான் முன்னர்

மறை திறம் பாத வாய்மை
மன்னவர்க்கு முன்னஞ் சொல்லும்
துறை திறம்பாமல் காக்கத்
தோன்றினான் வந்து தோன்ற''

அரசர்கள் தமது குடிகள் முறை மாறாதிருக்கும் வண்ணம் காக்கும் கடப்பாடுடையவர்கள். அவ்வரசருக்கெல்லாம் அரசன் அவ்வரசர்களையெல்லாம் அரசநீதி சொல்லும் முறைமாறாதிருக்கக் கண்காணிக்க வேண்டியவர். அத்தலைமையிடத்தில் அத்தொழில் புரிய ஒருவன் வேண்டுமேயெனத் தசரதன் தவம்புரிந்து பெறத் தோன்றிய தோன்றல் இந்த இராமன். இதுவரையெச் செயல்களிலும் உலகம் உவப்பப் பிற்படாது முற்பட்டொழுகி வந்த முதல்வன் தான். ஆனால், இப்பொழுது இன்று என்னைச் செய்த இச்செயல் வரை அடியோடு முறைமாறாகவே முடிய நின்றனன் எனக்கருத நிற்கின்றது இராமன் செயல். முறை பிறழ்வுகள் யாவை என நினைக்கலாம். இப்பாடலில் வந்து, தோன்ற எனவருவதால், இதுவரை அருகுவரவில்லை நெடுந்தொலைவில் நின்றனன் என்பதும், தோன்ற என்பதனால் மறைந்தேயிருந்தனன் என்பதும் தெரிகின்றது. ஆண்மையும் அறநெறியும் உள்ளவர்கள் ஆற்றலோடிருக்கும் ஒரு வீரனை அணுக வேண்டும். அப்பொழுதெல்லாம் அயலகத்தே நின்றதும், வெளிப்பட நிற்கவேண்டிய நேரத்தில் மறைவுறவைகியதும், நேர்மாறானமுறைகள்.

இராமன் தன்னைப் பல்லாற்றாலும் இகழும் இராவணனை நோக்கிப் போடவேண்டிய வீறு நடையைப், பலதுறையாலும் பலபொழுதும் புகழ்ந்தே நிற்கின்ற வாலி முன் போடவந்ததும் பெருமுரண். அன்றியும் அல்லல்பட்டு அழுவான்முன், போனதுபோக இனி அமைதியாக இருவென அருளுங்கரத்தைக் காட்ட வேண்டிய நேரம் இது. இப்பொழுது முன்னர் தாங்கி வரவேண்டியவிற்படையை உயிர்துடிக்கும் ஒருவன் முன்னே ஏந்தி வரவேண்டிய இயல்புதான் என்னே? என்ற சிந்தனைகளையெல்லாம் முற்படுத்துகின்றன,இங்குக் காணும் முறை திறம்பல்கள்.

''கண்ணுற்றான் வாலி நீலக்
கார்முகில் கமலம்பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி
வருவதே போலும் மாலை
புண் உற்றது அனைய சோரிப்
பொடியொடும் பொடிப்ப நோக்கி
எண் உற்றாய் என் செய்தாய் என்று
ஏசுவான் இயம்பலுற்றான்''

இராமன் மண்ணுலகத்தில் தாழ்ந்த கதியில் நின்று புண்ணிய வளர்ச்சிகளால் மேம்பட்டு இந்த உயர் நிலைக்கு வந்தவொருமகனல்ல. மிகவுயர்ந்த நிலையில் நின்று ''உழைத்த வல்வினைகளுக்கு ஊறுகாண்கலாது அழைத்து அழைத்து அயர் உலகினுக்கு அறத்தின் ஆறெலாம் இழைத்திழைத்துக் காட்ட ''இரங்கிவந்த ஏந்தல் மால். வெறும் மாலல்ல, திருவொடு திகழும்மால், திருமால். இத்திருமால் திருஷ்ட்டி பட்ட இடங்களெல்லாம் திருவொடு பொலிய வேண்டும். இப்பெருமகன் கண்கள் பட்டன சற்று நேரத்திற்கு முன்னர்தான் வாலியின் வடிவத்தின்மேலே. எங்கே? போர்க் களத்திலே. அவன் தம்பியோடு போர் புரிகின்றபொழுது. அப்பொழுது வாலியை ஒரு பேரழகனாகத் தான் கண்டனன். இராமன் வாலியின் அந்நிலைத் தோற்றத்தை வள்ளல் தனது தம்பிக்கும் வகுத்துரைத்து வியந்தனன்.

''அவ்வேலை யிராமனும் அன்புடைத் தம்பிக்கு ஐய
செவ்வே செலநோக்குதி தானவர் தேவர் நிற்க
எவ்வேலை எம்மேகம் எக் காலோடு காலவெம் தீ
வெவ்வேறு உலகத்து இவர் மேனியை மானும்?
என்றான்''

உலகத்திற்கு ஒன்றாகத் தேடியெடுத்துக் கூட்டினாலும் ஒருங்கே ஒருலகத்திலே ஒரே வீட்டிலே காணநிற்கும் வாலி சுக்கிரீவர்மேனிகளுக்கு நிகராகும் கடல் மேகம் கால் தீ யாதிய ஒன்றிலும் ஒப்பில்லையாம். இவையிராமன் காட்சியிற் கண்ட வாலியின் வனப்பு. இப்படித் திரண்டிருந்த வடிவத்தை உருண்டுவிழச் செய்துவிட்டு அக்கருணையற்ற செயலுக்குத் தனக்குத் துணையாக நின்று தூண்டுதல் (கணையை) செய்த வில்லையும் வெளிப்படுத்திக்கொண்டு, அழுகை வீட்டிற்கு அலங்கார உடையுடன் வருபவர்களைப் போல, தாழக்கிடந்து தவிப்பவன் முன்னே வாழச் சிறந்த வனப்பெலாம் காட்டி வருகின்ற வள்ளலை வாலி காண்கின்றான். அக்காட்சி வாலிக்குப் பெறாதுபெறும் பெருங்காட்சி தான். எப்படியிருந்தால்? உடன்பிறந்தார் ஒற்றுமையில் உலகத்தில் இணையில்லாத இந்தத் தலைவன், அந்தத் தனது காட்சியில் படும்பேறு பெற்ற இருவரையும் வாயுரை வழங்கி ஒற்றுமை செய்து வாழ்வித்திருந்தால் ஐயன் காட்சி அருட்காட்சிதான், அவ்வாய்ப்பில்லையே. மாளாத் தொல்லை கொடுத்தபின் தோற்றமளித்தால் என்ன செய்வது. காணப்பெற்றான் என்னாது ''கண்ணுற்றான்'' என்றனர். கண்டனன் தனது அல்லலையெல்லாம் விண்டாகவேண்டுமே, வாலிக்குப் பொழுதில்லையே, உயிர் போகத் துடிக்கிறதே, கொதித்துப் பொங்கும் கோதில் கருத்தெலாம், எடுத்துப் பரப்பியெதிர் வைக்கலானான் வாலி, ''எண்ணுற்றாய்'' என்றழைத்தான். முன்னே என்றும் எனது எண்ணத்திலிருப்பவனே. ''எண் உற்றாய்'' ''தென்சொற் கடந்தாய்'' ''வடசொற்கடற்கு எல்லை தேர்ந்தாய்'' ''எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும் நிலையாய ஏந்தலே, நீ நாலுமிரண்டுந் தெரியாதனல்லவே? நான்கை ஒன்றாகவிருத்தும் உணர்வின் தலைவன் நீ. இரண்டை ஒன்றாக வைக்க உதவ வேண்டாமா?'' தம்பியரின்றி உயிர் தனக்கு வேறிலையென'' வாழும் தம்பீ'' எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரிடை அம்பிடை தொடுப்பதோ? அருளாழியுடையவனே' எண்ணுற்றாய் என் செய்தாய்? என ஏசத் தொடங்கினான் வாலி. ஏசலென்பது பாசம் பதிந்த உள்ளத்தவர், கால மாறுதலால் கருத்து மாறாமலே எதிர்த்துப் பேசும் பேச்சு (மைத்துனக்கேண்மையர்வாசகம்)

''வாய்மையும் மரபும் காத்து
மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னே! நீ
பரதன்முன் தோன்றி னையே

தீமைதான் பிறரைக் காத்துத்
தான்செய்தால் தீங்கன் றுமோ?
தாய்மையும் அன்றி நட்பும்
தாமுடன் தழுவி நின்றேய்''

அழகான ஒரு உருவத்தைவனையலாம். வடிவில் திருத்தமிருப்பினும் திருத்திப் பொருத்திச் செம்மை செய்துவிடலாம். இச்செயல்கள் வல்லார்க்கெலாம் எளிய செயல்தான். ஆனுல், செயற்கையில் கண்ட சித்திரமனையவொரு புத்திரனைப் பெறுவதென்பது எளிதல்ல. ஆனுல் நீ,பெறப் பெற்றும்சிறப்புற்றும் வைகுகின்றனே. உலகத்திற்கு அரிய செயல் உங்கள் குடிக்கு எளிய செயலாக இருக்கின்றது. உன்னை யொத்தவொரு உருவத்தை வனையயாவரும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள். ஏன்? எவருந் தான் முழுதுங்காண முடிவதில்லையே ''தோள் கண்டார் தோளே காண்பார், தாள்கண்டார் தாளேகாண்பார், முழுதுங்காணுதவொரு உருவத்தை யெவர்தான் எப்படி வனைவது?'' ''ஒவியத்தெழுதவொண்ணுவுருவத்தாய்''. இப்படியழைக்கின்றான் வாலி. எப்பொழுது வள்ளலிடத்தில் வரப்பிரசாதம் பெறும் பொழுதா? அல்லவல்ல. கொலையுண்டு குப்புறக்கிடக்கும் பொழுது. என்னே அவனன்பு! என்னே அவன் வீரம்! ''படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்'' எல்லாம் மற்றுள அரசர்கள் விரும்பும் உடைமைகள். உங்கள் மரபார் ''அன்புடைமை அருளுடைமை அடக்கமுடைமை பண்புடைமை'' யாதிய உடைமைகளுக்கே பாடுபடுகின்றவர்கள் அல்லவா? அப்படியிருக்க, அம்மரபிற்கு மணிவிளக்காக வந்த நீ இப்படிச் செய்யாயே, செய்துவிட்டாய், காரணம் வேறிருக்குமெனவே கவல்கின்றேன். விளங்கிவிட்டது அது. தாய்க்குப்பின் தாரம் என்பர், அன்னம் ஊட்டும் அவ்வன்னம் இல்லை. அகப்பொருளுக்கெலாம் உரிய, அகப்பொருள் அகன்றது. அது ஆவியே அகன்றது போலாயிற்று. தன்னைத் தீண்டிய தறுதலையை, இந்திரன் மகனையும் மன்னிக்க வைத்த மான் விழியில்லை; இதங்கூறி அமைச்சியல் இயற்ற, என்செய்வாய்? உனது செயலெலாம் மயலாகி மாறின போலும் என வாலி இராமன் பட்டபிழைக்கு வழி வகுத்துவிட்டனன், அகலாத அன்புடைமையினுல். இக்கருத்தெலாம் காணும் கம்பர்,

''கோவியல் தருமம் உங்கள்
குலத்துதித் தோர்களுக் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணு
வுருவத்தாய்! உடைமையன்றே?
ஆவியைச் சனகன் பெற்ற
அன்னத்தை அமுதின்வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத்
திகைத்தனை போலும் செய்கை

எனவொரு அழகிய படைப்பில் அளித்தனர்.

''அரக்கர் ஓர் அழிவுசெய்து
கழிவரேல் அதற்குமாறுய்க்
குரக்கினத்து அரசைக் கொல்ல
மனுநெறி கூறிற் றுண்டோ?
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால்
எப்பிழை கண்டாய் அப்பா?
பரக்கழி இது நீ பூண்டால்
புகழையார் பரிக்கற் பாலார்?

திருடியவன் நிற்கவாசெய்வான்? திருட்டுடைமையோடு ஓடித்தானே போவன். அரக்கன் உனதுமனைவியைக்கொண்டுஓடினுன் என்று கூறுவது அநாகரிகமாம். அவ் இடக்கரை அடக்கி, ஓரழிவு செய்து கழிவரேல் என்று, பரக்கழி இது நீ பூண்டால் என்றுர். இது என்ற சுட்டிற் குரியது எது? பழி. அதுகழிபழியாம். இங்குகழியென்பதற்குநீண்டவென்பதுபொருள். பரக்கழி —பெரியதாய்நீண்டதாகிய பழி. பூணுதல் சுமத்தல். மிக நீண்ட பெரியபழியை நீ சுமந்தால் என்று இவ்வளவு கீழ்மையாக இராமனைப் பார்த்து வாலி ஒருக்காலும் பேசானும். இக் கடுங்கருத்துக்களை மிக நாகரிகமாகப் 'பரக்கழியிது நீ பூண்டால்' என இங்கிதமுற இசைக்கின்றுர் கம்பர். இது பதவி காலத்துப் பேச்சல்ல படுகளக்காலத்துப் பேச்சு.

''கூட்டொருவரையும் வேண்டாக்
கொற்றவ! பெற்ற தாதை
பூட்டியசெல்வம் ஆங்கே
தம்பிக்குக் கொடுத்துப் போந்து,
நாட்டொரு கருமஞ் செய்தாய்.
எம்பிக்குஇவ் வரசை நல்கிக்
காட்டொரு கருமஞ் செய்தாய்.
கருமம்மற்றிதன்மேலுண்டோ?

நீயோ சகாயம்வேண்டாத அசகாயசூரன். உனக்கு ஒருவன்கூட்டு, நீ ஒருவனுக்குப்பட்டத்தைக் கொடுக்கின்றனை, அவன் உனக்கு இந்தப் பட்டத்தைக் கொடுக்கின்றுன். இப்படிப் பட்ட செயல் இனியும் வருமோ என்னமோ வென்ற கருத்துக்களுக்கெல்லாம், இடமானது இப்பாடல்

''நன்னூற்கெல்லாம் நீ இறைவன். நீ செய்தது இது என்னில், இலங்கை வேந்தன் முறையல செய்தானென்று முனிதியோ?

என்றனன். மேலும்,

''இருவர்போர் எதிருங்காலை
இருவரும் நல்உற்றுரே
ஒருவர்மேல் கருணைதூண்டி
ஒருவர்மேல் ஒளித்துநின்று
வரிசிலை குழையவாங்கி
வாய்அம்பு மருமத்துஎய்தல்
தருமமோ? பிறிது ஒன்றுமோ?
தருகிலதென் உம்பக்கம்?


வீரம் அன்று,விதி அன்று,மெய்ம்மையின்-வாரம் அன்று, நின் மண்ணினுக்கு என் உடல்-பாரம் அன்று,பகை அன்று,பண்பு ஒழித்து-ஈரம் அற்று, இது என் செய்தவாறு நீ? என்றனன். உனது இல்லற இயலை எதிர்த்த பகைவனையழிக்க நீ யொரு துணைவனைத் தேடத்துணிந்தனை. மதங்கொண்ட மன்னவனையழிக்க அவனை அதஞ்செய்யும் அரியையல்லவோ (அரி-சிங்கம்) தேட வேண்டும். அதை விட்டு ஒரு யானையை யடக்க முயலையா தேடுவது என்றனன். இப்படிப் பல பேசிய வாலி, வீரனே உனது செயல் நூல் வழிப்பட்டதுமல்ல, உங்கள் மரபு வழிப்பட்டது மல்ல, நீ வதைத்தது ஒரு வாலியையென்றெல்லாம் எண்ணி விடாதே. உங்களுக்கே சொந்தமான தருமத்தின் வேலியை நீ அழித்துவிட்

டனை. ''வாலியைப் படுத்தாயலை மன் அற வேலியைப் படுத்தாய் விறல் வீரனே''. உனது தாரத்தைப் பிரித்தான் ஒருவன். அவன் உற்றவனல்ல, மற்றவன். உனக்கே சொந்தமாக, நீயே அதற்கு உற்றவனாக இருந்தும், உனது அரும்பெரும் பொருளாகிய வில்லின் வீரத்தைப் பிரித்தனை நீயே. அவனும் ஒளிந்து வந்துதான் செய்தனன். நீயும் ஒளிந்து நின்றுதான் செய்தனை. ஆனால், அவன் ஒரு குலமுனிவர் பால் பயிலவில்லை. அப்படி பயின்ற பெருமையன் நீயே. பயின்றது இதற்காகவோ? என்றனன். இவையெலாம் தரும்பாடல்கள்

*தாரம்மற் றொருவன் கொளத்தன் கையில்*
*பார வெஞ்சிலை வீரன் பழிப்பதே?*
*நேரும் அன்று மறைந்து நிராயுதன்*
*மார்பில் எய்யவோ? வில்இகல் வல்லதே?*

இப்படியெல்லாம் முறைமையில் மாறுபடாமல், பொங்கி வரும் ஆத்திரத்தையும் அடக்க முடியாமல், வாலி பலப்பல பேச அனைத்துங் கேட்டு நின்ற இராமன் பேச முற்பட்டான்.

—தொடரும்.



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குத்

தமிழக ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா

அவர்கள் வருகை தந்து வழிபடுதல்.

0000000000000000000

# கபிலர் பெருமான் கவித்திறன்

பேராசிரியர். திரு. செ. வேங்கடராமச் செட்டியார், சிதம்பரம்.

### முன்னுரை :

கபிலர் சங்க காலப் புலவர் பெருமக்களுள் தலைசிறந்த புலவர் ஆவர். 'கபிலரது பாட்டு' எனச் செய்யுட் கிழமைக்கு எடுத்துக்காட்டாக உரையாசிரியர்கள் காட்டுவது கொண்டு கபிலரின் பாட்டுக்கு அக்காலத்திலிருந்த சிறப்பும் புகழும் புலனும். பறம்பு மலைக்குரிய வள்ளல் பாரிக்கு, உற்ற நண்பராயிருந்தவர் கபிலர். சங்க நூல்களில் இவர் பாடியனவாகக் கிடைத்துள்ள பாடல்கள் எட்டுத் தொகையில் 237. பத்துப் பாட்டில் ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தப் பாடிய குறிஞ்சிப் பாட்டு ஒன்று. பாரியோடு பறம்பு மலையில் பல்லாண்டுகள் வாழ்ந்து பழகிக் குறிஞ்சி நிலத்தின் இயல்புகளையும், அந்நிலத்து மக்களின் வாழ்க்கை நெறிகளையும் நன்குணர்ந்தவராதலின், இவர் பாடிய அகத்துறைப் பாடல்களில் பல குறிஞ்சித் திணை பற்றியனவாகவே விளங்குகின்றன. குறிஞ்சித் திணையில் இவர் காட்டும் நுட்பங்கள் மிக்க சிறப்புடையனவாகும். அக நானூற்றில் கபிலர் பாடிய குறிஞ்சித் திணைப் பாடல் ஒன்றின் மூலம், அவர்தம் புலமை நலத்தை ஆராய்ந்து காண்போம்.

### அகநானூற்றுப் பாடல் :

தலைவியைக் களவில் கலந்த தலைவன் ஒரு நாள் சிறைப் புறத்தானுக-மதிற்புறத்தில் நிற்பவனாக அறிந்து கொள்கின்றாள் தோழி. தலைவன் களவு நீட்டிப்பதில் கருத்துடையவனாக இருக்கின்றானேயன்றி, விரைவில் வரைந்து கொண்டு இல்லறம் பூண இசைபவனாக இல்லை. இத்தகைய மன நிலையோடுதான் அன்றும் தலைவியைக் காண வந்துள்ளான். தோழி எத்தனை முறை சொல்லியும் அவன் மணந்து கொள்ளவில்லை. மீண்டும் மீண்டும் களவின்பத்தையே பெரிதாக எண்ணி வருகின்றான். களவில் கலப்பதில் தலைவிக்கு உள்ள இடையூறுகள் மிகப்பல என்பதை அவன் எண்ணியே பார்ப்பதில்லை. எப்படியேனும் இவனை விரைந்து வரைந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும் என்பது தோழியின் நல்லெண்ணமாகும். அத்தலைவன் மதிற் புறத்தில் வந்து நின்றிருக்கும் இந்த நேரத்தில் தன் கருத்தினை முடித்துவிட வேண்டும் என எண்ணித் தொடங்குகின்றாள். மதிற் புறத்தில் நின்றுள்ள தலைவன் காதில் விழும் வண்ணம் உரத்துப் பேசுகின்றாள். செவிலித் தாயோடு உரையாடுபவள் போல நாடகம் போடுகின்றாள். 'தலைமகன் சிறைப் புறத்தானைத் தோழி செவிலித் தாய்க்குச் சொல்லுவாளாய்த் தலைவன் கேட்பச் சொல்லியது' என்று இவ்வகைப் பாட்டிற்குத் துறை கூறுவர்.

''அன்னையே வாழி! யான் சொல்வதை விரும்பிக் கேள். தலைவியை யில்லது சொல்லி அலைக்காதே. இடியோடு கூடிய பெருமழை பொழிந்து அடங்கிய பின், இருள் மிக்க நள்ளிரவில் மின்னல் நிமிர்ந்து தோன்றினாற் போலக், கனவிய குழை யென்னும் காதணி காதில் ஒளி வீசப், பின்னிய நிலையிலிருந்து நெகிழ்ந்து அவிழ்ந்த நெறிபடக் கிளைத்த கூந்தலையுடையவளாய், மலையிலிருந்து இறங்கும் மயிலைப்போல மெல்லெனத் தளர்ந்து ஒதுங்கி, இவள் மதிலில் ஏறி இறங்கக் கண்டேன் என்று, இவள் செய்யாதன சொல்லி வருந்தாதே.''

இது தோழியின் பணிவான வேண்டுகோள். தன் தலைவியின் பொருட்டு இவ்வளவு இரக்கத்துடன் செவிலித் தாயை வேண்டிக் கொள்கின்றாள். இவள் வேண்டுகோளால் என்ன தெரிகிறது? தலைவி, நேற்று நள்ளிரவில் எல்லோரும் உறங்கும்போது எழுந்து சென்று மதிற்புறத்தில் நின்ற தலைவனோடு கலந்துரையாடி விட்டு அம்மதில் மேலூர்ந்து ஏறிப் பின் இறங்குகின்றபோது செவிலித் தாய் தன் கண்களால் கண்டுவிட்டாள் என்பதும், அவ்வாறு கையும் களவுமாகக் கண்டமையால் தலைவியை நெருங்கி இது 'நம் குடிக்கு ஏற்றதன்று' என்று, இன்று அந்த நிகழ்ச்சியைச் சொல்லித் தலைவியைச் சுடு சொற்களால் அலைக்கின்றாள் என்பதும் புலப்படுகின்றன. இவ்வாறு செவிலி தலைவியைச் சுடு சொல்லால் அலைக்கும்போது தான் தோழி இடை மறித்து 'அலையல் வாழி வேண்டன்னை' என்று அன்பால் தடுத்துக் கூறுகின்றாள் என்பதை நாம் உளங்கொளல் வேண்டும்.

இப்போது, தலைவிமேல் செவிலித்தாய் கூறும் குற்றச்சாட்டு யாதெனின்? கூதிர் காலத்தில் பெருமழை பொழிந்து அடங்கிய

பின் நள்ளிரவில் தலைவி தனியே எழுந்து சென்று தோட்டத்திலுள்ள மதிலைக் கடந்து சென்று மீண்டும் அம்மதில் மேல் ஊர்ந்து ஏறி இறங்கினாள். அவள் தலைவியே என்பதை அந்நல்லிருளிலும் கண்டுகொள்ள, அத்தலைவி காதிலணிந்த கனங்குழை மின்னலைப்போல நெடிது ஒளி வீசியது என்பது. இந்தக் குற்றம் செவிலித் தாய் தானே நேரில் தன் கண்களே சான்றாகக் கண்ட குற்றம். பிறர் பிறர் சொல்லக் கேட்டதன்று. இருள் செறிந்த நள்ளிரவில் தலைவியின் முகத்தை நன்கு அறிந்து கொள்வதற்கு அவள் அணிந்த கனங்குழையின் மின்னொளியே யுதவிற்று என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

இங்ஙனம் செவிலித் தாய் கண்ணாரக் கண்டதாகக் கூறும் தலைவியின் குற்றத்தை எப்படி மறுப்பது? தலைவியை அப்பெரும் பழியினின்றும் மீட்பதுதான் எப்படி? அறிவு சான்ற தோழிக்கு இது அரிதாகத் தோன்றவில்லை. ஒரு நொடியில் சிந்தித்துச் சொல்கின்றாள். ஒரு குற்றத்தை நிறுவும்போது அக்குற்றம் நிகழ்ந்த இடத்தின் இயல்பும், குற்றம் சார்த்தியவரின் இயல்பும், குற்றம் சார்த்தப் பெற்றவர் இருந்த சூழ்நிலையும் ஆகிய நான்கினை நன்கு ஆராய்ந்து பார்த்த பின்னரே உறுதியாக நிறுவ இயலும். வழக்கினை அணுகும் முறையும் இதுதான். முதலில் குற்றம் நிகழ்ந்ததாகக் கூறப்படும் தோட்டத்தின் இயல்பை எடுத்துக் கூறிச் செவிலியின் குற்றச்சாட்டு உண்மையன்று என்பதை நிறுவுகின்றாள்.

**தோட்டத்தின் இயல்பு :**

நம் தோட்டத்தில், அஞ்சும் தன்மையுடைய மலையில் பூத்த ஒளி வாய்ந்த பூவைச் சூடிக்கொண்டு, தாம் விரும்பிய உருவம் தாங்கிக் கொண்டு பேய்களும் வருவதுண்டு என்கின்றாள் தோழி. இச் சுருங்கிய சொற்களில் விரிந்த அரிய கருத்துக்கள் பொதுளியுள்ளன. தோழியின் இந்த வாதம் செவிலியின் குற்றச்சார்த்தினை அடியோடு மாற்றிவிடுகின்றது. நள்ளிரவில் பின்னலவிழ்ந்த கூந்தலொடு காதிலணிந்த கனங்குழை ஒளிவீசத் தன் மகள் மதில் மிசையேறி யிறங்கியதைக் கண்ணாரக் கண்டதாகக் கூறிய செவிலியின் கூற்றை அப்படியே ஒப்புக் கொள்கின்றாள் தோழி. ஆனால், அவ்வுருவம் தலைவியின் உருவம் அன்று. நம் தலைவியின் வடிவம் தாங்கிக் கொண்டு, சுடர்ப் பூவைச் சூடிக் கொண்டு வந்தது பேயாகத்தான் இருக்க வேண்டும். நம் தலைவியின் சுடர் மிக்க கனங்குழைபோலத் தோன்றியது, வேண்டுருவங் கொண்டு வந்த அப்பேய் சூடிய சுடர்ப் பூவேயாகும். மலையைச் சார்ந்துள்ள நம்மூரில் இத்தகைய நிகழ்ச்சிகள் புதியனவல்ல. என்றும் இயல்பாக நிகழ்வனவேயாகும். அன்னையே ! நள்ளிரவில் நீ கண்ட உருவம் தலைவியின் உருவமன்று. தலைவியின் உருவம் தாங்கி வந்த பேயின் உருவமேயாகும். அவ்வுருவத்தைத் தலைவியின் உருவமாக மயங்கி இப்படித் தலைவியை அலைக்கின்றாய்; என்கின்றாள் தோழி. 'தலைவியின் உருவத்தை நான் நன்கு பார்த்தேன்' என்று செவிலி சொல்ல இயலாதபடி, 'தாம் வேண்டுருவில் அணங்குமார் வருமே' என்று துடும் என ஓர் ஐயத்தை யுண்டாக்கி விட்டாள் தோழி. அப்படியும் இருக்கலாமோ? என்று செவிலி தன் குற்றச்சார்த்தினை நெகிழ விடுதல் இயல்புதானே.

இதனால் குற்றம் நிகழ்ந்ததாகக் கூறப்படும் தோட்டம் பேய்கள் நடமாடும் இடமாதலின், செவிலி கண்டது பேயின் உருவமாகவும் இருக்கலாம் என இடத்தின் இயல்பு கூறித் தலைவியைத் தோழி காத்தமை புலப்படும்.

**குற்றம் சார்த்தும் செவிலியின் இயல்பு :**

இனி, குற்றம் சார்த்தும் செவிலித் தாய் தலைவியிடம் ஐயப்பாடு கொண்டவள். ஐயம் காரணமாகக் கனவு தோன்றுதல் இயல்பு. அக் கனவுதானும் நனவில் உண்மையாகக் காண்பதுபோலவே தூங்குபவரை மருளப்பண்ணுவதும் உண்டு. அன்னையே, நீ உறக்கத்தில் கண்ட நனவு போன்ற கனவையே உண்மை நிகழ்ச்சியெனக் கருதித் தலைவியைக் குற்றம் செய்தவளாகக் கருதுதலும் இயல்புதான். இத்தகைய நனவு போன்ற கனவு இக்குற்றச் சார்த்திற்குக் காரணமாயின் கனவில் கண்ட நிகழ்ச்சிக்கும் தலைவிக்கும் யாதோர் தொடர்பும் இல்லை. 'தலைவி குற்றம் அற்றவளே' எனக் கனவு நிலை கூறித் தலைவியைத் தோழி காப்பாற்றுகின்றாள்.

**குற்றம் சார்த்தப் பெற்றவர் இயல்பு :**

இனி குற்றம் செய்தவளாகக் கருதப்படும் தலைவியின் இயல்பைக் காண்போம். தலைவி, விளக்கில்லாத இடத்தில் தனியாக இருக்க நேரும்போது நடுங்குகின்ற இயல்புடையவள். அதற்கு மேலும் மன்றத்தில் உள்ள வெண் கடம்ப மரத்திலுள்ள கோட்டான் குழறினாலும், அது கேட்டு மனம் நடுங்கி ஓடிவந்து பாதுகாவலான அறையில் நுழைந்து கொண்டு தாளிட்டுக் கொள்ளும் இயல்பினள். இவ்வளவு பயப்படுகின்ற தலைவி, வீட்டை விட்டு, இருள் செறிந்த நள்ளிரவில் மரங்கள் செறிந்துள்ள தோட்டத்திற்குத் தனியாகச் சென்று மதிலைக் கடந்து சென்றாள் என்பதும், மதிலிலூர்ந்து ஏறி இறங்கினாள் என்பதும் எப்படிப் பொருந்தும்? எனவே, தலைவி அக்குற்றத்தைச் செய்திருக்க இயலாது எனத் தலைவியின் அச்சத் தன்மை காட்டி அத் தலைவியைக் காத்தவாறு.

**வீட்டுச் சூழல் :**

தலைவி அச்சமிக்கவள் என்பதோடு, நம் வள மனையில் புலிக் கூட்டம் போன்ற நாய்களைக் கட்டவிழ்த்துக் விட்டுக் கொண்டு, முருகனைப் போன்ற சீற்றத்தையுடைய எம் தந்தையும் வெளியில் புறப்படாது தங்கியுள்ளபோது, இவள் இந்தக் குற்றத்தைச் செய்திருப்பாளா? புலி போன்ற நாய்களைக் கண்டும், முருகனைப் போன்ற சீற்றத்தினை யுடைய தந்தையைக் கண்டும் அஞ்சுவாளல்லளோ? எனவே, நம் வீட்டுச் சூழ்நிலையாலும் இவள் அக்குற்றத்தைச் செய்திருக்க இயலாது எனத் தம் வீட்டுச் சூழ்நிலை கூறித் தலைவியைத் தோழி காத்தவாறு.

தலைவியின் அச்சத் தன்மையும், வீட்டின் அச்சுறுத்தும் தன்மையும் நோக்கும்போது தலைவி குற்றச் சார்த்திற்கு உரியவள் ஆக மாட்டாள். பேயின் வேடத்தைக் கண் மயங்கியோ, கனவை நனவென மயங்கியோ தலைவியைக் குற்றம் செய்தவளாக நீ எண்ணி அலைக்கின்றாய் என்பதே உண்மையாகும். இனி அலைக்காதே. தலைவி குற்மறற்றவள் என்று தோழி தன்னறிவின் திறத்தால் — சொலல் வன்மையினால் தலைவியைக் குற்றமற்றவளாக நிறுவி விட்டாள். செவிலியும் தோழியின் கூற்றுக்கு மாற்றுக் கூற இயலாமல் தலைவியை அலைக்காது விடுகின்றாள் என்பதைக் கபிலர் உய்த்துணர வைத்துள்ளார்.

தோழி திறம்படக் கூறிய இச்சொற்கள் யாவும் தானே படைத்து மொழிந்ததேயாகும். மதிற் புறத்தனாகி இருக்கும் தலைவன் தோழியின் சொற்களைக் கேட்பானாயின் யாது நினைப்பான்? ''தலைவி என் பொருட்டு எத்துணை அல்லல்களை அனுபவிக்கின்றாள்! நேற்று நிகழ்ந்த நிகழ்ச்சிக்கு இன்று செவிலித் தாயால் தண்டனையுறுகின்றாள். தோழியின் அறிவுத் திறத்தால் தலைவி அப்பழியினின்றும் நீங்கினாள். இல்லையேல் என்னாகும்? இனி இவ்வல்லல் மிக்க களவின்பத்தை விடுத்து வரைவொடு வந்து பலர் அறியத் தலைவியை மணந்து கொண்டு பழியற்ற இல்லற இன்பம் துய்த்தலே நல்லது' என எண்ணி வரைவொடு வருவான் என்பதே, இத்தோழியின் படைத்து மொழிக் கிளவியால் உளதாகும் பயனாகும்.

158615

செவிலித் தாய் தலைவியை அலைக்கவும் இல்லை; செவிலித்தாயே அங்கில்லை. செவிலியில்லாத இடத்தில் செவிலியைக் கற்பனையாக வருவித்துக் கொண்டு, அச் செவிலி தலைவிபால் குற்றம் சார்த்தி அலைத்ததாகவும், படைத்துக் கொண்டு அச் செவியிலின் குற்றச் சார்த்துக்குத் தான் பதில் சொல்லித் தலைவியைக் காப்பதாகவும் படைத்துக் கூறும் தோழியின் திறமெல்லாம் கபிலரின் புலமைத் திறம் அன்றோ? கபிலர் காட்டும் தோழியின் வாதத்தைப் பார்க்கும் போது, ஓர் உயர்நீதி மன்றத்தில் ஒரு சிக்கலான வழக்கைப் பற்றி வாதிக்கும் பெரிய வழக்குரைஞரின் வாதம் போலன்றோ காணப்படுகிறது. மெய்யைப் பொய்யாகக் காட்டும் தோழியின் சொல்வன்மையை எப்படிப் பாராட்டுவது? இவ்வளவு அழகிய வாதத்தை வகைப்படுத்திக் கூறிய முறையும், அம்முறையால் தலைவி குற்றவாளியல்லள் என்று நிறுவும் முடிவும் காண்கின்றபோது தோழியின் அறிவு நுட்பத்தையா புகழ்வோம்? குறிஞ்சி பாடுதலில் வல்ல கபிலரின் நலத்தையன்றோ புகழ்வோம்! வள்ளல் பாரியின் அமைச்சராயிருந்த கபிலரின் வழக்காராயும் வன்மை இப்பாடலில் நன்கு புலப்படுவதைக் காணலாம்.

இவ்வகப் பாடலில் குறிஞ்சித் திணைக்குரிய மலை நிலமும், கூதிர்ப் பருவமாகிய பெரும் பொழுதும், நள்ளிரவாகிய சிறு பொழுதும், மயில் முதலிய கருப் பொருள்களும், புணர்தல் நிமித்தமாகிய உரிப் பொருளும், முருகனாகிய தெய்வமும் இயல்பாக அமைந்து அழகு செய்தல் காணலாம். இத்துணைக் கருத்துக்கள் எல்லாம் செறிய விளங்கும் கபிலரது பாட்டு :

“ உருமுரறு கருவிய பெருமழை தலைஇப்
பெயலான் றவிந்த தூங்கிருள் நடுநாள்
மின்னு நிமிர்ந்தன்ன கனங்குழை யிமைப்பப்
பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள்
வரையிழி மயிலி னொல்குவன ளொதுங்கி
மிசையூர் பிழியக் கண்டனெ னிவளென
அலையல் வாழிவேண் டன்னை நம்படப்பைச்
சூருடைச் சிலம்பிற் சுடர்ப்பூ வேய்ந்து
தாம்வேண் டுருவின் அணங்குமார் வருமே
நனவின் வாயே போலத் துஞ்சுநர்க்
கனவாண்டு மருட்டலும் உண்டே யிவள்தான்
சுடரின்று தமியளும் பனிக்கும் வெருவர
மன்ற மராஅத்த கூகை குழறினும்
நெஞ்சழிந் தரணஞ் சேரும் அதன்றலைப்
புலிக்கணத் தன்ன நாய்த்தொடர் விட்டு
முருக னன்ன சீற்றத்துக் கடுந்திறல்
எந்தையும் இல்ல னாக
அஞ்சுவள் அல்லளோ இவளிது செயலே.''

—(**அகநானூறு, 158.**)

## சான்ற இறைமாண்பில் தமிழ்

சட்டத்தில் **லத்தீனம்**; சால்பறத்தில் **ஈப்ருவம்**;
தட்பமிகு தத்துவத்தில் **சம்ஸ்கிருதம்**;—நுட்பமிக
ஆன்ற அறிவியலில் **ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்ச்** போல்,
சான்றஇறை மாண்பில் **தமிழ்.**

—**ந. ரா. முருகவேள்.**


# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் – காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள் கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு, வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள், தோல் பொருட்கள், வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள், இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள், அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட் களிலும்**

*மலிவு விலையில் கிடைக்கும்.*
*வாங்கிப் பயன் பெறுவீர்!*
*கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!*




வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

# நம்புகார் கலைக்கூடம்


## காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து!
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.


**இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!**

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009.



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.